இலவச வெளியீடு: GERMANY , ENGLAND பங்குனி.March. 2014

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 64

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.


Orientalische Textilien & Schmuck

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836


# ஜெனிவா பிரேரணையில் சர்வதேச விசாரணை இல்லை?

- அ.நிக்ஸன்-



சிறுகதை
பழைய காதலி!

இது பணக்கார முறை

பாலு மகேந்திரா

பங்குனி 8
சர்வதேசப் பெண்கள் தினம்

ஒரு லொறியின் வேகம்

கனடா தமிழர் தகவல் விருது 2014


T.T.S.Brothers GmbH&Co.KG
மாபெரும் மலிவு விற்பனை!
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 18

புதிய ஓர் அறிமுகம்
IP+ Sat Receiver உடன்
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 17

Gopara Gnanam
மாபெரும் மலிவு விற்பனை!
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 8ம் பக்கம்

StaR - Impex
Tel.: 0231/8602696



டோட்முண்ட் நகரில்

மாபெரும் ராஜமுத்திரை

S.K.Silks & Gold Paraadise

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை!

01.3.2014 முதல் 19.04.2014 வரை

குறிப்பிட்ட சேலைகள் அனைத்தும் 40% முதல் 60% வீதம் வரை கழிவு விலையில்
39€ சீக்குயின் சேலை ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்.
49€ பட்டுச்சேலை ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்.
சிறுவர்களுக்கான பஞ்சாபிகள் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்.
இமிட்டேஷன் நகைகள் அனைத்தும் 50% விலைக்கழிவில்

Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Mr.P.Sritharan.
Proprietor

என்றும் புதியது அழகின் இரகசியம் அது.



S.K.S

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




**Tel.: 0201/236925**
**Fax: 0201/236928**

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...**

Ria MONEY TRANSFER இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

**APIRAAMI ENTERPRISE**
Pferdemarkt 9
45127 ESSEN


# வெள்ளை மாளிகை விருது பெற்ற விஞ்ஞானி சிவலிங்கம் சிவானந்தனுக்கு

## கனடாவில் தமிழர் தகவலின் "வாழ்நாள் சாதனையாளர்" விருது






கனடாவின் மூத்த தமிழ் ஊடகமும் கனடியத் தமிழரின் அடையாளமுமாகத் திகழும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 23வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும், 23வது ஆண்டு விருது வழங்கும் வைபவமும் பெப்ரவரி மாதம் 15ம் திகதி ரொறன்ரோ நகர மண்டபத்தின் அங்கத்தவர் சபா பீடத்தில் நடைபெற்றது. வழக்கம்போல மலர் வெளியீட்டு நிகழ்வு தமிழிலும் விருதுகள் வழங்கும் நிகழ்வு ஆங்கிலத்திலும் இடம்பெற்றது.

மூத்த பத்திரிகையாளரும், அரசியல் விமர்சகருமான திரு எஸ். திருச்செல்வம் தமிழர் தகவலின் முதன்மை ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.
யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆண்டு மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில், தமிழரின் புலப்பெயர்வு பற்றி ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு ஒரேயொரு உசாத்துணை நூலாக தமிழர் தகவலே பயன்படுகிறது என்று தெரிவித்தார்.
இவ்வருடம் மொத்தம் எட்டுப் பேருக்கு 'தமிழர் தகவல்' விருதுகள் வழங்கப்பட்டு தங்கப்பதக்கம் சூட்டப்பட்டது. அமைச்சர் கிளென் முரே (Glen Murray) பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்புரையாற்றி விருதுகளை வழங்கி மதிப்பளித்தார்.

## இருட்டினூடாகப் பார்க்கும் ஒளிக்கீற்றுகளின் செறிவு!



Champion of Change

**விஞ்ஞானி, பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன்**

அமெரிக்க வெள்ளை மாளிகையில் 'மாற்றத்தின் வெற்றியாளன்' (Champion of Change) விருதினை அண்மையில் பெற்ற விஞ்ஞானி, பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தனுக்கு இவ்விழாவில் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.

சிக்காகோ இலினோய் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் இவர், இருட்டினூடாகப் பார்க்கும் ஒளிக்கீற்றுகளின் செறிவு பற்றி மேற்கொண்ட கண்டுபிடிப்பு அமெரிக்காவின் மருத்துவ தொழில்நுட்ப தேவைகளுக்கும், இராணுவ உபயோகத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

பேராசிரியர் சிவானந்தன் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது பெற்றபின் உரையாற்றுகையில், "தமிழர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தங்கள் வேரை மறவாது, அந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் வாழ வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

தமிழர் தகவலின் சிறப்பு விருதை இங்கிலாந்தில் பன்முகப் பணியாற்றிவரும் மருத்துவ கலாநிதி சீ. நவரத்தினம் பெற்றுக் கொண்டார். கலாநிதி பாலசிவகடாட்சம் (ஆய்வு மற்றும் வெளியீட்டுத்துறை), எழுத்தாளர் தேவகாந்தன் (இலக்கியம்), மாலினி பரராஜசிங்கம் (நடனத்துறை), பராசக்தி விநாயகதேவராஜா (இசைத்துறை) விருதுகளைப் பெற்றனர்.
இளையோர் சாதனை விருதுகளை ஜானகி காந்தரூபன் (இசைத்துறை), கேசிகன் பிரபாகரன் (விளையாட்டுத்துறை) பெற்றுக் கொண்டனர். மலர் வெளியீட்டு நிகழ்வு எழுத்தாளர் எஸ். ஜெகதீசன் தலைமையிலும், விருது வழங்கும் நிகழ்வு அரசியல் பிரமுகர் நீதன் சண் தலைமையிலும் இடம்பெற்றது.

## பழங்களின் மகிமை

**மாம்பழம்:** ரத்த அழுத்தம் சீராகும். குழந்தைகளும் சாப்பிடலாம். வைட்டமின் ஏ அதிகம் உள்ளது. ரத்தத்தை அதிகரித்து உடலுக்கு பலம் அளிக்கும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது.

**கொய்யா:** வைட்டமின் சி அதிக அளவில் உள்ளது. சொறி, சிரங்கு, ரத்தசோகை, இருப்பவர்கள் கொய்யாப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு பயன்பெறலாம். விஷகிருமிகளை கொல்லும் சக்தி கொய்யாபழத்துக்கு இருப்பதால் வியாதியை உண்டு பண்ணும் விஷக் கிருமிகள் ரத்தத்தில் கலந்துவிட்டால் அதை உடனே கொன்றுவிடும் சக்தி படைத்தது.

**பப்பாளி:** மூலநோய், சர்க்கரைநோய், குடல் அலற்சி, போன்றவற்றுக்கு சிறந்தது. வைட்டமின் ஏ அதிகம் உள்ளது. பல் சம்பந்தமான குறைப்பாட்டிற்கும் சிறுநீர்பையில் ஏற்படும் கல்லை கரைக்கவும் பப்பாளி பயன்படும். நரம்புகள் பலப்படும். ஆண்மைதன்மையை பலப்படுத்தும்.


மக்களின் மனம் கவர்ந்த ஸ்தாபனம்

**T.R.S Traders**



**மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்**


இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**T.R.S Traders**
Königswall-16 **(Am Hbf)**
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

**Tel.: 0231/160 494**
**Fax: 0231/165 6524**



Wilhelm Str.09
33602 Bielefeld



**Bielefeld நகரில்....** **3 in one**

**Lakshmi Jewellery &Silks**

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

Asia super markt

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்Lakshmi Jewellery &Silk

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்


தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de
Tel:0521 4283 510



**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 210



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Mrs.Sivajenani.Aravinthan.BSc.Hons
சிவஜெனனி .அரவிந்தன்
(சர்வதேசப் பெண்கள் தினத்ததை
முன்னிட்டு பங்குனி மாத சிறப்பு ஆசிரியர்)



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0157 88 77 31 56

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Company No: 8876276
Sanje: 07824618383


# ஜெனீவா பிரேரணையில் சர்வதேச விசாரணை இல்லை?

## தமிழ் மக்கள் எதிர்ப்பார்பது போலவும் சிங்கள மக்கள் அச்சமடையும் அளவுக்கும் பிரேரணை அமையவில்லை!

- அ.நிக்ஸன்-

தமிழ் மக்கள் எதிர்ப்பார்பது போலவும் சிங்கள மக்கள் அச்சமடையும் அளவுக்கும் பிரேரணை அமையவில்லை!

ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை சர்வதேச விசாரணைக்காகவா அல்லது இனப்பாடுகொலை குறித்த விசாரணைக்காகவா அழுத்தம் கொடுக்கும் என்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஆனால் பிரேரணை சமர்ப்பிக் கவுள்ள அமெரிக்காவிடம் இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் பெரியளவில் கரிசனை இருப்பதாக தெரியவில்லை.
அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை பொறுத்த வரை இலங்கை அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப் பட்ட ஒரு ஜனாநயக ஆட்சி என்ற கருத்துநிலை காணப் படுகின்றது.

### இரு வகையான சிந்தனை

மூன்றாவது தடவையாகவும் ஜெனீவாவில் சமர்ப்பிக்கப் படும் பிரேரணை இலங்கைக்கு கடும் அழுத்தங்களை கொடுக்கும் என தமிழத்தரப்பும் இது வழமையானதுதான் ஆனால் இலங்கைக்கு இது ஒரு கௌரவ பிரச்சினை என்ற கவலை சிங்களத்தரப்புக்கு உண்டு. இந்த இரு தரப்பு கருத்துக்களும் அமெரிக்காவுக்கு நன்கு தெரிந்த நிலை யில் மூன்றாவது தடவையாகவும் சமர்ப்பிக்கப் படவுள்ள பிரேரணை எந்த தரப்பை திருப்திப்படுத்த போகின்றது எனற கேள்விகளும் எழுகின்றன.

ஆனால் இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக் கூறப்படுவது, மத ரீதியிலான தாக்குதல்கள், ஊடகவி யலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்த விசாரணை களில் முன்னேற்றம் ஏற்படவில்லையென்பதைக் காட்டு வதாகவே பிரேரணை அமையும் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கூட்டிக்காட்டியுள்ளது. அதே வேளை இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலைச் செய்யப்போவதில்லையென்ற யதார்த்தத்தை ஒரு கட்டத்தில் சர்வதே சமுகம் புரிந்து கொள்ள வேண்டு மெனவும் சர்வதேச சமுகம் விசாரணையை மேற்கொள்ள வேண்டுமெனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான ஜோன் ஷிப்ரொன் தெரிவித்தார்.

ஆகவே தமிழ் மக்கள் எதிர்ப்பார்பது போலவும் சிங்கள மக்கள் அச்சமடையும் அளவுக்கும் பிரேரணை அமைய வில்லை. ஆனால் ஜோன் ஷிப்ரொன கூறியது போல சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் அக்கறை செலுத்தப்படுமானால் இரு தரப்பினரும் புரிந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளிப் படையாக பேச வேண்டிய நிலை ஏற்படலாம். இந்த நிலை இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழத்தரப்புக்கும் சங்கடத்தை ஏற்படுத்தும். சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்கள் சிலர் வடக்கு கிழக்கில் நிரந்தர அரசியல் தீர்வு என்பதை



விட மனித உரிமைகள் மீறல் தொடர்பான விசாரணை களை நடத்தி இரண்டு தரப்பையும் சர்வதேச அரங்கில் அவமானப்படுத்திவிட்டால் போதும் என கருதுகின்றனர்.

### போர்க்குற்ற விசாரணைகள்

வேறு சில மனித உரிமை அமைப்பகள் இனப்படுகொலை என விசாரிப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரத்தை பெற்றுக் கொடுக்கலாம் என விரும்பு கின்றனர். இனப்படுகொலை என்ற அடிப்படையில் பிரேரணை அமையும் அல்லது விசாரணை நடத்தப்படும் என்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்றே கூறலாம்.

அதேவேளை சர்வதேச விசாரணை ஒன்று நடை பெறுமானால் அது இறுதிக்கட்ட போரில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றியதாகவே அமையும் என்றும் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கிய அமெரிக்கா, பிரித் தானியா, இந்தியா, போன்ற நாடுகள் மீதான ஒரு விசாரணையாகவும் மாறிவிடலாம் என கருதுவதால் மேற்குலக நாடுகள் சர்வதேச விசாரணை என்பதில் பெரியளவில் அக்கறை காண்பிக்கவில்லை. ஆனால் இறுதிக்கட்ட போரில் இனப்படுகொலை, அதன்பின்னரான நில ஆபகரிப்பு போன்ற விடயங்களை முன்னிலைப் படுத்தினால் வடக்கு கிழக்கு பிரதேசம் பிரிந்து செல்வதற்கான கருத்து நிலை ஒன்றை சர்வதேசம் உருவாக்கிக் கொடுத்ததாக அமையும். ஆகவே எதனை தவிர்ப்பது எதனை சேர்த்துக் கொள்வது என்ற விடயங்களை கருத்தில் கொண்டுதான் மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

### ஐக்கியநாடுகள் சபையின்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனத்தில் இனப்படுகொலை என்பதற்கான விரை விலக்கணம் சரியான முறையில் கூறப்படவில்லை எனவும் ஆனாலும் ஆதரங்களின் அடிப்படையில் இனப்படுகொலை என்பதை நிறுவலாம் எனவும் ஜோன் ஷிப்ரொன் கூறியிருந்தார். இறுதிப் போர் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் இலங்கை தொடர்பான விடயம் எடுக்கப்படவிருந்த நிலையில் இறுதியில் அது தடுக்கப்பட்டது.

தொடர்ச்சி 6ம் பக்கம்




# சில்லறைகளை நீங்கள் பாதுகாத்தால், நோட்டுக்கள் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும்!






ராஜி-தமிழ்நாடு

அதெப்படி பணக்கரன் தொடர்ந்து பணக்காரணாகவே இருக்கிறான். ஏழை தொடர்ந்து ஏழையாகவே இருக்கிறான் (சிலவிதிவிலக்குகள் உண்டு) பணக்காரன் பாத்தப்பாராமல் செலவு செய்வன். அவனிடம் இருக்கிறது எனவே அவன் செலவுக்கு அஞ்சமாட்டான். இப்படி எண்ணம் உங்கள் மனதில் இருந்தால் அதனை உடன் மாற்றிக்கொள்ளுங்கள். மாற்ற முடியவில்லை என்றால் தொடர்ந்து வாசியுங்கள்.

ஒருவர் நியுயார்க் நகரத்தின் வங்கி ஒன்றில் நுழைந்து கடன் வழங்கும் அதிகாரியை பார்க்க வினவினார். அதிகாரியிடம், “நான் பிலிப்பைன்ஸ்க்கு வியாபார நோக்கமாக இரண்டு வாரங்கள் செல்கிறேன். அதற்காக 5000$ கடன் வேண்டும்” என்றார். அவ்வதிகாரி, “ம்ம்... அதற்கு நீங்கள் வங்கி பிணையமாக ஏதாவது கொடுக்க வேண்டுமே” என்று இழுக்க, இவர் விறுவிறுவென்று வெளியே சென்று தனது புது காதலியான ∴பெராரியின் சாவியை அதிகாரியிடத்தில் நீட்டினார். அதிகாரி இவரை ஏற இறங்க பார்த்துவிட்டு சாவியை பெற்றுக்கொண்டு கடனை வழங்கினார்.

இவர் வங்கியை விட்டு வெளியே சென்றபின், வங்கி அதிகாரிகளின் சிரிப்பொலி அடங்க வெகு நேரம் பிடித்தது - “எவனாவது 5000$ கடனுக்காக 2,50,000$ ∴பெராரியை ஒப்படைத்து செல்வானா?” . பின் வங்கியின் ஊழியர் அந்த சிகப்பு அழகியை அடிநில வண்டி நிருத்தும் பாதையில் சென்று சேர்த்தார்.
இரண்டு வாரங்கள் கழிந்தன. அந்த மனிதர் தன் பயணத்தை முடித்துக்கொண்டு வங்கி திரும்பி 5000கூ கடனையும், வட்டியாக 15.41$யும் சேர்த்தார். பரிவர்தனை முடிந்தபின், வங்கி அதிகாரி பொறுமை இழந்து மென்று முழுங்கி இவரிடம் கேட்டே விட்டார், ”ஐயா, இந்த பரிவர்தனை நன்றாக முடிந்தது குறித்து எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் தாங்கள் இல்லாத பொழுது தங்களை பற்றி விசாரித்ததில் நீங்கள் ஒரு மிக பெரிய கோடீஸ்வரர் என்பதை அறிந்தோம். எதற்காக நீங்கள் 5000$ கடன் வாங்க வேண்டும்?”.

அதற்கு அந்த கொடீஸ்வரர் நமிட்டு சிரிப்போடு நிதானமாக, ” சார், இந்த நியுயார்க் நகரத்தில் வேறு எங்கு என்னுடைய ஊர்தியை நான் 15.41$க்கு பாதுகாப்பாக நிருத்த முடியும் கூறுங்கள்?” என்றார்! வங்கி அதிகாரி ஸ்தம்பித்து தான் போனார்!!

செல்வந்தன் ஆவது பெரிய விஷயம் என்றால், அந்த நிலையை சாதுர்யமாக மேலாண்மை செய்வது மிகப்பெரிய விஷயம். இப்படித்தான் பல லஷாதிபதிகள் கோடீஸ்வரர்களாக மாறுகிறார்கள். திட்டம் சிறிதாக இருப்பினும் தன் ∴பெராரியை பாதுகாப்பதில் இவர் காட்டிய புத்திகூர்மை அபாரம். நான் சந்தித்த எல்லா கோடீஸ்வரர்களிடத்திலும் கண்ட ஒற்றுமை இது!
இந்த கதை நமக்கு எடுத்தரைப்பது சிறு பாடம் தான்:

**உங்கள் சில்லறைகளை நீங்கள் பாதுகாத்தால், நோட்டுக்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக்கொள்ளும்!!**




**தேவையான பொருட்கள்**

சிக்கன் 250-300 கிறாம்.
முட்டை 1
தக்காளி சொஸ் (tomato ketchup) 1 மேசக் கரண்டி
இஞ்சி. புண்டு விழுது அரை தேக் கரண்டி
சோயா சோச 1 மேசக் கரண்டி
நொருக்கிய செத்தல் மிளகாய் காரத்திற்கேற்ப
வெங்காயம் 1
எண்ணெய் 2 மேசக்கறண்டி
உப்பு தேவையான அளவு

செய்யும் முறை

சிக்கினை சின்ன விரல் நீளத்திற்கு மெல்லியதாக வெட்டி கழுவி வடியவிடவும். பின் ஒரு பாத்திரத்தில் சிக்கின், உப்பு, இஞ்சி, பூண்டு விழுது, சோயா சோஸ், நன்கு அடித்த முட்டை எல்லாவற்றையும் சேர்த்து பிரட்டி வைக்கவும்.
ஒரு பானில் (முட்டைபொரிக்கும் பான்) 1 மேசக் கரண்டி எண்ணெய் விட்டு பிரட்டிவைத்த சிக்கினை நன்கு சிவக்க பிரட்டி எடுக்கவும். இன்னுமொரு பாத்திரத்தில் வெங்காயத்தை மெல்லியதாக, நீளமாக வெட்டி, ஒரு துளி உப்பு சேர்த்து வெங்காயம் வதங்குவதற்கு தேவையான எண்ணெய் விட்டு அரைப் பதம் வதங்கியதும், நொருக்கிய செத்தல் மிளகாயையும (crushed chilli) சேர்த்து வதக்கி பொரித்து வைத்த சிக்கின், தக்காளி சோசையும் பிரட்டி பரிமாறவும்.

புவனம் தர்மரட்ணம்

## 31 வது நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 5.06.1925 மறைவு: 07.02.2014



நடராஜா. சரஸ்வதி

தாயத்தில்
துன்னாலையைப்பிறப்பிடமாகக்கொண்டவரும்
நடராஜா அவர்களின் அன்பு மனைவியுமான
நடராஜா சரஸ்வதி அவர்களின் 31 வது
நாள் நினைவு அஞ்சலி
தோற்றம் 5.06.1925 மறைவு: 07.02.2014
பாசமிகு அன்னையே
பாரினில் நம்மை வாழவைத்த தெய்வமே
நாம் உள்ள வரை எங்கள் நெஞ்சமெங்கும்
உங்கள் நினைவுகளைச் சுமப்போம்.
அன்புப் பிள்ளைகள் சத்தியமூர்த்தி சிவநேசன்
(யோ்மனி) சத்தியதேவி, சிவராமலிங்கம்
(இலங்கை)
தகவல்: ந.சிவராமலிங்கம். டோட்முண்ட்.

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள்
விரும்பும் இரகங்களில் பெற்றுக்
கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள்
மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும்
நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059



# குளிர் கால அதிசயங்கள்!


அஜல்யா









மனதை கொள்ளை கொள்ளும் இயற்கை காட்சி ஒன்றினை நோர்வே நாட்டில் கண்டு களித்தோம். இதன் விபரத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். நோர்வே என்று சொல்லும் பொழுது எல்லோருக்கும் ஒஸ்லோ பேர்கன் போன்ற நகரங்கள் தான் உடன் நினைவில் வரும். ஆனால் இக்கண்கொள்ளாக் காட்சி ஒஸ்லோ நகரத்திலிருந்து வடமுனை நோக்கி 1400கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ரொம்சோ (Tromsø) என்ற நகரத்தில் காணக்கூடியதாகவுள்ளது. இந்த இயற்கை நிகழ்வை வடமுனை ஒளி (Northern Lights) என்று கூறுவர்.

ஒஸ்லோவிலிருந்து நானும் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த எனது மைத்துணியும் பேருந்து அல்லது தொடரூந்து மூலம் ரொம்சோ நகரத்தை சென்றடையலாம் என விசாரித்தபொழுது இரு நாள் பனிப்பொழிவின் மத்தியில் பிரயாணம் எனக்கூறியதால், நாம் விமானம் மூலம் ஒன்றரை மணித்தியாலத்தில் அவ்விடத்தை சென்றடைந்தோம். ஆனாலும் எமது இலக்கை எட்டவில்லை. இந்த வடமுனைஒளியின் அபூர்வத்தோற்றம் இரவு நேரங்களில் தோன்றுவதால் இருளும் வரை காத்திருந்து மேலும் மூன்று மணித்தியாலம் நகரத்திற்கப்பால் பிரயாணம் செய்தோம். எமது அதிஷ்டம் நாம் சென்றவேளை வானம் மிகத்தெளிவாக இருந்ததால் வடமுனை ஒளியை பிரகாசமாய் காணக்கூடியதாக இருந்தது.





மேலேயுள்ள படத்தை பார்க்கும்பொழுது இது எப்படி உருவாகிறதென்று ஆச்சரியப்படுவீர்கள். இத்தோற்றமானது சூரியத்துணிக்கைகள் அதிகளவில் வீசும் பொழுது அவை பூமியின் காந்தப்புலத்தில் வந்து வட தென் முனை நோக்கி ஈர்க்கப்பட்டு வளிமண்டலத்திலுள்ள சிலவாயுக்களுடன் மோது கின்றபோது இப்படத்தில் காணப்படும் ஒளித்தோன்றல் உருவாகின்றன.

இவை வட முனையில் வடஒளி எனவும் தென்முனையில் தென்ஒளி என்றும் அழைக்கபடுகின்றன. வளி மண்டலத்திலுள்ள ஒக்சிசனின் பிரதிபலிப்புத்தான் கூடுதல் பச்சை நிறமாகக் காட்சியளிக்கின்றது. நைதரசன் மூலக்கூறுகளின் பிரதிபலிப்பால் சிவப்பு ஊதா போன்றநிறங்கள் உருவாகின்றன.

இந்த ஒளித்தோன்றலின் விஞ்ஞானப் பெயர் Aurora Borealis. இது ஒரு வரலாற்று அதிசய நிகழ்வாகும். இந்நிகழ்வை நாம் -11°C காலநிலையில் ஆறு மணித்தியாலம் செலவழித்து கண்டு பரவசமடைந்தோம்.

சரி, இயற்கை அதிசயம்தான் இவ்வலவு ஆச்சரியமாக இருக்கிறதே என்று பார்த்தால், ரொம்சோவில் இருந்து 400 கி.மீ. அன்மையில் உல்ல அள்ட்டா என்னும் நகரத்தில் ஒரு செயற்கையான அதிசய கட்டிடத்தை பார்த்தோம்.

சொறிஸ்னிவா ஈக்லூஹொட்டெல் (Sorrisniva Igloo Hotel) என அழைக்கப்படும் இந்த விடுதி பனி மற்றும் ஐஸ் ஆல் மட்டுமே அமைக்கப்பட்டது. உலகத்திலே பத்துக்கு மேல் இப்படி ஐஸ் ஹொட்டெல்ஸ் கனடா, நோர்வே, சுவீடன், ஃபின்லண்ட், சுவிஸ் போண்ற நாடுகளிலுண்டு. அவையில் இந்த சொறிஸ்னிவா ஈக்லு ஹொட்டெலும் மிக பிரபல்யமானது. நாம் அங்கே சென்றடைந்ததும் முதல் எம்மை மரத்தினாலான வீடுகளுக்கூடாக அழைத்து சேன்றனர்.

படுக்கை அறைகளைத் தவிர்ந்து அனைத்து அறைகளும் இங்கே உள்ளன.

நாம் எமது கடமைகளை முடித்துக் கொண்டு பின் வழியாக வெளியே சென்ற போது ஆச்சரியப்படும் வகையில் பனியிலான விடுதி அமைந்துள்ளது.

எஸ்கிமோ மற்றும் சாமி போன்ற ஆதிவாசிகளின் கலாச்சாரத்தினால் உருவாக்கப்பட்ட குளிர் நிலை வீடுகளை ஈக்லூஎன அலைப்பார்கள். இதன் அடிப்படையில் உருவான சிந்தனை தான் ஐஸ் ஹொட்டெல் விடுதிகள். சொறிஸ்னிவா கோடை காலங்களில் முழுமையாக உருகி விடும். உரிமையாளர் மீண்டும் மீண்டும் குளிர்காலத்தில் புதுமையான வடிவங்களில் விடுதியை உருவாக்குவர் என எமக்கு கூறினார். உள்ளே சென்றால் சுமார் -10°C இல் இருந்து -5°C இருக்கும். குடிக்கும் பாத்திரத்திலிருந்து படுக்கும் கட்டில் வரை எல்லாம் ஐஸ் தான்.

புதுமையை விரும்பும் சிலர் இங்கே திருமணம் புரிய வருவதால் சிறிய தேவாலயமும் தேன்நிலவு அறைகளும் பிரத்தியேகமாக பனி, ஐஸ் இனால் அமைக்கப்பட்டுள்ளது. விடுதியின் பிரமிப்பான தோற்றத்தால் எமக்கிருந்த பயம் நீங்கிவிட்டது. இருந்தாலும் இரவு படுக்கைக்கு சிறிய தயக்கத்துடன் ஐஸ் கட்டில் அருகே சென்ற போது அங்கே கலைமான் (Reindeer) தோலினாலான போர்வையும் படுக்கை உறையும் எம்மை ஆழ்ந்த உறக்கத்திற்கு அழைத்து சென்றன. எமது பயனம் உலகின் ஒரு துளியை ஆவது அறிந்த பயனுள்ள பயணமாக அமைந்தது.


## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

ASIJAH EUROPE

Tel: +31 511 76 00 06
Tel: +31 511 76 00 07
Fax: +31 511 76 00 08
Mobile: +31 6 12 17 55 99
புதிய முகவரி:
VOORSTRAAT 32
9291 CK KOLLUM
THE NETHERLANDS

Email: info@asijah.com
Email: asijaheurope@hotmail.com



ASIJAH EUROPE
Wholesale Distributors of finest Sri Lankan Grocery Foods

ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.

Web: asijah-europe.com

# காலை நீட்டி படுத்திருக்கும் நாம் சற்று கண்ணயர்ந்து காலை மடக்கி விட்டோம் என்றால்! போதும்!!

## மீண்டும் காலை நீட்டுவதற்கு அந் நிலம் நம்மிடம் இருக்காது

**வைத்திய கலாநிதி சி. சிவமோகன்**

அரசின் கொள்கைக்கு எதிராக நள்ளிரவில் கூட போராட வேண்டிய நிலைக்கு தமிழர்கள் நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.
இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மிச்சல் ஏர்வினுக்கும் வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி. சிவமோகனுக்கும் இடையில் கடந்த வாரம் மாலை வவுனியாவில் நடைபெற்ற சந்திப்பின் போதே வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் ஏர்வினிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பரம்பரை வழித்தோன்றலாக தமக்கு உரித்துடைய நிலம் இன்று தம்மிடம் இருக்குமா? என்ற பயத்தோடு தான் ஒவ்வொரு பொழுதுகளும் தமிழ் மக்களுக்கு புலருகின்றன. காலை நீட்டி படுத்திருக்கும் நாம் சற்று கண்ணயர்ந்து காலை மடக்கி விட்டோம் என்றால் போதும் மீண்டும் காலை நீட்டுவதற்கு அந் நிலம் நம்மிடம் இருக்காது பறி போயிருக்கும்.
அத்தகைய வேகத்தில் சிறீலங்கா அரசின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தமிழர் தாயக பிரதேசங்களில் தீவிரம் பெற்றுள்ளன.
அதி தீவிரமாக முனைப்பு பெற்றுள்ள தமிழர் பூர்வீக பண்பாட்டு பாரம்பரிய நிலங்களை பௌத்தமயமாக்கும் சிங்கள பேரினவாத அரசின் கொள்கைக்கு எதிராக நள்ளிரவில் கூட போராட வேண்டிய நிலைக்கு தமிழர்கள் நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். நிலம் எங்கள் வாழ்வுரிமை. எனவே நிலத்துக்கான போராட்டம் என்பது எங்கள் வாழ்வுரிமைக்கான போராட்டமாகும். இந்த போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளங்கிக்கொண்டு சர்வதேச நாடுகள் எமக்கான அங்கீகாரத்தை தர வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழ் குடிமகனதும் குடிமகளதும் எதிர்பார்ப்பாகும்.எங்களுடைய எதிர்பார்ப்புகள் ஈடேறும் வரை எமக்கான அங்கீகாரத்தை பெறும் வரை தமிழ் இனத்தினுடைய இருப்புக்கான போராட்டத்தை நாங்கள் நடத்துவது பயங்கரவாத செயலாகாது.



உங்கள் மண்ணில் நீங்கள் வாழ முடியாத உங்கள் மண்ணை நீங்கள் ஆள முடியாத ஒரு சூழலில் அது தொடர்பில் உங்களுடைய எண்ணங்கள் எதிர்வினையாற்றல்கள் எப்படியிருக் குமோ அதே உணர்வுடன் கூடியதே எங்கள் போராட்டமும். அதனுடன் ஒத்த காரிய கருமமாற்றல்களும் ஆகும்.
நிலம் எனும் கருவி இல்லாமல் இந்த உலகில் எந்த ஜீவராசிகளும் உயிர் வாழ முடியாது எனும் போது இதற்கு விதிவிலக்காக எப்படி தமிழ் மக்கள் மட்டும் உயிர் வாழ முடியும். பொழுது விடிந்ததும் படை பட்டாளத்துடன் நாங்கள் தென்னிலைங்கையில் நிலம் பிடிக்க ஒருநாளும் புறப்பட்டு போனதில்லை. இன்று நாங்கள் சிந்திக்கொண்டிருக்கின்ற கண்ணீர் எங்கள் உணர்வுகளுக்கு எல்லாம் சர்வதேச சமுகம் மதிப்பளிக்கும் என்று நாங்கள் பெரிதும் நம்புகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

---

### ஜெனீவா பிரேரணையில்.... 3ம் பக்கத் தொடர்ச்சி

இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவும் அதற்கு காரணமாக இருந்தது. ஏனெனில் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட்டால் சர்வதேச தலையீட்டுடன் தமிழர்களுக்கான அரசியல் தீர்வையும் முன்வைக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே இதன் பின்புலத்தில் இருந்து மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பாக ஆராய்வதானால் சர்வதேசம் தங்கள் பாதுகாப்பில் நின்று கொண்டுதான் இலங்கை தொடர்பான விடயத்தை நோக்குகின்றன. ஆனாலும் இனப்படுகொலை தொடர்பாக சர்வதேசம் கேட்கின்ற ஆதரங்களை கொடுக்க வேண்டியது தமிழத்தரப்பின் கடமை வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள் நான்குபோரும் இம்முறை ஜெனீவா மனித உாமைச் சபைக்கு விளக்கமளிக்கவுள்ளனா் என்றும் அறியமுடிகின்றது. கடந்த ஜெனீவா கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் மன்னாா் ஆயா் இராயப்பு யோசப் ஸ்கைப் மூலம் மன்னாரில் இருந்து ஜெனீவா மனித உாமைச் சபைக்கு விளக்கமளித்திருந்ததாா். இம்முறை வடக்கு கிழக்கு நிலைமை தொடா்பாக நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயா்கள் தகவல்களை அனுப்பியதாக ஆயா் இல்ல தகவல்கள் கூறுகின்றன.







# ஆழமான உண்மைக் காதல் கதை...

போச்சுடா... நேத்தும் நைட் ஃபுல்லா தூங்காம இருந்து சுடர் கூட கடலை போட்டியா ? சிவந்து போய் வீங்கியிருந்த சாகரின் கண்களைப் பார்த்துக் கேட்டான் வாசன். அந்த ஐடி அலுவலகத்தில் சாகரும் வாசனும் பக்கத்து பக்கத்து இருக்கைக் காரர்கள். பத்து வருஷநட்பு.

வாசனின் கேள்விக்கு வெட்கம் கலந்த சிரிப்புடன் சாகர் பேசினான். "ஆமா மச்சி... அவள மறக்க முடியல. அவளும் என்னை மறக்க முடியாம ரொம்ப கஷ்டப் படறா. காதலை மறக்கிறது ஈசி கிடையாதுடா"
டெய்லி நைட் தூங்காம ஃபேஸ்புக்கை சுரண்டிட்டே இருந்தா எப்படிடா மறக்க முடியும் வெண்ணை ! அவளைத் தூக்கிப் போட்டுட்டு மத்த விஷயங்களைப் பாக்க வேண்டியது தானே ! அவ என்ன உன்னை நினைச்சுட்டா இருக்கா ? கனடால போய் செட்டில் ஆகல ?
டேய் அவ கனடால இருந்தாலும், கர்நாடகால இருந்தாலும் என் மனசுல எப்பவுமே இருப்பாடா...

ஐயோ.. லவ் பண்ணும்போ தான் டயலாக் டயலாக்கா அவுத்து உட்டு சாகடிச்சே. இப்போ பிரிஞ்சப்புறமுமாடா ? போதும்டா.. அவ மகேஷ்வரனைக் கல்யாணம் பண்ணி கனடால செட்டில் ஆகி ஆறு வருஷம் ஆச்சு. அவளோட பொண்ணுக்கும் இப்போ அஞ்சு வயசாச்சு.

இதுல என்ன தப்பிருக்கு. அவ கனடால இருக்கா, நான் இங்கே இருக்கேன். சும்மா பேச்சு தானே !
பேச்சு இல்ல மச்சி. மனசு. மனசுல என்ன இருக்கோ அது தான் செயல்ல வரும். மனசுல சுடரை நீ வெச்சிருந்தா மாலதியோட வாழுற வாழ்க்கை நல்லா இருக்காது. நீ கவனிக்க வேண்டியது உன் மனைவியை.
போதுண்டா உன் அட்வைஸ்சுக்கு. நீயும் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிகிட்டவன் தானே. ஏதோ லவ்வே பண்ணாத மாதிரி பேசறே. குடும்பத்தையெல்லாம் நான் நல்லாதாண்டா பாத்துக்கறேன் என்ன குறைவெச்சிருக்கேன்.
என்ன ம்ம்... வாயில நல்லா வருது. உன் பொண்ணோட ஸ்கூல் புராஜக்டை பண்ண வேண்டியிருந்தப்போ, டைமில்லை, புண்ணாக்கு இல்லைன்னு புலம்பினே.

சுடர் கூட கடலை போட டைம் இருக்கோ ?
சரி...சரி.. அந்த பேச்சை விடு.. இப்போ என்ன விஷயம் சொல்லு...
ஒண்ணும் இல்லை சும்மா தான் வந்தேன். பேசிக்கொண்டிருக்கும் போது சாகரின் மானிட்டரில் சேம்டைம் சேட் வின்டோ டொய்ங் என்று திறந்தது.
"சாகர் ஒரு நிமிஷம் இங்கே வரமுடியுமா பிளீஸ் " மானேஜர் கூப்பிட்டார்.

"கண்டிப்பா" என்று பதில் தட்டிவிட்டு சாகர் எழுந்தான்.
வாசன் சாகரின் கம்ப்யூட்டர் வின்டோவைப் பார்த்தான். டாஸ்க் பாரில் ஃபேஸ் புக் திறந்திருந்தது. கிளிக்கினான். அப்படி என்ன தான் சுடர் கூட பேசறான்னு பாப்போமே என்று நுழைந்தான். சுடரோடு சாகர் பேசிய சேட் ஹிஸ்டரி அனுமர் வால் போல நீண்டு கிடந்தது.

ஹாய் சுடர்.. எப்படியிருக்கே.
ம்ம்.. இருக்கேன் நீங்க ?
ஏதோ இருக்கேன்.. நினைவுகள் வாழவைக்குது.
ம்ம்ம்...
வீட்ல எல்லாரும் நலமா ?
யா... இருக்காங்க.. உங்க வீட்ல..
ம்ம்... இருக்காங்க...
நைட் தூங்காம சேட் பண்றீங்க ?
உன்னை மறக்க முடியுமா ? உலகத்துல எல்லாத்தையும் விட முக்கியமானது உன்கூட பேசறது தான் சுடர். அது தான் உலகத்துல என்னை வாழ வைக்குது.
ம்ம்ம்... ஐ யாம் மிஸ்ஸிங் தோஸ் டேஸ்
ம்ம்ம்... அந்த அருகாமை, அந்த நாட்கள் எல்லாம் சொர்க்கம்.
ம்ம்.... ஆமா...
ஞாபகம் இருக்கா.. அந்த வேலன்டைன்ஸ் டேக்கு.. முதல் முதலா....

வாசன் கடகடவென வாசித்தான். சேட் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக காதல், கவர்ச்சி, ஆபாசம் என தாவ வின்டோவை மூடினான். டெஸ்க் டாப்பில் ஒரு நோட் பேட் தென்பட்டது. பாஸ்வேர்ட்.டெக்ஸ்ட் திறந்தான். சாகரின் மின்னஞ்சல்கள், ஃபேஸ்புக் எல்லாவற்றுக்குமான ஐடி மற்றும் பாஸ்வேர்ட்.

மடப்பயல் என்று நினைத்து கொண்டிருந்தவனின் மனதில் சட்டென ஒரு பொறி. ஃபேஸ்புக் ஐடி, பாஸ்வேர்ட்களை மனதில் பதித்துக் கொண்டு ஃபைலை மூடினான். இன்னும் சாகர் திரும்பி வரவில்லை. அன்று இரவு, மணி பதினொன்று. வாசனின் போன் அடித்தது. மறுமுனையில் சாகர். சாகரின் குரலில் வண்டி வண்டியாய் பதட்டம் தெரிந்தது.
மச்சி.. என்னோட டேட்டா கார்டைப் பாத்தியா ? பேக்ல போட்டிருந்தேன் காணோம். நெட் கனெக்ட் பண்ண முடியல.
ஓ.. இல்லையேடா... ஆபீஸ்ல விட்டுட்டியா தெரியலையே !
தெரியலடா மச்சி.. சே..நெட் கனெக்ட் பண்ண முடியலடா.. சுடர்வேற வெயிட் பண்ணிட்டிருப்பா... இன்டர்நெட் சென்டரெல்லாம் மூடியிருப்பான்...

டேய்... இவனே....போய் தூங்குடா.. ம.... எல்லாம் நாளைக்கு பாத்துக்கலாம். சொல்லிக் கொண்டு போலிக் கோபத்துடன் போனை ஆஃப் பண்ணினான் வாசன். அவனுடைய கையில் சாகரின் டேட்டா கார்ட் சிரித்தது. அவனுடைய லேப்டாப்பில் சாகரின் ஃபேஸ் புக் பக்கம் சுடருக்காகக் காத்திருந்தது !
அரை மணி நேரத்துக்குப் பின் சுடர் பச்சை விளக்குடன் ஆன்லைனில் வந்தாள்.
கொஞ்ச நேரம் வாசன் அமைதிகாத்தான். சுடரே பேச்சை ஆரம்பித்தாள்.
ஹாய் சாகர்... எப்படி இருக்கீங்க....



பேசினான். சுமார் ஒரு மணி நேரம் பேசினார்கள். மறுமுனையில் இருப்பது வாசன் என்பதை சுடர் அறியவில்லை. சாகர் என்று நினைத்து பேசிக்கொண்டிருந்தாள்.
மறு நாள் மதிய வேளையில் பதட்டத்துடன் ஓடி வந்தான் சாகர்.
போச்சுடா... நேத்தும் நைட் ஃபுல்லா தூங்காம இருந்து சுடர் கூட கடலை போட்டியா ? சிவந்து போய் வீங்கியிருந்த சாகரின் கண்களைப் பார்த்துக் கேட்டான் வாசன். அந்த ஐடி அலுவலகத்தில் சாகரும் வாசனும் பக்கத்து பக்கத்து இருக்கைக் காரர்கள். பத்து வருஷநட்பு.

வாசனின் கேள்விக்கு வெட்கம் கலந்த சிரிப்புடன் சாகர் பேசினான். "ஆமா மச்சி... அவள மறக்க முடியல. அவளும் என்னை மறக்க முடியாம ரொம்ப கஷ்டப் படறா. காதலை மறக்கிறது ஈசி கிடையாதுடா"
டெய்லி நைட் தூங்காம ஃபேஸ்புக்கை சுரண்டிட்டே இருந்தா எப்படிடா மறக்க முடியும் வெண்ணை !
தொடர்ச்சி 9ம் பக்கம்

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி
எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை
திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# இனி கணவன் மனைவியை அடிக்கலாம்! ஆப்கானிஸ்தானின் அதிரடிச் சட்டம்?

ராஜி



பங்குனி 8 உலகெங்கும் பெண்கள் தினம் கொண்டாடும் வேளை. சாண் ஏற முழம் சறுக்கு வதாக உலகில் அங்காங்கே பெண்கள் வலு விளக்கும் வண்ணம் புதிய சட்டங்களும், செயல் களும் அரங்கேறிய வண்ணமே உள்ளன.

ஆப்கானிஸ்தான் நாட்டின் புதிய அதிரடி சட்டம் - அந்நாட்டின் ஆண்கள் தங்கள் மனைவி, குழந்தை மற்றும் சகோதரிகளை தாக்கினால் நீதிமன்றம் எந்தவித தண்டனையும் வழங்காது! குற்றம் சாட்டப்பட்டவரின் உறவினர்கள் அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கக்கூடாது என்பது!

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறை வரையறையின்றி நடக்கிறது. பாராளுமன்றத்தின் அனுமதி பெற்று, குடியரசு தலைவர் ஹமித் கர்சாயின் ஒப்புதலுக்காக காத்திருக்கும் இச்சட்டம் பெண்களை மேலும் பலகீனப்படுத்துகிறது.



சாகர் குல்

இந்த சட்டம் அதிபர் ஹமீது ஹர்சாய் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. புதிய சட்டத்துக்கு மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித் துள்ளனர். ஆப்கானிஸ்தானில் கவுரவ கொலைகள் என்ற பெயரில் பெண்களை கொல்வது அதிகமாக நடந்துவருகிற நேரத்தில் இதுபோன்ற சட்டம் கொண்டுவந்திருப்பது பெண்களை மிகவும் பாதிக்கும். இதன் மூலம் பெண்கள் உரிமைகள் முற்றிலும் மறுக்கப் பட்டுள்ளன என்று அவர்கள் கூறியுள்ளனர்.

புதிய சட்டத்தினால், சாகர் குல் என்ற சிறு வயது மணப்பெண் விபச்சாரியாக வேலை செய்ய மறுத்தபோது அவளது புகுந்த வீட்டினர் அவளை அடித்தளத்தில் கட்டி வைத்து பட்டினி போட்டு எரித்த வழக்கும், 31 வயதான சித்தாராவின் மூக்கு, உதடுகளை அவரது கணவர் வெட்டிய வழக்கும் இனி நீதி கேட்டு எந்த மனுநீதி சோழனின் படி ஏறும்? பெண்கள் தங்கள் தாக்குதலுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துரைக்க எந்த ஆராய்ச்சி மணியை அடிப்பார்கள்?






## யேர்மனியில் தமிழர் வர்த்தகர் சங்கம் உருவாகவேண்டும்!

### வர்த்தகமும் தமிழர் வாழ்வும் வளமும் பெருகவேண்டும்.

புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் தமிழர்க்கு தேவையான அன்றாட தேவைகளை எல்லாம் ஓரளவு என்றாலும் பூர்த்திசெய்வது வர்த்தக ஸ்தாபனங்கள்தான்.

மேலும் தாயகத்தில் வாழ்ந்தபோது அல்லது இன்றும், அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் முறைகளில் உணவு உடை பண்பாட்டுக்கோலங்கள் என இவற்றை அங்கிருந்து சுமந்துவந்து எமக்கு பகிர்பவர்களும் இந்த வர்த்தகப் பெருமக்களே.

இன்று பலநாடுகளிலும் தமிழ் வர்த்தகர்கள் தமக்கு என ஒரு சங்கத்தினை அமைத்து கூட்டாக பலமாக தங்கள் வர்த்தக முயற்ச்சியில் பங்கம் வராதவண்ணம் பேணிக்காத்து வருகின்றனர்.

இன்று யேர்மனியில் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களது வரலாறு நீண்ட காலமானாலும் இது வரை ஒரு சங்கம் உருவாக, அல்லது உருவாக்கச் சந்தர்பம் கிட்டவில்லை.

அதனை இன்று ஒருமுகமாக யேர்மனியில் உள்ள அனைத்து தமிழ் ஆசிய வர்த்தக உரிமையாளர்களும், ஒன்று கூடி வர்த்தக சங்கத்தினை அமைக்க முன்வருவோமாக.

இதற்கான ஒரு கூட்டம் எதிர்வரும் 16.03.2014 ஞாயிற்றுக்கிழமை டோட்முண்ட் நகரில் Beuth Str 21 (தமிழர் கலாசாலை) மாலை 3.00 மணிக்கு நடைபெற உள்ளது. அன்று அனைத்து யேர்மன் வாழ் தமிழ் வர்த்தகர்களும் ஒன்றுசேர்ந்து ஒரு சிறந்த வர்த்தகர் சங்கத்தினை தமிழ் வர்த்தகர்களுக்கு என உருவாக்குவோம்! என அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**TeL: 01713306542** gopara gnanam
S.K.T. Sri : **0170 54 29 251** மற்றும் ஆசிய நிறுவனங்கள்







7ம் பக்கத்தொடர்ச்சி.....




அவளைத் தூக்கிப் போட்டுட்டு மத்த விஷயங் களைப் பாக்க வேண்டியது தானே ! அவ என்ன உன்னை நினைச்சுட்டா இருக்கா ? கனடால போய் செட்டில் ஆகல ?
டேய் அவ கனடால இருந்தாலும், கர்நாடகால இருந்தாலும் என் மனசுல எப்பவுமே இருப்பாடா...
ஐயோ.. லவ் பண்ணும்போ தான் டயலாக் டயலாக்கா அவுத்து உட்டு சாகடிச்சே. இப்போ பிரிஞ்சப்புறமுமாடா ? போதும்டா.. அவ மகேஷ் வரனைக் கல்யாணம் பண்ணி கனடால செட்டில் ஆகி ஆறு வருஷம் ஆச்சு. அவளோட பொண்ணுக் கும் இப்போ அஞ்சு வயசாச்சு.
இதுல என்ன தப்பிருக்கு. அவ கனடால இருக்கா, நான் இங்கே இருக்கேன். சும்மா பேச்சு தானே !

பேச்சு இல்ல மச்சி. மனசு. மனசுல என்ன இருக்கோ அது தான் செயல்ல வரும். மனசுல சுடரை நீ வெச்சிருந்தா மாலதியோட வாழற வாழ்க்கை நல்லா இருக்காது. நீ கவனிக்க வேண்டியது உன் மனைவியை.
போதுண்டா உன் அட்வைஸுக்கு. நீயும் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிகிட்டவன் தானே. ஏதோ லவ்வே பண்ணாத மாதிரி பேசறே. குடும்பத்தையெல்லாம் நான் நல்லாதாண்டா பாத்துக்கறேன் என்ன குறைவெச்சிருக்கேன்.
என்ன ம்ம்... வாயில நல்லா வருது. உன் பொண்ணோட ஸ்கூல் புராஜக்டை பண்ண வேண்டியிருந்தப்போ, டைமில்லை, புண்ணாக்கு இல்லைன்னு புலம்பினே. சுடர் கூட கடலை போட டைம் இருக்கோ ?
சரி...சரி.. அந்த பேச்சை விடு.. இப்போ என்ன விஷயம் சொல்லு...
ஒண்ணும் இல்லை சும்மா தான் வந்தேன். பேசிக்கொண்டிருக்கும் போது சாகரின் மானிட்டரில் சேம்டைம் சேட் வின்டோ டொய்ங் என்று திறந்தது.
"சாகர் ஒரு நிமிஷம் இங்கே வரமுடியுமா பிளீஸ் " மானேஜர் கூப்பிட்டார்.
"கண்டிப்பா" என்று பதில் தட்டிவிட்டு சாகர் எழுந்தான்.
வாசன் சாகரின் கம்ப்யூட்டர் வின்டோவைப் பார்த்தான். டாஸ்க் பாரில் ஃபேஸ் புக் திறந் திருந்தது. கிளிக்கினான். அப்படி என்ன தான் சுடர் கூட பேசறான்னு பாப்போமே என்று நுழைந்தான்.

சுடரோடு சாகர் பேசிய சேட் ஹிஸ்டரி அனுமர் வால் போல நீண்டு கிடந்தது.
ஹாய் சுடர்.. எப்படியிருக்கே.
ம்ம்.. இருக்கேன் நீங்க ?
ஏதோ இருக்கேன்.. நினைவுகள் வாழவைக்குது.
ம்ம்ம்...
வீட்ல எல்லாரும் நலமா ?
யா... இருக்காங்க.. உங்க வீட்ல..
ம்ம்... இருக்காங்க...
நைட் தூங்காம சேட் பண்றீங்க ?
உன்னை மறக்க முடியுமா ? உலகத்துல எல்லாத்தையும் விட முக்கியமானது உன்கூட பேசறது தான் சுடர். அது தான் உலகத்துல என்னை வாழ வைக்குது.
ம்ம்ம்... ஐ யாம் மிஸ்ஸிங் தோஸ் டேஸ்
ம்ம்ம்... அந்த அருகாமை, அந்த நாட்கள் எல்லாம் சொர்க்கம்.
ம்ம்.... ஆமா...
ஞாபகம் இருக்கா.. அந்த வேலன்டைன்ஸ் டேக்கு.. முதல் முதலா....

வாசன் கடகடவென வாசித்தான். சேட் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக காதல், கவர்ச்சி, ஆபாசம் என தாவ வின்டோவை மூடினான். டெஸ்க் டாப்பில் ஒரு நோட் பேட் தென்பட்டது. பாஸ்வேர்ட்.டெக்ஸ்ட்

திறந்தான். சாகரின் மின்னஞ்சல்கள், ஃபேஸ்புக் எல்லாவற்றுக்குமான ஐடி மற்றும் பாஸ்வேர்ட். மடப்பயல் என்று நினைத்து கொண்டிருந்தவனின் மனதில் சட்டென ஒரு பொறி. ஃபேஸ்புக் ஐடி, பாஸ்வேர்ட்களை மனதில் பதித்துக் கொண்டு ஃபைலை மூடினான். இன்னும் சாகர் திரும்பி வரவில்லை.

அன்று இரவு, மணி பதினொன்று. வாசனின் போன் அடித்தது. மறுமுனையில் சாகர். சாகரின் குரலில் வண்டி வண்டியாய் பதட்டம் தெரிந்தது.
மச்சி.. என்னோட டேட்டா கார்டைப் பாத்தியா ? பேக்ல போட்டிருந்தேன் காணோம். நெட் கனெக்ட் பண்ண முடியல.
ஓ.. இல்லையேடா... ஆபீஸ்ல விட்டுட்டியா தெரியலையே !
தெரியலடா மச்சி.. சே..நெட் கனெக்ட் பண்ண முடியலடா.. சுடர்வேற வெயிட் பண்ணிட்டிருப்பா... இன்டர்நெட் சென்டரெல்லாம் மூடியிருப்பான்...

டேய்... இவனே....போய் தூங்குடா.. ம.... எல்லாம் நாளைக்கு பாத்துக்கலாம். சொல்லிக் கொண்டு போலிக் கோபத்துடன் போனை ஆஃப் பண்ணினான் வாசன். அவனுடைய கையில் சாகரின் டேட்டா கார்ட் சிரித்தது. அவனுடைய லேப்டாப்பில் சாகரின் ஃபேஸ் புக் பக்கம் சுடருக் காகக் காத்திருந்தது !

அரை மணி நேரத்துக்குப் பின் சுடர் பச்சை விளக்குடன் ஆன்லைனில் வந்தாள்.
கொஞ்ச நேரம் வாசன் அமைதிகாத்தான். சுடரே பேச்சை ஆரம்பித்தாள்.
ஹாய் சாகர்... எப்படி இருக்கீங்க....
பேசினான். சுமார் ஒரு மணி நேரம் பேசினார்கள். மறுமுனையில் இருப்பது வாசன் என்பதை சுடர் அறியவில்லை. சாகர் என்று நினைத்து பேசிக் கொண்டிருந்தாள்.
மறு நாள் மதிய வேளையில் பதட்டத்துடன் ஓடி வந்தான் சாகர்.
மச்சி... சுடர் கிட்டே நேத்திக்கு பேசல. அவ கோச்சுகிட்டா போலிருக்கு. என்னை அன்பிரண்ட் பண்ணிட்டா. இப்போ நான் அவளோட ஃபேஸ் புக் ஃபிரண்ட்ஸ் லிஸ்ட்லயே இல்லை. ரொம்ப கஷ்டமா இருக்கு.
ம்ம்ம்...
என்னடா நான் டென்ஷன்ல சொல்லிட்டிருக்கேன்.. நீ சைலன்டா இருக்கே.
மச்சி.. கொஞ்சம் பொறுமையா கேளு ! நேற்று நைட் சுடர் ஒரு மணி நேரம் சாகர் கூட பேசினா.. அப்புறம் போயிட்டா.
என்னடா சொல்றே ? நான் பேசவே இல்லையேடா.
சாரி மச்சி.. உனக்குப் பதிலா நான் பேசினேன், உன் பெயர்ல. உன் ஐடில நான் நுழைஞ்சுட்டேன். நீ இடையில வரக்கூடாதுன்னு தான் உன் டேட்டா கார்டை சுட்டுட்டு போனேன். கூல் டவுன்... இந்த சேட்டை படிச்சுப் பாரு ! வாசன் நேற்று இரவு நடந்த சேட் ஹிஸ்டரியை சாகரிடம் நீட்டினான்.

சாகரின் பொறுமை எல்லை மீறியது. டேய்.. மயி....இதெல்லாம் உனக்கே நல்லாயிருக்கா. என்னோட பர்சனல் விஷயத்துல அளவுக்கு மீறி தலையிடறே. அவகிட்டே என்ன சொன்னே ? என் லைஃப்பை டிசைட் பண்ண நீ யாரு ? நான் பேசுவேன், பேசாம இருப்பேன். அது என் இஷ்டம்.

முதல்ல நீ சேட்டை படி.. நான் ஏதாச்சும் தப்பா பேசியிருந்தா செருப்பால அடி..
சாகர் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் சேட்டை வாசித்தான்.

ஹாய் சாகர்... எப்படி இருக்கீங்க....
நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்கே ?
ம்ம்... இருக்கேன்.
வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா ? மகேஷ்வர், சாரினி நலமா ?
ம்ம்... இருக்காங்க... உங்க வீட்ல..
எல்லாரும் நல்லா இருக்காங்க. இன்னிக்கு என்னோட பொண்ணுக்கு டான்ஸ் புரோக்ராம் இருந்துச்சு. ரொம்ப சந்தோசமா இருந்துது !
ஓ.. நைஸ்.. நைஸ். என்ன டான்ஸ்
பரதநாட்டியம் கத்துக்கிறாங்க. இரண்டு வருஷமா. குட்டிப் பொண்ணு தான் ஆனா பின்றா.

ம்ம்... என் பொண்ணு கூட மியூசிக் கிளாஸ் போறா... வயலின்.
வாவ்.. வயலின் ரொம்ப கஷ்டமாச்சே...
ம்ம்.. ஆனா அவளுக்குப் புடிச்சிருக்கு.
யூ. நோ வாட்... என்னோட மனைவிக்கு வயலின்னா உசுரு. ரொம்ப அழகா வாசிப்பா. அவ வாசிச்சா நாள் முழுக்க கேட்டுட்டே இருக்கலாம். அடிக்கடி சாயங்காலம் மொட்டை மாடில போய் உட்கார்ந்து அவ வாசிக்கிறதை நானும் பொண்ணும் கேப் போம். மியூசிக் ரொம்பவே அற்புதமான விஷயம் யா.
ம்ம்.... என் ஹஸ்பன்ட் கூட நல்லா கீ போர்ட் வாசிப்பாரு. முன்னாடி ஒரு குரூப்ல சேர்ந்து ஆல்பம்ஸ் எல்லாம் போட்டிருக்காரு.
வாவ்.. வெரி இன்டரஸ்டிங். நீ சொன்னதே இல்லை.
ம்ம்... நீங்க கேட்டதில்லை அதனால நான் சொன்னதில்லை.
ஆமா.. உண்மை தான்.. ( ஸ்மைலி )
அப்புறம்.. வீக் எண்ட் என்ன பிளான் ?
என் பொண்ணோட அஞ்சாவது பிறந்த நாள் நெக்ஸ்ட் வீக் வருது. அதுக்கு பிளான் பண்ணணும்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்.



9 பக்கத் தொடர்ச்சி

# பழைய காதலி!



சில ஹோட்டல்ஸ் போய் பாக்கலாம்ன்னு இருக்கோம்.
வய்.ஃப் கூடவா ?
ஆமா... அவங்களுக்கு ஒரு டேஸ்ட் இருக்கும்ல, அது மாதிரி பண்ணலாம்ன்னு பிளான். அவங்க சஜஷன் எப்பவுமே கரெக்டா இருக்கும். எங்க வெட்டிங் ஆனிவர்சரி கூட அவளோட பிளான் படி தான் இருந்துது. தேட் வாஸ் கிரேட். அதனால அவங்க கிட்டயே இதையும் விட்டுட்டேன்.
நானும் அப்படி தான். என் ஹஸ்பண்ட் என்ன சொல்றாரோ அது தான் ஃபைனல். பட்... ஹி ஈஸ் வெரி லவ்லி.. எனக்கு என்ன புடிக்குதோ அது தான் செய்வாரு. குட்டிம்மா குட்டிம்மா ன்னு சுத்தி சுத்தி வருவாரு (ஸ்மைலி)

நம்ம பார்ட்னருக்குப் பிடிச்சதைச் செய்றதுல தான் லைஃபே இருக்கு சுடர்...
ம்ம்ம்.. தோஸ் ஆர்... ஹேப்பி மொமன்ட்ஸ். குறிப்பா பிளேயிங் வித் மை கிட்.. வாழ்க்கையிலயே ரொம்ப சந்தோசமான விஷயம்.
கண்டிப்பா... குழந்தைங்க தானே நமக்கு உசுரு மாதிரி. அதுக்கு அப்புறம் தானே மற்றதெல்லாம்.
ம்ம்.... யா... நானும் அப்படித் தான் குழந்தையைப் பிரிஞ்சு ஒரு நாள் கூட இருக்க முடியாது.
வாவ்.. எனக்கும் அப்படியே தான் சுடர். அவ பொறந்த நாளு தான் என் வாழ்க்கையிலேயே ரொம்ப சந்தோசமான நாள்.
ம்ம்ம். அப்போ ரெண்டாவது சந்தோசமான நாள் எது ?
அது என் பொண்ணோட முதல் நாட்டிய நிகழ்ச்சி நடந்தது தான். ரொம்ப ரொம்ப அற்புதமான நாள். இன்னும் என் கண்ணுக்கு முன்னடியே அவளோட பாதங்கள் நடனமாடிட்டே இருக்கு.

ம்ம்ம்... மூணாவது சந்தோசமான நாள் ?
என்னோட கவிதை ஒண்ணு பிரசுரமான நாள். ரொம்ப சந்தோசப்பட்ட நாள் அது !
உன்னோட ஃபேவரிட் டேஸ் என்னென்ன சொல்லேன்.
ஆல்மோஸ்ட் சேம். என் குழந்தை பிறந்த நாள்... அவ ஸ்கூல் போன நாள்... நான் கனடா வந்த நாள். எங்க வெட்டிங் ஆனிவர்சரி. இப்படி !

வெரி நைஸ். இப்படி குழந்தைங்க கூட குடும்பமா சந்தோஷமா இருக்கிறது ரொம்ப ஆனந்தமான வாழ்க்கை தான். அதெல்லாம் சின்ன வயசுல தெரியல. லவ் மட்டும் தான் தெரிஞ்சுது. இப்போ குடும்பம் முன்னால வந்துடுச்சு. மற்ற எல்லாமே பின்னால போயிடுச்சு.
ஆமா சாகர். உண்மை தான். வாழ்க்கைல மிகப்பெரிய சந்தோசமே மகிழ்ச்சியான குடும்பம் தான். நாம கல்யாணம் பண்ணிக்காம இருந்த அந்த கெட்ட விஷயத்துல நடந்த நல்ல விஷயம் நமக்கு நல்ல இரண்டு குடும்பங்கள் கிடைச்சது தான். நம்ம குழந்தைங்க இடத்துல வேற குழந்தைங்களை வெச்சு நினைச்சுக் கூட பாக்க முடியல இல்லையா !
யா.. யா... நீங்க லைஃப்ல மகிழ்ச்சியா இருக்கிறது எனக்கு சந்தோசமா இருக்கு !
கண்டிப்பா.. நான் கூட நீ ஒரு நல்ல இடத்துல செட்டில் ஆகி, கணவன் கூட சந்தோசமா இருக்கிறதுல ரொம்ப ரொம்ப சந்தோசப்படறேன்.
ஓ.கே... போணும்... பொண்ணுக்கு லஞ்ச் டைம் வந்துடுச்சு... சீ யூ...
கண்டிப்பா.. நானும் கொஞ்சம் தூங்கறேன். டயர்டா இருக்கு... குட் நைட்...
சாகர் சேட் ஹிஸ்டரியை முழுமையாய் வாசித்து விட்டு அமைதியானான். வாசன் எதுவும் தப்பாய்ப் பேசவில்லை. எதுவும் தப்பான தகவல்களையும் சொல்லவில்லை. ஆனால் இப்படி ஒரு உரையாடலை நான் நடத்தியதே இல்லை. அவனுடைய மனசுக்குள் என்னவோ செய்தது.
இதுக்கு ஏன் சுடர் என்னை நட்பு வளையத் திலிருந்து விலக்கினாள் ?
வாசன் சாகரின் தோள் தொட்டான்.

மச்சி, நீ ஒரு விஷயம் புரிஞ்சுக்கோ. லவ்ல சில முகங்கள் உண்டு. ஒண்ணு ஐயோ நம்ம லவ் பண்ணின ஆளு நல்லா இல்லையோ, சந்தோசமா இல்லையோ அப்படீன்னு குழம்பி, குற்ற உணர்ச்சியாகி, அவங்க கிட்டே பேசிட்டே இருக்கிறது. பழைய நினைவை கிளறிக் கிளறி நிகழ்கால வாழ்க்கை நாசமா போவும். இன்னொரு வகை என்னன்னா, நாம காதலிச்ச பொண்ணோ பையனோ நல்லா இருக்கான்னு தெரிஞ்சா எரிச்சல் பட்டு, கட் பண்ணிட்டு போயிடறது. என்கிட்டே இருந்தால் கிடைக்கிற சந்தோசமும், நிம்மதியும் நம்ம ஆளுக்கு வேற எங்கயும் கிடைக்காது ன்னு நினைக்கிற மனநிலை அது. கிடைச்சா எரிச்சலோ, கோபமோ கொள்ளும். அதனால உண்மையை எப்பவுமே அது பேசாது.
ரியாலிட்டியை நீங்க ரெண்டு பேருமே பேசிக்கிட்ட தில்லை. நீங்க போலியா ஒரு வளையத்தை உருவாக்கி உங்களை நீங்களே ஏமாத்திட்டிருந்தீங்க. நான் உங்க மனசுல இருந்த உண்மை உணர்வை வெளியே கொண்டு வந்தேன். இப்போ அவ சந்தோசமான ஒரு வாழ்க்கைல இருக்கான்னு உனக்குத் தெரியும். நீயும் அப்படியே தான் இருக்கே. அதை ஏற்றுக் கொண்டா போதும் !
சாகர் அமைதியாய் இருந்தான். அவனுடைய மனதில் இருந்த குழப்பங்கள் தெளிவடையத் தொடங்கியது போல் இருந்தது. ஏன் சுடர் தன்னை நட்பு வட்டத்திலிருந்து விலக்கினாள் என்பதும் அவனுக்கு புரியத் தொடங்கியது. மௌனமாய் இருந்தான். வாசன் தான் வழக்கம் போல அவனுடைய மௌனத்தைக் கலைத்தான்.



**வாழ்க்கைல நீ ஒரு தடவை காதலிச்சே. இனி வாழ்க்கையை ஒரு தடவை காதலி ! சிம்பிள் !!. சொல்ல சாகர் புன்னகைத்தான்.**

முற்றும்



# பாலு மகேந்திராவை யாரும் படிக்கலாம் அவர் ஓர் திறந்த புத்தகம்

## மூன்றாம் பிறையின் கடைசிக் காட்சியில் நீங்கள் பார்த்த அந்த நெஞ்சு முட்டும் சோகம் என் சோகம்தான்!



மட்களப்பில் பிறந்து கலையுலகில் மணி மகுடம் சூடியவர். அமரர் பாலு மகேந்திரா.
அழியாத கோலங்கள் மூன்றாம்பிறை வீடு மூடுபனி இவை எல்லாம் அவரது திறமையின் பல்வேறு கோணங்கள். சினிமாவைக் காதலித்த அவரது வாழ்வில் காதலிகளும் இருந்தார்கள்.

அவர்களை எக்காரணம் கொண்டும் மறைக்க வில்லை. அவரது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அப்புத்தகத்தில் இருந்து சில....

அகிலா, ஷோபா, மௌனிகா.
மறைந்த காமிரா கவிஞர், யதார்த்தத்துக்கு நெருக்கமாக தன் படைப்புகளைத் தந்த அமரர் பாலு மகேந்திராவின் வாழ்க்கை முழுவதும் பெண்களால் நிரப்பப்பட்டதுதான். பாலு மகேந்திராவுக்கு மூன்று மனைவிகள். ஒருவர் அகிலா. இன்னொரு மனைவி பிரபல நடிகை ஷோபா. தற்கொலை செய்து கொண்டார். ஆனால் பெரும்பாலும் அவரை மனைவி என்று குறிப்பிடுவதில்லை பாலு மகேந்திரா. அவரை தன் தேவதை என்றே குறிப்பிடுவார். இன்னொரு மனைவி மௌனிகா. தன் வாழ்க்கையில் இந்தப் பெண்களின் பங்கு என்ன என்பதை ஒருபோதும் வெளிப்படையாகப் பேச மறுத்ததில்லை பாலு மகேந்திரா. அகிலா, ஷோபா, மௌனிகா மற்றும் பாலு மகேந்திரா! அகிலா பாலு மகேந்திராவின் மனைவி அகிலா. இவருக்கு ஷங்கி மகேந்திரா என்ற மகன் உள்ளார்.

மனைவி அகிலா குறித்து பாலு மகேந்திராவின் கருத்து என்ன... இதோ அவரது வார்த்தைகளில்....
”சினிமாவையும், இலக்கியத்தையும் அசுர வெறியோடு நேசிக்கும் எனக்கு, என் வாழ்க்கைத் துணையும் சினிமாவோடும், இலக்கியத் தோடும் சம்பந்தப்பட்டவளாக, என் அலைவரிசையில் இருப்பவளாக வேண்டும் என்று ஒரு பேராசை. இது அபத்தமான ஆசை, முட்டாள்தனமான எதிர்பார்ப்பு என்பதும் எனக்குத் தெரியும். அபத்தங்களும் முட்டாள் தனமும் நிறைந்ததுதான் என் வாழ்க்கை. ஏகப்பட்ட குழப்பங்கள் நிறைந்த என் வாழ்க்கை யில் நேர்த்தியாக நான் வைத்திருக்கும் ஒரே விஷயம் சினிமாதான்.
இந்த உறவை (மௌனிகாவுடனான) ஆரம்பிப் பதற்கு முன், என் அகிலாவைப் பற்றி நான் யோசித்திருக்கவேண்டும். இந்த உறவு எவ்வளவு தூரம் அவளைப் புண்படுத்தும், வேதனைக் குள்ளாக்கும் என்றெல்லாம் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.
அவளுக்குப் பதினெட்டு வயது. சரியாகப் புடவை கட்டக்கூடத் தெரியாத வெகுளிப்பெண்.
அகிலாவைப் போன்ற பத்தினிப் பெண்கள் 'பரிசுத்தவதிகள்' புராண காலத்தில் தான் இருந்திருக்கிறார்கள். இந்த யுகத்தில் பிறந்திருக்க வேண்டிய பெண்ணல்ல அகிலா. என்னைப் போன்ற ஒரு பித்தனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்க வேண டியவள் அல்ல. கனவுகளைத் துரத்தியபடி சதா ஓடிக்கொண்டு இருக்கும் நாடோடி நான். எனக்கு மனைவியாக வந்ததுதான் அகிலாவுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய துரதிர்ஷ்டம்.
மனைவியைத்தவிர மற்றொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காத, மனசால்கூட நினைக்காத ஒரு நல்ல ஆண்மகனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்க வேண்டியவள் அகிலா. என்னை மாதிரி ஒரு கோணங்கிக்கு வாழ்க்கைப்பட்டது அவள் விதி.
இந்தப் பத்தினிக்கு வலிகளையும் காயங்களையும் தவிர, வேறு என்ன தந்தேன் என்று நினைக்கும் போது எங்காவது கண்காணாமல் போய்விடத் தோன்றுகிறது!
மௌனிகாவின் பேரன்பு...



மௌனிகாவும் என் மனைவி தான். இந்த இடத்தில் மௌனியைப் பற்றியும், எனக்கும் அவளுக்குமான உறவு பற்றியும் நான் கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டியிருக்கிறது. மௌனிக்கும் எனக்குமான உறவு ஒரு நடிகைக்கும், டைரக்டருக்குமான படுக்கையறை சம்பந்தப்பட்ட உறவு என்றுதான் பலர் நினைப்பார்கள்.
ஆனால், உண்மை அதுவல்ல! ஏறக் குறைய இருபது வருஷங்களுக்கு முன் ஆரம்பித்த உறவு அது. இனியும் எதையும் நான் மறைப்பதற்கில்லை. ரொம்பவும் உடைந்துபோன ஒரு தருணத்தில், நான் உங்ககூடவே இருந்திரட்டுமா? என்று கண்கலங்கி நின்ற, அந்த சின்னப் பெண்ணுக்குப் புரியும்படி புத்திமதி சொல்லி, அந்த உறவை நான் முளையிலேயே கிள்ளிப் போட்டிருக்க வேண்டும். ஏனோ, அதை நான் செய்யவில்லை.
அந்த அபலைப் பெண்ணின் கேள்விக்குப் பின்னே இருந்த வேதனை, அவமானம், வலி அனைத்தை யும் நான் அறிவேன். புத்திபூர்வ மாக வாழாமல், உணர்வு பூர்வமாக மட்டுமே வாழத் தெரிந்த என்னை அது வெகுவாகப் பாதித்தது. அதன் விளைவுதான் எனக்கும் மௌனிக்குமான உறவு.

“இவ்வளவு வேதனைப்படுகிற நீங்கள் ஏன் உங்கள் வாழ்வை இத்தனைச் சிக்கலாக்கிக் கொண்டீர்கள்?““ “காரணம் மௌனியின் பேரன் புதான். “நீங்க எனக்குத் தாலி கட்டவேண்டாம். உங்க காசு, பணம், சினிமா எதுவும் எனக்கு வேண்டாம். உங்கள் மூலமாக ஒரு குழந்தைகூட வேண்டாம். நீங்கள் என்னருகில் இருங்கள். அது போதும்!“ என்று சொல்லும் ஒரு ஆத்மாவை நான் எப்படி உதறித் தள்ளுவது? தன் இளமைக் காலத்தை எனக்காக, என்னுடன் பகிர்ந்துகொண்ட வளை எப்படி உதற? என் உறவு காரணமாகப் பழிச்சொல், அவமானம் அடைந்தவள் அவள். நான் வேலை இன்றி இருந்த மாதங்களில், தான் மட்டும் மாங்கு மாங்கென்று உழைத்து,
பொருளாதார ரீதியாகவும் என்னைத் தாங்கிப் பிடித்தவள். இந்த செவ்வாய்கூட எனக்காக மாங்காடு அம்மன் கோயிலுக்கு வீட்டிலிருந்தே நடந்து போய், அங்கப்பிரதட்சணம் செய்திருக் கிறாள். ஒரு பெண்ணின் பூரணமான அன்பையும் அழுத்தமான பக்தியையும் உணர்ந்தவர்களால் எங்கள் உறவைப் புரிந்துகொள்ள முடியும்.
இருபது வருடங்கள், தன்னுடைய எல்லா வற்றையும் எனக்காக அர்ப்பணித்துவிட்டு இப்போது 35 வயதாகும் மௌனியை எப்படி நான் தூக்கிப் போடுவது? அதேசமயம், என்அகிலாவை நான் எந்தக் காலத்திலும் எவளுக்காகவும் விட்டு விலகியவன் அல்ல. அவளை நான் ஆத்மார்த் தமாக, ஆழமாக நேசிக்கிறேன். என்றாவது ஒரு நாள், என் நெஞ்சில் நிறைந்து வழியும் அன்பை, பொங்கிப் பிரவாகமெடுக்கும் பாசத்தை அகிலா புரிந்து கொண்டால் எனது இறுதி மூச்சு நிம்மதியாகப் பிரியும்!
““மௌனிகாவுக்கும் உங்களுக்குமான உறவில், உங்கள் மகன் ஷங்கியின் நிலை என்ன?““
என்னை என் பலங்களோடும் பலவீனங்களோடும் நேசிப்பவன் ஷங்கி.
என் சுகதுக்கங்களில் பங்கு கொண்டு நல்ல துணையாக, நல்ல சிநேகிதியாக, சமயங்களில் தாயாகக்கூட என்னைப் பாதுகாக்கிற பெண்ணை சினிமா வட்டாரத்தில், “பாலுமகேந்திரா வெச்சு கிட்டிருக்கிற பொண்ணு“ என்று கொச்சையாகக் குறிப்பிடுவதை என்னால் சகிக்க முடியவில்லை. அதனால் 98’ம் ஆண்டு குடியரசு தினத்தன்று ஒரு சிவன் கோயிலில் வைத்துத் தாலி கட்டினேன்.
எனக்குத் தாலி கட்டியதை முதன்முதலாக அவர் பகிரங்கப்படுத்தியதே, எனக்கும் அவருக்கு மிடையே இருந்து வருகிற ஆத்மார்த்தமான உறவுக்கு, அவர் கொடுத்த சமூக அங்கீகாரம். எனக்கும் அவருக்குமான உறவில், எந்த எதிர்பார்ப்புகளும் எனக்கும் இல்லை. அவருக்கும் இல்லை. இனி இருக்கப்போவதும் இல்லை. நான் அவரை அவருக்காக மட்டுமே நேசிக்கிறேன். அவரும் அப்படித்தான். இந்த மனிதர் மறுபடியும் ஆஸ்பத்திரி அது இது என்று போகாமல், ஆரோக்கியமாக அவருக்குப் பிடித்த சினிமாவைச் செய்துகொண்டிருக்க வேண்டும் என்பது மட்டுமே. இந்த வரத்தை இறைவன் நிச்சயம் எனக்குத் தருவார்!

**தொடர்ச்சி 12ம் பக்கம்.**



**பாலு மகேந்திராவை யாரும் படிக்கலாம்....**

**11ம் பக்கத் தொடர்ச்சி..**



அகிலா, ஷோபா, மௌனிகா இதில்... ஷோபா யார்? அச்சாணி படத்தில் அறிமுகமாகி, கே பாலச்சந்தரின் நிழல் நிஜமாகிறது படத்தில் பிரபலமாகி, பசி படத்துக்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்றவர் ஷோபா. ஊர்வசி என்ற விருதினை மத்திய அரசு அவருக்கு அளித்தது. அப்போது அவருக்கு வயது 17. அடுத்த சில தினங்களில் அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அகிலா, ஷோபா, மௌனிகா இதில்... ஷோபா யார்? அச்சாணி படத்தில் அறிமுகமாகி, கே பாலச்சந்தரின் நிழல் நிஜமாகிறது படத்தில் பிரபலமாகி, பசி படத்துக்காக சிறந்த நடிகைக் கான தேசிய விருது பெற்றவர் ஷோபா. ஊர்வசி என்ற விருதினை மத்திய அரசு அவருக்கு அளித்தது. அப்போது அவருக்கு வயது 17. அடுத்த சில தினங்களில் அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஷோபா வுக்கும் தனக்குமான உறவைப் பற்றி பாலு மகேந்திரா இப்படி வர்ணிக்கிறார்...

”தேவலோகத் திலிருந்து பூமிக்கு வந்து கொஞ்ச காலம் இருந்து பிரிந்து போன அந்தத் தேவதை யைப் பற்றி என்ன எழுதுவது? எதை எழுதுவது? அடுத்தவீட்டுப் பெண் போன்ற சராசரி தோற்றம் கொண்ட ஷோபா ஒரு அற்புதமான நடிகை என்பதையா...

நடிப்பில் மிகுந்த தனித்தன்மையையும் தனக்கே தனக்கென்று நிறையப் பிரத்தியேகதைகளையும் வைத்திருந்தவர் என்பதையா... குமரிப்பெண் உடலுக்குள் கள்ளம் கபடமற்ற குழந்தை மனசோடு சதா வியப்பும் பிரமிப்புமாக பறந்து திரிந்த அவரது சந்தோஷத்தையா...? அந்த வண்ணத்துப் பூச்சி எனது தோளிலும் சிறிது காலம் உட்கார்ந்து என்னை மனசு நிறைந்த மகிழ்வில் ஆழ்த்திவிட்டுப், பின் ஒரு நாள் சட்டென்று பறந்து போன அந்தச் சோகத்தையா..? எதை? எதை எழுதுவது? மிக அடர்த்தியான உணர்வுகள் முட்டி மோதும் சமயங்களில் வார்த்தைகள் காணாமல் போய் விடுகின்றன. நாம் தலையில் வைத்து கொண்டாடும் நமது தமிழ் நம்மை ”அம்போ” என்று விட்டு விலகிக்கொள்கிறது. அந்த மனநிலையில் எனது ஷோபா பற்றிய ஒரேயொரு பதிவை மட்டும் உங்களோடு பகிர்ந்துகொண்டு நிறுத்திக் கொள்கிறேன்.

ஒரு மழைக் காலைப் பொழுது. குளித்துப், பூஜை முடித்து, அவளுக்குப் பிடித்தமான காட்டன் புடவையும், காலணா சைஸ் பொட்டும், ஈரத் தலையுமாக வந்து உட்கார்ந் தவளைப் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டு கொண்டிருந்தார். அவர்கள் பேசுவது காதில் விழாத தொலைவில் உட்கார்ந்து நான் எதோ படித்துக்கொண்டிருந்தேன்.



**முள்ளும் மலரும் படப்பிடிப்பில் ஷோபா பாலு.மகேந்திரன்**

அன்றைய பேட்டி அடுத்த வாரமே பிரசுரமாகி யிருந்தது. அதில் ஒரு கேள்வி: மற்றவர்கள் ஒளிப்பதிவில் படு சுமாராகத் தெரியும் நீங்கள் பாலு சார் ஒளிப்பதிவில் பேரழகியாகத் தோன்றுகிறீர்களே... எப்படி இது...? ஷோபா சொல்லியிருந்த பதில்: ”மற்றவர்கள் என்னை காமிரா, லைட்ஸ், மற்றும் ஃபிலிம் கொண்டு ஒளிப்பதிவு செய்கிறார்கள். எங்க அங்கிள் என்னைக் காமிரா, லைட்ஸ், மற்றும் ஃபிலிம் இந்த மூன்றோடும் நிறையப் பாசத்தையும் குழைத்து ஒளிப்பதிவு செய்கிறார். அவர் ஒளிப்பதிவில் நான் பேரழகியாக ஜொலிப்பதற்கு இதுதான் காரணம்.” எடக்குமுடக்கான கேள்வி ஒன்றிற்கு ஷோபா சொல்லியிருந்த அவரது அறிவுக் கூர்மை என்னைப் பிரமிப்பில் ஆழ்த்தியது.

அதே பொழுதில், அவர்மீது நான் வைத்திருந்த அளவு கடந்த பாசத்தைப் பகிரங்கமாக மரியாதைப் படுத்துவதில் அவருக்கிருந்த ஆர்வம் என்னை நெக்கி நெகிழ வைத்தது. தேவலோ கவாசிகளான தேவதைகள் பல யுகங்களுக்கு ஒருதடவை தான் பூமிக்கு வந்து போவார்கள். அப்படி வந்துபோன ஒரு தேவதை தான் ஷோபா.

அந்தத் தேவதையின் வரவையும் மறைவையும், அவருக்கும் எனக்கு மான உறவையும் அவர் மறைந்த அடுத்த வருடமே உங்களுக்கு சொல்லியிருந்தேன். ”மூன்றாம் பிறை” படம் மூலமாக.

மூன்றாம் பிறையின் கடைசிக் காட்சியில் நீங்கள் பார்த்த அந்த நெஞ்சு முட்டும் சோகம் அந்தக் காலகட்டத்தில் என் மனதில் நிறைந்து கிடந்த சோகத்தின் ஒரு துகள் மட்டுமே.!

நெஞ்சு வெடிக்கும் என் துக்கத்தை எனது சினிமா மூலம் கொட்டித் தீர்த்துக்கொண்டேன்.

அப்படித் தீர்த்துக்கொண்டதால் இன்று உங் களுடன் இருக்கிறேன். ஷோபா மறைந்து முப்பது வருடங்களுக்கு மேலாகின்றன. இது உங்களுக்கு.. எனக்கு... எல்லா இன்னல்களிலிருந்தும் என்னைக் காத்துவரும் எனது காவல் தெய்வமாக அவள் இன்றும் என் அருகிலேயே இருக்கிறாள்...!”

நாற்பது வருடங்களுக்கு மேலாக ஒரு தொப்பிக்குள்ளும், கண்ணாடிக்குளும் மறைத்து வைத்திருந்த தன் உருவத்தை “தலைமுறைகள்” படத்தில் முழுதாக நீக்கி, முழு பாலு மகேந்திராவை தன் அபிமானிகளுக்கு நிர்வாண மாகக்காட்டி ( முகத்தை ஒளிவு மறைவின்றி) மறைந்துள்ளார்.

சந்திரனில் கறையிருந்தாலும் அதன் பூரண நிலவொளியில், கலைப்படைப்பில் கலையாத கனவுகளை விட்டுச்சென்றுள்ளார் பாலு.



# "தமிழையும் இந்தத் தாத்தாவையும் மறந்திராதப்பா.."





பாலு மகேந்திரா

35 ஆண்டுகள் சினிமாவில் இயக்குநராகப் பணியாற்றிய பாலு மகேந்திரா இயக்கியுள்ள படங்களின் எண்ணிக்கை 22! தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய நான்கு மொழிகளிலும் சேர்த்துதான் இந்த எண்ணிக்கை. அவர் ஒளிப்பதிவாளராக மட்டும் பணியாற்றிய படங்கள் தனி. பாலுமகேந்திராவின் படைப்புகள் பற்றிய ஒரு பார்வை இங்கே...

கோகிலா 1977-ல் கறுப்பு வெள்ளையில் பாலு மகேந்திரா இயக்கிய முதல் படம் கோகிலா. பாலு மகேந்திராவுக்கு மிகப் பிடித்த கலைஞரான கமல்தான் ஹீரோ. ஷோபா நாயகியாக நடித்தார். இந்தப் படத்தில்தான் மோகனை அறிமுகப்படுத்தினார் பாலு

அழியாத கோலங்கள் தமிழ் சினிமாவின் காவியப் படங்களில் ஒன்றாகத் திகழும் அழியாத கோலங்கள்தான் பாலு மகேந்திராவின் முதல் தமிழ்ப் படம். இந்தப் படத்துக்கு சலீல் சவுத்ரி இசையமைத்திருந்தார். இந்தப் படத்துக்குப் பிறகு தன் அத்தனைப் படங்களுக்கும் இளையராஜாதான் இசை என்பதில் உறுதியாக இருந்தார் பாலு மகேந்திரா. சிறு பிராயத்திலிருந்து வாலிபத்துக்கு மாறும் மூன்றுபேரின் நினைவுகள்தான் இந்தப் படத்தின் கதை. அதுவரை பார்த்திராத ஒளிப்பதிவு, படமாக்கம் என அத்தனை பசுமையான படம். இன்றும் இந்தப் படத்தின் "நான் எண்ணும் பொழுது.." பாடலைக் கேட்கும்போது மனசு முழுக்க பழைய நினைவுகள் தளும்புவதை உணரலாம்!

மூடுபனி ஹிட்ச்காக்கின் சைக்கோ படத்தின் பாதிப்பு காரணமாக பாலுமகேந்திரா இயக்கிய முதல் த்ரில்லர் படம் மூடுபனி. இதில்தான் அவர் முதல் முறையாக இளையராஜாவுடன் கைகோர்த்தார். பிரதாப் போத்தன் - ஷோபாவின் அற்புத நடிப்பு இந்தப் படத்தை சிகரத்துக்கு கொண்டு போனது. இளையராஜாவின் அற்புதமான இசை படத்துக்கு இன்னொரு பலம். சென்னையில் 250 நாட்கள் ஓடிய படம் இது.

மூன்றாம் பிறை கமல் - ஸ்ரீதேவியை உச்சத்துக்குக் கொண்டு போன படம் மூன்றாம் பிறை. பாலு மகேந்திராவின் மாஸ்டர் பீஸ் என்பார்கள் பலரும். இளையராஜாவின் இசை தமிழ் சினிமாவை வேறு தளத்துக்குக் கொண்டு சென்றது. கமலுக்கு சிறந்த நடிகருக்கான முதல் விருது கிடைத்த படம் இது.



இரு தேசிய விருதுகள், மூன்று தமிழக அரசு விருதுகள் உள்பட 6 விருதுகள் இந்தப் படத்துக்குக் கிடைத்தன. படத்தில் இடம்பெற்ற பொன்மேனி உருகுதே.. பாடலின் இசை யமைப்பைக் கேட்டு வியந்து போன இசை மேதை ஆர்டி பர்மன், "இப்படி ஒரு இசையை நான் கேட்டதில்லை.. அவர் பெரிய ஜீனியஸ்" என்று வியந்து போனாராம்!

சத்மா தமிழில் வெற்றி பெற்ற தனது மூன்றாம் பிறையைத்தான் சத்மா என்ற பெயரில் இந்தியில் 1983-ல் ரீமேக் செய்தார் பாலு மகேந்திரா. இளையராஜாவுக்கு இதுதான் முதல் இந்திப் படம். தமிழில் நடித்த கமல் - ஸ்ரீதேவி - சில்க் ஆகியோரையே முக்கியப் பாத்திரங்களுக்கு வைத்துக் கொண்டு, மற்ற பாத்திரங்களில் இந்தி நடிகர்களை நடிக்க வைத்தார். படம் இந்தியில் சரியாகப் போகவில்லை. ஆனால் பாலிவுட்டின் சிறந்த 50 படங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது. இந்தப் படத்தில் இடம் பெற்ற "ஹே ஜிந்தகி கலே லாகாலே..." இந்தியின் எவர்கிரீன் பாடல்களில் ஒன்று!

நீங்கள் கேட்டவை (1984) சத்மா கமர்ஷியலாக தோல்வி ஒருபக்கம், பாலு மகேந்திராவுக்கு வெகுஜன ரசனைக்கேற்ப படம் எடுக்கத் தெரியவில்லை என்றொரு குற்றச்சாட்டு மறுபக்கம். ஒரு கோபத்தில் அவர் எடுத்ததுதான் நீங்கள் கேட்டவை. தியாகராஜன் ஹீரோ. சில்க் ஸ்மிதாவையே ஹீரோயினாக்கினார். ஆனாலும் மெயின் ஹீரோ இளையராஜாதான். காதல், மோதல், பழிவாங்கல், சூப்பர் பாடல்கள் என செம மசாலாவாகத் தந்தார் அந்தப் படத்தை. பெரிய வெற்றிப் படமாக அமைந்தது நீங்கள் கேட்டவை. ஆனால் விமர்சகர்கள் மீண்டும் பாலு மகேந்திராவிடமிருந்து இதை எதிர்ப்பார்க்கவில்லை என்றபோது, "ஏன்.. நீங்கள்தானே இப்படி வேண்டுமென கேட்டீர்கள்... பிறகு எதற்கு குறை சொல்கிறீர்கள்?" என்றார் கோபத்துடன்.

உன் கண்ணில் நீர் வழிந்தால் (1985) ரஜினி நடித்த சில படங்களுக்கு ஏற்கெனவே பாலு மகேந்திரா ஒளிப்பதிவு செய்திருந்தாலும், ஒரு இயக்குநராக அவர் ரஜினியுடன் கைகோர்த்தது உன் கண்ணில் நீர் வழிந்தால் படத்துக்குத்தான். இளையராஜா இசையில் கண்ணில் என்ன கார்காலம் பெரிய ஹிட். ஆனால் படம் தோல்வி.

ரெட்டை வால் குருவி (1987) மோகன் - அர்ச்சனா - ராதிகா நடித்த ரெண்டு பொண்டாட்டிக்காரன் கதை இந்தப் படம். விகே ராமசாமிக்கு கிட்டத்தட்ட ஹீரோவுக்கு சமமான ரோல் என்றாலும் மிகையில்லை.

தொடர்ச்சி 19ம் பக்கம்.




உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer


யேர்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!

THUSHI DEKO GERMANY

New in Germany
THUSHI DEKO GERMANY

T.Thiruselvam:

Tel: 02305-85945
0176-60810813
www.thushi-deko.de



எப்படிச் சிறப்புச் செய்வது?

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

# ஆணுக்கு மாலை. பெண்ணுக்குப் பூங்கொத்து என்ற வேறுபாடு ஏன் ஏற்பட்டது?



இது என்ன கேள்வி என்று எண்ணுகிறீர்களா? உங்களைப் போலவே ஓர் எண்ணம் தோன்றியபோது இக்கேள்வியும் தோன்றியது. 'சிறப்புச் செய்தல்' என்ற நடைமுறை இன்று விழாக்களிலே இன்றியமையாத ஒரு சடங்காகி விட்டது. தமிழர் பண்பாட்டு நடைமுறைகளில் ஒன்றாகப் பேணப்படுகிறது. எனவே அந்த மரபான செயற்பாட்டைப் பற்றிய தேடலும் தேவைப்படுகிறது. ஒரு விழாவிலே முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர் என இருவகைப் பட்ட விருந்தினர்கள் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் என வடமொழிப் பெயர்களாலும் அழைக்கப் படுகின்றனர். இந்தச் சிறப்பு விருந்தினர்களின் வாழ்க்கைத் துணைவியரையும் அழைக்கும் வழக்கமும் உண்டு. சிறப்பு விருந்தினர்களின் தகுதிப் பாட்டையும் மேன்மையையும் விழாவுக்கு வந்திருக்கும் அனைவரும் அறியும் வண்ணம் அவர்களை முன்னிலைப்படுத்திச் சிறப்புச் செய்தல் சடங்கு நடைபெறும்.

இச்சடங்கின்போது அரங்கின் முன்னிலையில் விருந்தினர்களை நிறுத்தி அவர்களைப் பற்றிய அறிமுகம் நடைபெறும். அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மாலையணிவிக்கப்படும். இந்த வேளையில் விருந்தினர்களின் துணைவியர்க்கும் பொன்னாடை போர்த்துவர். மாலையணிவிக்காமல் அவர்களுடைய கையிலே பூங்கொத்து வழங்கப்படும். இந்த மாறுபட்ட நிலை ஏன் ஏற்பட்டது என ஓர் இளவல் கேட்டபோதுதான் இச்சடங்கு பற்றிய தேடலை மேற்கொள்ள நேர்ந்தது. வேறுபட்ட நிலைக்கு பால் வேறுபாடு ஒரு காரணமாகலாம் எனக்கருத இடமுண்டு. முதன்மை விருந்தினருக்கு மாலை யணிவிக்கும் ஆண்மகன் அவருடைய வாழ்க்கைத் துணைக்கும் மாலையணிவிக்க முடியாது. தமிழர்பண்பாடு அதற்கு இடமளிக்காது. எனவே கையில் ஒரு பூங்கொத்தை வழங்கிப் பண்பாட்டை பேண முயன்றனர்போலும். ஆனால் பெண்ணுக்கு மாலை அணிவிக்கும் பணியை இன்னொரு பெண் மூலம் நிறைவேற்றித் தமிழரது இறுக்கமான பண்பாட்டைப் பேணும் நடைமுறையும் இன்று வழக்கில் உள்ளது.

ஆனால் கேள்வி எழுப்பிய இளவலின் ஐயம் இன்னும் தீரவில்லை. ஆணுக்கு மாலை. பெண்ணுக்குப் பூங்கொத்து என்ற வேறுபாடு ஏன் ஏற்பட்டது? இதனால் தமிழர் பண்பாட்டில் மாலையும் பூங்கொத்தும் இணைந்தமை பற்றிய ஆய்வுத்தேடலும் ஏற்பட்டது. பண்டைத்தமிழரது வாழ்வியல் நடைமுறைகளின் பதிவான இலக்கியப் பாடல்களில் விளக்கத்தைத் தேடிச் செல்ல நேர்ந்தது. பண்டைய தமிழ் இலக்கியக் காதற் பாடல்களில் சில குறிப்புகளைப் பெற முடிந்தது. மாலை, பூங்கொத்து என்னும் இரண்டும் காதலர்களிடையே பரிமாறும் பரிசுப் பொருட் களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மலர்களே அக்காலத்தில் இயற்கைநிலையில் பெறக்கூடிய பொருளாகும். எனவே அவற்றைக் கையுறையாகக் காதலர்கள் பரிமாறுவது பண்பாடாயிற்று.

பண்டைய இலக்கியங்களில் புறவாழ்வு பற்றிய பாடல்களில் மாலை பூங்கொத்துப் பற்றிய வேறுபட்ட செய்தி காணப்படுகிறது. புறநானூற் றுப் பாட்டு ஒன்று வருமாறு பதிவு செய்துள்ளது.

சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடினி மாலை யணிய
வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே.

(புறநானூறு: 319)

இப்பாடலில் பாணருடைய வாழ்வியல் பற்றிக் கூறும்போது அவர்கள் பெறும் பரிசில் பற்றிய பதிவையும் செய்துள்ளது. பாணர் பண்ணோடு பாடல் பாடும் ஆற்றல் பெற்றவர். அவர்களோடு பாடினியும் சென்று பாடுவாள். பல்வேறு இடங்களுக்கும் சென்று பாடல்களைப் பாடுவது அவர்களது தொழிலாக இருந்தது. பாணன் யாழ் என்னும் இசைக்கருவியையும் இசைப்பதில் வல்லவன். இன்றைய இசைக்குழுவினர் போல அக்காலத்தில் குழுவாகச் சென்று இசைபாடும் இவர்களுக்கு பரிசில் வழங்கும் வழக்கமும் இருந்துள்ளது. மேற்காட்டிய பாடலடிகள் அப்பரிசில் என்ன என்பதை விளக்கிக் கூறியுள்ளன. மன்னனின் அவையிலே பாடி அனைவரையும் மகிழ் விக்கப் பாணனின் குழு சென்ற போது அங்கு மன்னன் இல்லை. அவன் பணி நிமித்தமாக முதல் நாளே சென்றுவிட்டான். எனவே அங்குள்ளவர் மன்னன் திரும்பி வந்து பாணர் குழுவின் பாடலைக் கேட்டுப் பரிசில் வழங்குவான் எனக் கூறுகின்றனர். அந்தப் பரிசு பற்றிக் குறிப்பிடும்போது யாருக்கு என்ன பரிசு கிடைக்கும் என்பதை விளக்கமாகக் கூறுகின்றனர். பாடினிக்கு அணிவதற்கு மாலை வழங்குவான். பாணனுக்கு வாடாத தாமரை மலர் சூட்டப்படும். இங்கே பாணனுடைய பரிசும் பாடினியின் பரிசும் வேறுபட்டவை என்பது தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.

பாடினியின் மாலை மலர்மாலை அன்று. மணிகளால் ஆக்கப்பட்ட மாலையாகும். பாணன் பெறும் 'வாடாத்தாமரை' பொன்னால் செய்யப்பட்ட தாமரை மலரைக் குறிக்கிறது. பொன் இதழ்களால் உருவாக்கப்பட்ட தாமரை மலர் பாணன் தலையிலே சூட்டப்படும். எனவே ஆணும் பெண்ணும் பெறும் பரிசிலில் ஆண் பூவைப் பெறுவதும் பெண் மாலையைப் பெறுவதும் மரபாக இருந்ததைப் பண்டைய தமிழிலக்கியம் அன்றே ஆவணப்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது. இச்செய்தி புறநானூறு 361ஆம் பாடலிலும் குறிப்பிடப்பட்டது.



எனவே பண்டைய மரபின்படி பரிசு தொடராமல் மாறுபடவேண்டிய நிலை எப்படி ஏற்பட்டது? இளவலின் கேள்வி மேலும் தொடர்கிறது. தமிழர் பண்பாட்டில் சான்றோரைச் சிறப்பிக்கும் மரபு தொடர்ந்து பேணப்பட்டு வந்தபோதும் பிற பண்பாட்டின் செல்வாக்கு ஏற்பட்டபோது மாற்றங்களும் வந்து சேர்ந்தன. குறிப்பாக மேலைத்தேயப் பண்பாட்டின் தாக்கம் தமிழர் பண்பாட்டின் கூறுகளை மாற்றியமைத்தது. உணவு, உடை, உறையுள் என்ற மனிதனின் வாழ்வியலின் அடிப்படைகளில் புதுமைகள் புகுந்தன. இயற்கையோடும் பருவகால மாற்றங் களோடும் இணைந்திருந்த தமிழர் பண்பாடு செயற்கையோடு இணையத்தொடங்கியது.

அதனால் இயற்கை மலர்ப்பண்பாடு கைவிடப் பட்டு செயற்கை மலரப்பண்பாடு ஆளுமை பெற்றது. மணமுள்ள மென்மையான மலர்களுக்கு ஈடாக வண்ணத்தாளில் மலர்கள் செய்யப்பட்டன. அவை வாடா மலர்களாக வணிகப்பயன் பெருகின. திருமணம், விழா, அரங்கேற்றம் என எல்லா நிகழ்வுகளிலும் இம்மலர்களின் பயன்பாடே பெருகிற்று. **தொடர்ச்சி 20 ம் பக்கம்.**




JAFFNA BAZAR

Einzelhandle Srilankisch Indische Chinesche

விமானப் பயணச்சீட்டுக்கள் மற்றும்
தரம்மிக்க இலத்திற்கு வேண்டிய
மளிகைப்பொருட்கள் அனைத்தும்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள்
உடனுக்குடன்பெற்றுக் கொள்ளலாம்.

Kaiserstr.39
45468 Mülheim an der Ruhr.
e.mail:suthan170@hotmail.com

உரிமையாளர்:S.Suthan
Tel/Fax 02086966485.
Handy:.01525407642 4.

துரித பணமாற்றுச் சேவை!





அதிகூடிய பெறுமதியில்
தாயகத்தில் பணம் பெற...
எம்மை நாடுங்கள்.
HNB BOC
இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம்.

# Facebook திருமணமும், விவாகரத்தும்!

**வலை வீச்சுக்கள் அதிகம்! அதில் சிக்காமல் இருப்பது உங்கள் திறமையாகட்டும்.**

சிவஜெனனி அரவிந்தன்



முகப்புத்தகத்தில் அளவாக அறிவாகப் பயன்படுத்துங்கள் முழு உலகமும் உங்கள் அருகில் இருப்பதாக உணர்வீர்கள்… "எப்ப பார்த்தாலும் அப்பா அம்மா மகன், தாத்தா எல்லோரும் facebook கில் !" என்று புறுபுறுத்த படி பாட்டி சமையலறைக்கு சென்றா.

"அப்படி என்ன தான் உதில் புதைஞ்சு கிடக்குதோ தெரியவில்லை, மனுசரோட நேரத்தை விழுங்கிக்கொண்டு இருக்குது!" என்று புறு புறுக்கிறா பாட்டி! இது போன்ற பேச்சுக்கள், இப்போ பெரும் பாலானோர் வீட்டில் கேட்க வாய்ப்புண்டு.

கடந்த 6 வருடங்களில் facebook கின் வளர்ச்சி! பெரும் வளர்ச்சி!! பில்லியன் மக்கள் பாவிக்கின்றார்கள். எமது வாழ்க்கையில் இது ஒரு அங்கமாகிவிட்டது. அவசியமாகிவிட்டது. முகப்புத்தகத்தால் (Facebook) பல நன்மைகளும் இருக்கின்றன பல தீமைகளும் இருக்கின்றன. பலர் இவற்றை பற்றி தெரியாமலே Facebook நல்லது என்றும், கெட்டது என்றும் கூறிக்கொண்டு இருக்கின்றனர்.

பெற்றோரின் கண்டிப்பு, கிடுக்கிப் பிடி கண்காணிப்பு உள்ளிட்ட காரணங்களினால் கடந்தாண்டு மட்டும் சுமார் 30 லட்சம் டீன் ஏஜ் வயதினர் பேஸ்புக் வலைதள பயன்பாட்டிலிருந்து விலகியுள்ளனராம்.

பெண்கள் பேஸ்புக்கில் சேர்வதற்கு அப்பா அம்மா சகோதரர்கள் ஏன் சில சமயம் கணவனும் அனுமதிப்பதில்லை. ஆனால் இங்கு சொல்வதோடு சரி.

சிரியா நாட்டில் பாருங்கள் பேஸ்புக்கில் இணைந்தமைக்காக அப்பெண்ணை கல்லால் அடித்தே ஆண்கள் கொன்று இருக்கிறார்கள். அந்நாட்டில் பெண்கள் பேஸ்புக்கில் இணைவது சட்டப்படி குற்றமாம். பெண்கள் பேஸ்புத்தகத்தில் இணைந்தால் கலாச்சாரச் சீரழிவு, பாலியல் வன்முறைகள் அதிகரிக்க வாய்ப்புண்டு என சிரியா அரசு கருதுகின்றது. நல்ல வேளை நாம் வாழும்நாடுகளில் இப்படிச்சட்டம் இல்லை.




அப்படி இருந்தால் பெண்களை கல்லால் அடித்துக்கொல்ல கல்லுக்கு பஞ்சம் வந்திருக்கும். அப்படி பெண்கள் முகப்புத்தகத்தில் நிறைந்து இருக்கின்றார்கள்.

**கல்லால் பெண்களை அடித்துக் கொல்லும் ஆண்கள்!**



சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்படும் இவ்வேளை இப்படியும் சிரியாநாட்டில் நடப்பது சிரிப்பாகவும் வேதனையாகவும் உள்ளது. அங்கு கல்லால் பெண்களை அடித்துக் கொல்லும் ஆண்களால்தான் அப்பெண்கள் சீரழிக்கப்படுகின்றார்கள் என்பதனை கல்லும் அறியாது, கல்மனம் கொண்ட அந்த ஆண்களும் அங்கு உணரமாட்டார்கள். சிரியா நாட்டு சட்டங்கள் சொல்வதுபோல் அதிபயங்கரமானது அல்ல முகப்புத்தகம். அதனை அணுகும் விதத்தில்தான் நன்மையும் தீமையும் இருக்கும்.

**இதோ சில நல்லதும் கெட்டதும்!!**

Facebook உலகத்தில் வெவ்வேறு மூலைகளில் இருக்கும் பல்வேறு மக்களுடன் தொடர்பு வைத்திருப்பதற்கு உதவுகின்றது. இதனால் பல்வேறு மக்களின், கலாச்சாரங்கள் பற்றி அறிந்து கொள்ளலாம். இதுமட்டுமல்லாமல், பழைய நண்பர்களுடனும் தொடர்பு வைத்துக் கொள்ள உதவுகிறது. சில நண்பர்கள் இடம் விட்டு இடம் மாறி இருந்தால், அவர்களுடனும் தொடர்பு வைத்துக் கொள்ள நன்கு உதவுகின்றது. இந்தச் சேவை இலவசமே!

எமது வாழ்க்கையில் என்ன நடக்கிறது, எம்மை சுற்றி என்ன நடக்கிறது, எமது உணர்வுகள் ஆகியவற்றையும் பகிர்ந்து கொள்ள நன்கு உதவுகிறது.

Maintain privacy according to your wishes. Facebook fan pages, groups, events ஆகியவை நாள் செல்ல செல்ல பிரபல்யமாகி வருகின்றன. இதுமட்டுமின்றி இவற்றை நாம் விளம்பரத்திற்கும் உபயோகப்படுத்தலாம்.

நண்பர்களை ஒரு குழுவாகவும், சொந்தங்களை ஒரு குழுவாகவும், (group) பிரித்து அந்தரங்கங்களைப் பேணுதல்வேண்டும்.

சில சமயங்களில் நல்ல நல்ல விடயங்களையும் செய்திகளையும் அறியத்தருகிறார்கள்.

Facebook விளம்பரங்களும் Fan pages சும் தொழில்களை பெரிது படுத்த marketing செய்ய பெரிதும் உதவுகிறது. Facebook கில் chat கூட பண்ணலாம்.

பிரபல நட்சத்திரங்கள், நிறுவனங்கள் facebook மூலம் regular updates கொடுத்துக் கொண்டு இருக்கலாம். சிலர் facebook ஊடாக காதல் பண்ணி திருமணமே செய்து இருக்கிறார்கள்.

Facebook கில் உள்ள விளையாட்டுகள் (online games) ஒரு முறை விளையாடினால் நிறுத்த முடியாத அளவிற்கு ஒருவரை அடிமைப் படுத்திவிடும்.

நன்மைகளையே சொல்லிக்கொண்டு இருந்தால் அப்போ அதனால் வரும் தீமைகளை அறியாதவர்களாகிவிடுவோம். எனவே Facebook கால் வரும் கெடுதியை பார்ப்போமா?

முதலாவது எல்லோருக்கும் தெரிந்ததே. Facebook ஒருவரை அடிமைப் படுத்தும். ஒரு சிகரட் குடி பழக்கம் உள்ளவரால் எப்படி சிகரட்டை விட முடியாதோ அதே போல் இதனையும் விட முடியாது. Facebook எமக்கு தேவையான அளவிற்குபாவித்தால் அது நல்லதே, ஆனால் அதிகமாக பாவித்து எமது நேரத்தை வீண்டித்தால் அது நல்லதல்ல Facebook புத்தகத்தில் நேரத்தை அதிகம் செலவுசெய்வதால் மாணவர்களின் கல்வி கெடுகின்றது. மாணவர்களுக்கு மட்டுமல்ல வேலை செய்பவர்களது நேரமும் விரையமாகின்றது. இதானால் சில நிறுவனங்கள் அவர்களது Network இல் Facebook (முகப்புத்தகம்) அனுமதிப்பதில்லை.

இந்த முகப்புத்தகத்தால் பல திருமணங்கள் நடந்தாலும், அதே முகப்புத்தகம் பல திருமண முறிவுக்கும் அதுவே காரணமாக இருக்கின்றது. இன்று திருமணமானவர்களில் மூன்றில் ஒன்று, விவாகரத்து பெறுவதற்கு முகப்புத்தகமே முதல் காரணம் எனப் பல ஆய்வுகள் தரவுடன் தெருவிக்கின்றன. முகப்புத்தகத்தில் வயது தகமை, மொழி என பலதரவுகளை பிழையாக வழங்கி ஒரு வரை ஒருவர் கவர்ந்து, இறுதியில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் முதல் பொழுதில், கற்பனைக் கோட்டைகள் உடைந்து நொருங்க, அவர்கள் வாழ்வை தற்கொலை முத்தமிடும். இப்படியாக தற்கொலை செய்து கொண்டவர்களில் ரீன் ஏஜ்பிள்ளைகள் அதிகமானவர்கள். நீங்கள் Update பண்ணும் ஒவ்வொரு விடயத்தையும் யாவரும் பார்க்கலாம். அதனை நீங்கள் பிரத்தியேகமாக உங்களுடன் வைத்துக்கொள்ளவேண்டும்.

தொடர்ச்சி 21ம் பக்கம்




# மரியாதை கலந்த அங்கீகாரம்

மரியாதை என்றதும் பதற வேண்டாம். மரியாதை என்பதற்கு சமூகம் ஏகப்பட்ட அர்த்தங்களை வைத்திருக்கிறது. சிலருக்கு சாஷ்டாங்கமாய்க் காலில் விழுவது தான் மரியாதை. சிலருக்கு ஒரு சின்னப் புன்னகை கூட மரியாதை தான். சிலருக்கு வார்த்தைகள், சிலருக்கு வணக்கம், சிலருக்கு சின்னச் சின்ன செயல்களின் வெளிப்பாடுகள். மரியாதை என்பது மனித இனத்தின் தனித் தன்மை. அது கணவன் மனைவியரிடேயும் இருக்க வேண்டியது முக்கியம்.

அதற்காக ஏதோ ஐயா, அம்மா என்று அழைத்து மரியாதை செய்ய வேணுமா என டென்ஷனாகாதீர்கள். பொதுவாகவே திருமணம் முடிந்தவுடன் கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வாழ்க்கையைத் துவங்குவார்கள். அப்புறம் இவர் தனக்கானவர்,, இவள் தனக்கானவள் எனும் எண்ணம் மனதுக்குள் ஆழமாகப் பதிந்து விடும். இது நல்ல விஷயம் தான். ஒரே ஒரு சிக்கலைத் தவிர. அதாவது கணவனோ மனைவியோ என்னதான் செய்தாலும், ”இது அவருடைய கடமை”, ”இது அவளுடைய கடமை” என மனம் நினைக்கத் துவங்கி விடுவது தான்.
அந்த சிந்தனை மனதில் இருக்கும்போ ஒரு செயலுக்கான மரியாதையைக் கொடுக்க நினைக்க மாட்டோம். அலுவலகத்தில் வேலை செய்கிறீர்கள். ஒரு பாராட்டோ, அங்கீகாரமோ, செயலுக்கான மரியாதையோ கிடைக்காவிட்டால் என்ன செய்வீர்கள் ? மரியாதை தெரியாத மனுஷங்க கூட மாரடிக்க வேண்டியிருக்கு என புலம்புவீர்கள் தானே ! ஒரு ஆராய்ச்சி முடிவு சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியானது. ஏன் மக்கள் அடிக்கடி தங்களுடைய வேலையை மாற்றிக் கொள்கிறார்கள் ? என்பது தான் ஆய்வுத் தலைப்பு. நல்ல பணம் கிடைக்கிறதனால வேலையை மாற்றுவது தான் நமக்குத் தோன்றும் பதில். உண்மை அப்படியில்லையாம். ”செய்ற வேலைக்கான மரியாதை கிடைக்கல” என்பது தான் முக்கியமான காரணமாம் !

அத்தகைய சிந்தனை உறவுகளிடையேயும் நிச்சயம் எழத் தான் செய்யும். மென்மையாக ! உங்களுடைய சட்டையை ஒரு நாள் உங்கள் நண்பனோ, சகோதரனோ அயர்ண் பண்ணிக் கொடுத்தால் ரொம்ப நன்றி சொல்கிறீர்கள். அதே வேலையைத் தினமும் உங்கள் மனைவி செய்தாலும் நீங்கள் நன்றி சொல்லாமல், அல்லது அதை ”மனைவி செய்ய வேண்டிய கடமை” போல நினைத்துக் கொள்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அங்கே தான் இந்த சிக்கலின் முதல் சுவடு பதிகிறது. அதற்காக அலுவலகத்தில் சொல்வது போல ”டியர் மனைவி” என ஆரம்பித்து ஒரு நீளமான மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. ஒரு புன்னகை, ஒரு அரவணைப்பு, ஒரு நன்றி வார்த்தை, ஒரு பாராட்டு.. இப்படி சின்னச் சின்ன விஷயம் தான் ! அதைக் கவனமுடன் செய்ய ஆரம்பிப்பதில் இருக்கிறது வாழ்க்கையின் வெற்றி !
வார்த்தைகளை விட, நமது செயல்களில், நமது நடவடிக்கைகளில் அந்த மரியாதை வெளிப்படுவது இன்னும் அதிக பயன் தரும். உதாரணமாக, மனைவி சமையல் செய்து வைத்திருக்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள். அந்த சமையலுக்கான மரியாதை என்ன தெரியுமா ? ஆர்வத்துடனும், பொறுமையுடனும் அதை ருசித்துச் சாப்பிடுவது தான். ஹோட்டலுக்குச் செல்லும் போது உணவுகளின் ருசியைப் பாருங்கள். விலையைப் பாருங்கள். இல்லங்களில் சாப்பிடும்போது சாப்பாடு தயாரித்தவரின் மனதையும், உழைப்பையும், அன்பையும் பாருங்கள். அதுவே முக்கியமானது ! உப்பு இல்லை, காரம் இல்லை என்று சொல்லி உணவை நிராகரிப்பவர்களும், விலக்கி வைப்பவர்களும் அதிகபட்ச அவமரியாதையைச் செய்கிறார்கள் !

இன்னொரு முக்கியமான விஷயம் பேச்சு ! மரியாதை இல்லாத பேச்சு ரொம்ப ரொம்பத் தப்பு. குறிப்பாக பிறர் முன்னிலையில் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பேசும்போது ஒருமையில் அழைத்துப் பேசுவது, அதிகாரத் தொனியில் பேசுவது, எரிச்சலுடன் பேசுவது, இளக்காரமாய்ப் பேசுவது, மரியாதை குறைவாய் பேசுவது போன்றவையெல்லாம் ரொம்பவே தவறான விஷயங்கள். கணவன் தானே, மனைவி தானே என நீங்கள் நினைப்பதில் தவறில்லை. ஆனால் அவர்களும் இந்தச் சமூகத்தில் ஒரு தனி மனிதர், அவருக்கும் உணர்வுகள், சுயமரியாதை உண்டு என்பதை மனதில் கொண்டிருங்கள்.
ஒரு விஷயத்தை முடிவு செய்து விட்டு உங்கள் வாழ்க்கைத் துணையிடம் சொல்வதற்கும், வாழ்க்கைத் துணையுடன் இணைந்து பேசி ஒரு விஷயத்தை முடிவு செய்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. “ஆமா, எல்லாத்தையும் முடிவு பண்ணிட்டு சொல்ல வந்துட்டாங்க” எனும் சலிப்பு உறவுக்கு நல்லதல்ல. வெறும் தகவல் சொல்லும் ஒரு மனிதராகவோ, உங்கள் கட்டளைகளை ஏற்று நடக்கும் ஒரு மனிதராகவோ மட்டும் அவரைப் பார்க்கவே பார்க்காதீர்கள். அது அவரை அவமரியாதை செய்வதற்குச் சமம். இருவரும் சேர்ந்து ஒரு விஷயத்தைப் பேசி முடிவெடுப்பதே நல்லது.

கிராமப் புறங்களில் வசிப்பவர்களுக்குத் தெரியும். ராத்திரி முழுக்க குடித்து விட்டுச் சண்டை போடும் கணவனைக் கூட விட்டுக் கொடுக்காமல் பேசுவாள் மனைவி. வீட்டில் எப்போதுமே அடங்காப் பிடாரியாய் பிடரி சிலிர்க்கும் மனைவியைக் கூட பொது இடத்தில் அன்பானவள் என பறைசாற்றுவான் கணவன். வேறு யாரேனும் தனது வாழ்க்கைத் துணையை தரக்குறைவாய் பேச அனுமதிக்க மாட்டார்கள். இது ஒருவகையில் கணவன் மனைவியிடையே இருக்கின்ற மனவருத்தங்களைத் தாண்டி ஒருவரை மற்றவர் மதிக்கும் மனப்பான்மை என்று எடுத்துக் கொள்ளலாம்.

கணவன் மனைவியராய் இருந்தால் கூட ஒவ்வொருவருக்குமான சில தனித் தனி விருப்பங்கள் இருக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள். பெரும்பாலான தம்பதியர் சண்டையிட்டுக்கொள்ளும் விஷயம் இது தான். அல்லது இது தான் மன வருத்தங்களை தோற்றுவிக்கும் ஒரு மிகப்பெரிய காரணியாய் இருக்கிறது. உதாரணமாக, உங்கள் வாழ்க்கைத் துணைக்கு ஒரு குறிப்பிட்ட தலைவரைப் பிடிக்கலாம், நடிகரைப் பிடிக்கலாம், ஆன்மீக வழிகாட்டியைப் பிடிக்கலாம், அல்லது ஒரு ஸ்பெஷல் ஹாபி இருக்கலாம். அது அவருடைய தனிப்பட்ட விருப்பம் என அதற்கான அங்கீகாரத்தையும் மரியாதையையும் கொடுங்கள். உங்களுக்குப் பிடிக்கும் விஷயம் தான் உங்கள் கணவருக்கோ, மனைவிக்கோ பிடிக்க வேண்டும் என முரண்டு பிடிக்காதீர்கள். இருவருக்குமான தனிப்பட்ட சில விஷயங்கள் இருப்பதில் தவறில்லை. அது ஒட்டு மொத்த குடும்ப உறவைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பது மட்டுமே கவனிக்க வேண்டிய விஷயம்.
கண்ணை மூடிக்கொண்டு ”இதெல்லாம் தப்புப்பா” என சொல்லும் ஒரு விஷயம் கை நீட்டி அடிப்பது, அல்லது மனம் காயப்படுத்தும் படி பேசுவது. ஆணாதிக்கம் பெண்ணாதிக்கம் என்றெல்லாம் இல்லாமல் இதில் சமத்துவம் வீசுகிறது. கையால் அடிக்கும் அடி வலிப்பதில்லை, ஆனால் அடித்துவிட்டாரே எனும் நினைப்பு தான் வலிகொடுக்கிறது. சொல்லும் சொல்லும் அப்படியே. என்னைப் புரிந்து கொண்ட இந்த மனுஷி இப்படிச் சொல்லிட்டாளே என்பது தான் வலிகொடுக்கும். அது உங்கள் வாழ்க்கைத் துணைக்கான மரியாதையை நீங்கள் தர மறுக்கின்ற தருணம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
இன்னொரு முக்கியமான விஷயம். நம்பிக்கை ! உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நீங்கள் தரமுடிந்த அதிகபட்ச மரியாதை அவரை முழுமையாய் நம்புவது. அதே போல, அந்த நம்பிக்கைக்கு உரியவராய் நீங்கள் இருப்பது பதில் மரியாதை ! இது மட்டும் அழுத்தமாய் இருந்தாலே போதும். வாழ்க்கை ஆனந்தமாய் ஓடும். நள்ளிரவில் வாழ்க்கைத் துணையின் செல்போனை நோண்டுவது, டைரியை புரட்டுவது,

**தொடர்ச்சி 17ம் பக்கம்...**

GAAYATREE PARTY SERVICE

**உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.**

**கொத்துரொட்டி**
**புரியாணி**
**நூடில்**
**தந்தூரிச்சிக்கன்**
**இறால் சம்பல்**
**இறால் கறி**

இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.


Gaayatree Party Service

e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck



KIOSK & ASIAN MARKT
Lebensmittal

**பசுமையான மரக்கறிகள்**
**கடல் உணவு வகைகள்**
**இன்னும் பலசரக்குப் பொருட்கள்**
**அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.**

Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்:
த.மனோகரன்

## குடும்ப வெற்றியின் இரகசியம்





சேவியர்

கணினியை ஆராய்வது போன்ற இத்யாதிகளெல்லாம் நீர்த்துப் போன நம்பிக்கையின் அடையாளங்கள்.

சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூட நன்றி சொல்வது அடுத்தவர் செய்யும் விஷயங்களை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதன் அடையாளம். அது எலக்ட்ரிக் பில் கட்டுவதாக இருக்கலாம், உங்கள் துணியை அயர்ன் பண்ணுவதாக இருக்கலாம், ஒரு கப் காபி கொண்டு தருவதாகக் கூட இருக்கலாம். புன்னகையுடன் கூடின மனமார்ந்த நன்றி அந்தச் செயலை அர்த்தப்படுத்தும். புருஷன் பொண்டாட்டிக்குள்ள என்ன நன்றியெல்லாம் சொல்லிகிட்டு என்பதெல்லாம் பழைய பஞ்சாங்கம். நீங்கள் முயன்று பாருங்கள், மாற்றம் நிச்சயம் உங்களுக்கே தெரியும்.

விட்டுக் கொடுத்தல் கூட அடுத்த நபரையோ, அல்லது அந்த உறவையோ நீங்கள் மரியாதை செலுத்துகிறீர்கள் என்பதன் வெளிப்பாடு தான். ஒருவேளை உங்கள் மனைவி அவருடைய அம்மாவிடம் ரெண்டு மணி நேரம் போனில் பேசுகிறார் என வைத்துக் கொள்ளுங்கள். அப்படி என்னதான் பேசறீங்க ? என கேட்காமல் இருப்பது நல்லது. ஒருவேளை கேட்டு, உங்கள் மனைவி சொல்லத் தயங்கினால் அதை அப்படியே விட்டு விடுங்கள். துருவித் துருவி கேட்பதோ, வீணான அனுமானங்களுக்குள் இறங்கி உங்கள் தலையைக் குழப்பிக் கொள்வதோ தேவையற்ற விஷயம் !

"உங்கள் மனைவி ஏதாச்சும் ஒரு நல்ல முடிவெடுத்தா பாராட்டுங்க. தப்பான முடிவெடுத்தா சைலன்டா இருங்க" என்கிறார் ஒரு வல்லுநர். நல்ல முடிவுகளுக்குப் பாராட்டுக் கொடுத்துக் கொண்டே இருந்தால், தப்பான முடிவு எடுக்கும்போ அவங்களுக்கே புரியும். "இந்த விஷயத்துக்குப் பாராட்டு வரல, அப்படின்னா இது சரியில்லை" என அவருடைய உள்மனசே காட்டிக் கொடுக்கும். பாராட்டு என்பது மரியாதையின் ஒரு பகுதி என்பதை நான் சொல்லத் தேவையில்லை !

மரியாதை பரிமாறப்படாத இடங்களில் உறவுகள் நிலைப்பதில்லை. அலுவலகத்தில் போய் மரியாதை குறைவாய் ஒரு மாதம் நடந்து பாருங்கள். உங்களுடைய வேலையே போய் விடலாம். நண்பர் கூட்டத்தில் போய் மரியாதை வழங்காமல் ஒரு சில மாதங்கள் இருந்து பாருங்கள். நட்புகளெல்லாம் காணாமல் போய்விடும். உங்கள் சொந்தக்காரர் வீட்டுக்குப் போய் மரியாதை இல்லாமல் சில நாட்கள் தங்கிப் பாருங்கள், அந்த உறவு அதோடு முறிந்து போய்விடும். இப்படி எல்லா இடங்களிலும் மரியாதை கொடுப்பதும், வாங்குவதும் தேவைப்படும் போது, ஏன் குடும்பத்தில் மட்டும் அது தேவையற்ற ஒன்று என நினைக்கிறீர்கள் ?

இருக்கும் போது வாழ்க்கைத் துணையின் அருமை பெருமைகள் பலருக்கும் புரிவதில்லை. இழந்தபின் புலம்புவதில் பயனும் இல்லை. " நீ இல்லேன்னா என்னால இதெல்லாம் சாதிச்சிருக்கவே முடியாது", " நீ இல்லேன்னா லை.'.பே வெறுத்துப் போயிருக்கும்", " நீ எனக்குக் கிடைச்சது கடவுள் வரம்" என்றெல்லாம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் என்றேனும் சொல்லியிருக்கிறீர்களா ? மனதிலாவது நினைத்திருக்கிறீர்களா ? ஏன் என்றாவது யோசித்திருக்கிறீர்களா ? அன்பாகப் பேசுங்கள். அன்பான பேச்சு வாழ்க்கையை ஆழப்படுத்தும் ! உங்கள் வாழ்க்கைத் துணைவருக்காக பிரார்த்தியுங்கள். அது உங்களுடைய அன்பின் வெளிப்பாடு.

கடைசியாக ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். மாற்றம் உங்களிடமிருந்து தான் துவங்க வேண்டும். உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து துவங்கவேண்டும் என நினைப்பது நீங்கள் உங்கள் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான மரியாதையைக் கொடுக்கவில்லை என்பதன் அடையாளமே !

## ரஜினி, கமல் தவிர்த்து, அதிக சம்பளம் வாங்கும் நடிகர் யார் தெரியுமா?.



இன்றைய திகதியில் ரஜினி, கமல் தவிர்த்து, சம்பளம் வாங்குவதில் முன்னணியில் உள்ள நடிகர் யார் தெரியுமா?. தமிழ் சினிமாவில் நட்சத்திரங்களின் அந்தஸ்தை நிர்ணயிப்பது வெற்றிகளும் நிர்ணயிக்கப்படும் சம்பளமும் மட்டும்தான்.

ஒரு திரைப்படம் ஹிட் ஆகிவிட்டால், தனது சம்பளத்தை உயர்த்திக்கொள்வது திரை நட்சத்திரங்களுக்கு வழக்கமாகிப் போய் விட்டது. அதுமட்டுமின்றி சில நடிகர்கள் சம்பளத்துடன் சில ஏரியாக்களின் விநியோக உரிமையும் வாங்கிக் கொள்கிறார்கள்.

ஏழாம் அறிவு, மாற்றான் என அடுத்தடுத்து தோல்வியால் ஆட்டம் கண்ட சூர்யாவின் மார்க்கெட்டை மீண்டும் தூக்கிவிட்டது சிங்கம் 2 வெற்றி. இதற்கு இணையான பெரிய வெற்றியை சூர்யாவின் வரிசையில் உள்ள வேறு எந்த நடிகரின் திரைப்படமும் பெறவில்லை.

தற்போது லிங்குசாமி தயாரித்து இயக்கும் அஞ்சான் திரைப்படத்தில் நடித்து வருகிறார் சூர்யா. இதில் சூர்யாவுக்கு ஜோடி சமந்தா. இந்த திரைப்படத்தில் சூர்யாவின் தோற்றம் குறித்த ஸ்டில்கள் வெளியாகி ரசிகர்களுக்கு பெரும் ஆர்வத்தைக் கிளறியுள்ளன.

இந்த திரைப்படத்தில் சூர்யாவுக்கு சம்பளம் 20 கோடிகளைத் தாண்டுகிறதாம். சூர்யாவின் திரைப்படங்களுக்கு தெலுங்கிலும் நல்ல வரவேற்பு உண்டு. அதனால் இப்படத்தின் தெலுங்கு ரைட்ஸையும் சூர்யா கேட்டிருக்கிறார்.

தயாரிப்புத் தரப்பு அதற்கும் சம்மதம் சொல்லிவிட்டதாம். சூர்யாவின் திரைப் படங்களின் தெலுங்கு உரிமை குறைந்தது 20 கோடிக்குப் போகிறது.

அப்படியானால் சூர்யாவின் சம்பளம் எவ்வளவு என்று சொல்லுங்கள் பார்ப்போம்...!

## இவ நம்ம ஆளு



முன்பு திரைப்படங்களில் நாயகன் நாயகிகளின் ஆசைகள் அத்துடன், இரசிகர்களது ஆசைகள் படத்தில் கதைக்கு சேராதபகுதிகள் படத்தில் கனவுக்காட்சியாக வரும்.

ஒரு கிராமத்துக் காதலியா அனுஷ்கா நடித்தால் அனுஷ்காவை அமெரிக்காவில் காட்டுவது எப்படி? உடன் ஒரு கனவுக்காட்சி. அல்லது நினைவுக்காட்சி என அமைப்பார்கள். ஆங்கிலப்படம் ஒன்றை கிராமத்து கொட்டகையில் பார்த்துக்கொண்டு இருப்பதாகவும், பின்பு அந்த ஆங்கிலப்பட நாயகன், நாயகி, தாம் என நினைப்பதாகவும் வைத்துக் கொண்டு இருவரும் அமெரிக்கா, சுவிஸ் என்று பறப்பார்கள். இது சில வருடங்களுக்கு முன் நடந்த கனவுக்காட்சிகள்.

இப்போ ஒரு நாயகனும் நாயகியும் கிசு கிசுத்தால் அவர்களைக் குஷிப்படுத்தவும், இரசிகர்களை மகிழ்விக்கவும் அவர்களுக்கு படத்தில் திருமணம் செய்துவைத்து அந்த போஸ்டர்களை எல்லாம் தெருத்தெருவாக் ஒட்டி மகிழ்விப்பார்கள். பழைய காதலியும், பழைய காதலனும், இணைந்து நடித்தால் பரபரப்பு! தயாரிப்பாளருக்கு பணம் நிரப்பு. படத்தில் கதை தேவை இல்லை பரபரப்பு இருந்தால் போதும். இப்போ "நம்ம ஆளு" என்று சிம்புவும் நயன்தாராவும் ஜோடி சேர்ந்து நடித்து வருகின்றனர். இப்படம் பரபரப்பில் பட்டைகிளப்பும், படம். பார்ப்பவர்களுக்கும் மகிழ்ச்சி, நடிப்பவர்களுக்கும் மகிழ்ச்சி, ஆனால், தயாரிப்பாளருக்கு மகிழ்ச்சியா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

புதிய ஓர் அறிமுகம்
புதிய ஓர்
தொழில் நுட்பம்
15 வது ஆண்டில்..
Kaneen electronics
நேரடி ஒளிபரப்பு!
உங்கள் அனைத்து கலை நிகழ்வுகளையும் உலகெங்கும் தமிழ் மக்கள் நேரடியாகப் பார்த்து மகிழவும், தமிழ்த் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யவும் எம்மை நாடுங்கள்.... மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும்
சாதாரண Sat.Receiver இல் சற்றலைட்பொருத்தாமல் அனைத்து சற்றலைட் நிகழ்வுகளையும் ஒரு காட்பொருத்திய IP Recivier அறிமுகமாகிறது
மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் நாடவும்!
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal
www.kaneenelectronics.de

Lucky Fly
SINCE: 1995
கோடைகால விடுமுறைக்கு 2014 முந்துங்கள்
London Zurich Amsterdam
ஆகிய இடங்களில் இருந்து இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்கள் பெற்றுத்தரப்படும்.
இந்தியா விசா துரிதகதியில்...
www.golden-travels.de
Sri lanka
ab 599 €-750€
Tel: 0234 239 90 32
Handy:0179 14 84 892
Lucky Fly, Allee Str 38-40a, 44793 Bochum

# Dortmund நகரில்....தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

# T.T.S.Brothers GmbH&Co.KG

## வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை!

01.03.2014 -19.04.2014 வரை



புத்தம் புதியடிசைன்களில் வந்துள்ள
கண்கவர் சேலைகள்
பஞ்சாபிகள் மற்றும் அனைத்து
ஆடைவகைகளும்
**20% முதல் 70% வரை**
அதிரடி மலிவு விலையில்

சிறுவர் பெரியவர்களுக்கான
ஆடைகள் யாவும்
சிறப்பு விலையில் பெற்று
புத்தாண்டினை மகிழ்வாகக்
கொண்டாடுங்கள்!

எமது ஸ்தாபனத்தின் வழமையான
மலிவு விலையில் இருந்து
மேலும் 2% விலைக்கழிவில்
மளிகைப் பொருட்களை
பெற்று பயன் அடையுங்கள்



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள் இனிய தமிழ்புத்தாண்டு வாழ்த்துக்கள்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288



# T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

| | | | |
|---|---|---|---|
| RHEINISCHE STR 52<br>44137 DORTMUND<br>Tel:0231 819288 | Helmholtz Str.11<br>46045 Oberhausen<br>Tel:0208 202829 | Garten Str.29<br>48147 Münster<br>Tel: 0251 2301184 | Johannes Str.35<br>53225 Bonn Beuel<br>Tel. 0228 40377846 |

# யேர்மனியில் ஹம் நகரில் இந்துக்களுக்கான ஓர் மயானம்

யேர்மனிமனியில் முதல் முதலாக இந்துக்களுக்கு என ஒரு மயானம் உருவாக்கப்பட்டுள்ளது. இது போன்ற ஒரு மயானம் நோர்வே நாட்டிலும் உள்ளது.
ஒவ்வொரு மதத்தினைச் சார்ந்தவர்களுக்கும் அவரவர் மதங்களின் முறைப்படி இறுதிக் கிரிகை களை நிறைவு செய்வதே ஆத்மதிருப் தியைத்தருவதாக இருக்கும்.

ஹம் காமாட்சிஅம்பாள் ஆதீன கர்த்தா சிவ ஸ்ரீ பாஸ்கரக்குருக்களின் விடாமுயற்சியின் பயனாக இந்துக்களுக்கு தனியான மயானம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்துமதத்தின் பாரம் பரியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்துடன் பல மாதங்களுக்கு முன்பாக ஹம் நகரசபை அதிகாரிகளுடன் இந்துசமயத்தவர் ஒருவர் இறந்தால் அவரின் மரணச் சடங்குகளை செய்வது பற்றிய விளக்கங்களை கூறி, அதற்காக இந்து மக்களின் மரண சடங்குகளையும் இந்துசமய முறைப்படி கிரிகைகளை நடாத்தவும் இடம் கேட்டிருந்தார்.
கடந்த மாதம் இந்துமயானம் அமையுமிடத்தில் ஹம் மாநகரசபை அதிகாரிகளுடன் ஒரு சிறு சந்திப்பும் இடம்பெற்றது. இச்சந்திப்பில் ஹம் காமாட்சி அம்பாள் ஆலய ஆதீனகர்தா மற்றும், ஆன்மீகத்தென்றல் தம்பி.புவனேந்திரன் ஆகியோரும் நகரசபை அதிகாரிகள், மயானத்திற்குப் பொறுப்பான அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



இச்சந்திப்பின்போது இந்துசமயமும் அதன் கலை கலாச்சாரமும் மாறாத வகையில் மரணச் சடங்குகள் நிகழ்த்த நகரசபை அதிகாரிகள் ஒத்துழைப்புத் தருவதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

இந்த மயானத்தில் இறுதிக்கிரிகைகள் யாவும் செய்யும் வண்ணம் ஹம் காமாட்சிஅம்பாள் ஆலயம் செயல்படவுள்ளது.

இயற்கை எய்தியவர்களைப் புதைப்பதற்கோ, அவர்களின் அஸ்தியை பல வருடங்கள் பாதுகாப்பாக வைத்து இறந்தவர்களின் உறவினர்



வந்து பார்ப்பதற்கோ, வசதிகள் செய்யப்படவும் உள்ளது. மண்டபத்துள் 250 - 300 பேர் வரை இருக்கலாம்.
இறந்தவர்களை புதைக்க அல்லது அஸ்தி புதைக்குமிடம் 3 பரப்பில் இருந்து 4 பரப்பளவு காணியில் அமைந்துள்ளது. இந்த மயானம் ஹம் நகரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாது யேர்மனியில் எங்கு வாழ்ந்தாலும் இந்து மதத்தவர்கள் பயன்படுத்தலாம்.

மயானக் காணியில் சிறிய தடாகமொன்றும், ரிஷபம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.
இதற்கு இந்து மக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு ஹம் காமாட்சிஅம்பாள் ஆதீனகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளலாம்.

**செய்தி:- தம்பி புவனேந்திரன்.**

## தமிழையும் இந்தத்....

13ம் பக்கத் தொடர்ச்சி....

இளையராஜா இசையில் ராஜா ராஜ சோழன் நான்.. இன்றும் அத்தனை இளமையாக உணரலாம். பெரிய வெற்றிப் படம்.
வீடு (1988) தமிழின் ஆகச் சிறந்த பத்துப் படங்களில் ஒன்று வீடு. அர்ச்சனா, பானுச்சந்தர் நடித்த படம்
சந்தியா ராகம் (1989) நான் இயக்கியவற்றில் குறைந்த சமரசங்கள் கொண்ட படங்கள் இரண்டு. அவற்றில் சந்தியா ராகம் ஒன்று என முன்பு ஒரு முறை பாலு மகேந்திரா கூறியது நினைவிருக்கலாம். அர்ச்சனா, சொக்கலிங்க பாகவதர் நடித்த இந்தப் படத்துக்கு எல் வைத்தியநாதன் இசையமைத்திருந்தார். சிறந்த குடும்ப நலத்துக்கான தேசிய விருது இந்தப் படத்துக்குக் கிடைத்தது.
வண்ண வண்ணப் பூக்கள் (1992) மூன்று ஆண்டுகள் இடைவெளி விட்டு, பாலு மகேந்திரா ஒரு புத்தம் புதிய மலர்ச் செண்டோடு வருவது போல இந்த வண்ண வண்ணப் பூக்களை வெளியிட்டார். பிரசாந்த், வினோதினி, மௌனிகா நடித்த இந்தப் படத்துக்கு சிறந்த தமிழ்ப் படத்துக்கான தேசிய விருது கிடைத்தது. ஒவ்வொரு காட்சிக்கும் ஒரு தனி ட்யூனையே பின்னணி இசையாகப் போட்டு பிரமிக்க வைத்திருந்தார் இளையராஜா. கமர்ஷியலாகவும் பெரிய வெற்றி கிடைத்தது இந்தப் படத்துக்கு.

மறுபடியும் (1993) இந்தியில் வெளியான அர்த் படத்தின் ரீமேக்தான் இந்தப் படம் என்றாலும், ஒரு அசல் தமிழ்ப் படமாக இதைப் படைத்தார் பாலு மகேந்திரா. இளையராஜாவின் இசை ராஜாங்கம் இந்தப் படத்திலும் தொடர்ந்தது. நிழல்கள் ரவி, ரேவதி, ரோஹினி, அர்விந்த் சாமி நடித்தனர். மிக நுட்பமான உணர்வுகளைக் கூட அற்புதமாக படம் பிடித்தது பாலு மகேந்திராவின் கேமரா. இன்று பார்த்தாலும் ஈர்க்கும் படம், பாடல்கள்...
சதி லீலாவதி (1994) கமல் ஹாஸனின் தயாரிப்பில் உருவான படம் இது. மறுபடியும் படத்துக்குப் பிறகு பண ரீதியாக சிக்கலில் இருந்த பாலு மகேந்திராவுக்கு, உதவ கமல் எடுத்த படம் இது. இதுவும் இரண்டு பெண்டாட்டிக்காரன் கதைதான். கமல் - கோவை சரளா கவுரவ வேடத்தில் கலக்கினர். சீரியஸ் படம் எடுப்பவர் என அறியப்பட்ட பாலு மகேந்திராவின் உச்ச கட்ட நகைச்சுவைப் படம் இது.
அவுர் ஏக் பிரேம் கஹானி (1996) தான் எடுத்த முதல் படமான கோகிலாவை, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியில் அவுர் ஏக் பிரேம் கஹானி என எடுத்தார் பாலு மகேந்திரா. இளையராஜா இசையமைத்தார். ரமேஷ் அர்விந்த், ஹீரா, ரேவதி நடித்தனர்.
ராமன் அப்துல்லா (1998) இந்து - முஸ்லிம் மதங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஆள் மாறாட்டம் செய்யும் கதை. நகைச்சுவைக்கு முக்கியத்துவம் தந்து எடுக்கப்பட்ட படம். சிவகுமார், விக்னேஷ், கரண், ஈஸ்வரி ராவ், ருத்ரா நடித்திருந்தனர். அருமையான பாடல்கள் இடம்பெற்றிருந்தன.
ஜூலி கணபதி (2003) ராமன் அப்துல்லாவுக்குப் பிறகு 5 ஆண்டுகள் கழித்து பாலு மகேந்திரா இயக்கிய படம் ஜூலி கணபதி. திருமணமாகி பின் மீண்டும் நடிக்க வந்த சரிதாவின் மறு பிரவேசம். ஸ்டீபன் கிங்கின் நாவலைத் தழுவித்தான் இந்தப் படம் எடுத்தேன் என டைட்டிலிலேயே நேர்மையாகப் போட்டிருந்தார் பாலு மகேந்திரா. மிகக் குறைந்த செலவில் எடுத்து பெரிய வெற்றியைத் தந்த படம்.
அது ஒரு கனா காலம் (2005) அன்றைக்கு வேகமாக வளர்ந்த நடிகர் தனுஷைவைத்து பாலுமகேந்திரா எடுத்த படம் அது ஒரு கனா காலம். முதலில் இந்தப் படத்தை அழியாத கோலங்களின் நீட்சியாக எடுக்கத்தான் விரும்பினார் பாலு மகேந்திரா. தனுஷ் - ரம்யா கிருஷ்ணனின் இச்சையை மையப்படுத்தி கதை அமைக்கப்பட்டது. பின்னர் அது வேண்டாம் என முடிவானதால், தனது முந்தைய படமான நிரீக்ஷனாவை ரீமேக் செய்தார். இளையராஜா இசை. அதிகபட்ச கால தாமதம் காரணமாக படம் பெரிதாகப் போகவில்லை.

தலைமுறைகள் (2013) எட்டு ஆண்டுகள் இடைவெளிவிட்டு பாலு மகேந்திரா இயக்கிய படம் தலைமுறைகள். இயக்குநர் சசிகுமார்தான் தயாரிப்பாளர். பாலு மகேந்திராவே கதையின் நாயகனாக நடித்திருந்தார். "தமிழையும் இந்தத் தாத்தாவையும் மறந்திராதப்பா.." என உருகும் குரலில் சொல்லிவிட்டு மறைந்தார், க்ளைமாக்ஸில். உங்கள் தமிழ்ப் பேரன்கள் மறக்க மாட்டார்கள் பாலு சார்.. கண்ணீருடன் விடை தருகிறோம்!

தொடர்ச்சி 20 ம் பக்கம்

**Akchaya Digital Photography& Decoration**

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

**உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.**

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474







14ம் பக்த் தொடர்ச்சி

# ஆணுக்கு மாலை.



பண்டைய இசைமரபிலும் இசைக்கருவிப் பயன்பாட்டிலும் இசைக்கலைஞரின் தோற்றத்திலும் புதுமைகள் சேர்ந்தன. அவர்களை அரங்கில் சிறப்பிக்கும்போது செயற்கை மலர்ப்பூமாலைகளும் பூங்கொத்துகளும் வழங்கப்பட்டன.

அந்த வேளையில் மாலை ஆணுக்கும் பூங்கொத்து பெண்ணுக்கும் என ஓர் எழுதாமறையும் தோன்றி வலுப்பெற்றுவிட்டது. அந்த மரபு இன்றுவரை 'சிறப்புச் செய்தல்' சடங்கிலே தொடர்கிறது. இதுவும் மாற்றம் பெற்றுவருவதையும் காணமுடிகிறது. சிறப்புச்செய்ய வேண்டிய விருந்தினர்க்கு ஆடைகளும் பரிசாக வழங்கப்படுகின்றன. இந்நிகழ்வில் மீண்டும் ஒரு பண்பாட்டு மரபு பேணும் நடைமுறை பேணப்படுகிறது. ஆண்களுக்கு வேட்டி சால்வையும் பெண்களுக்குச் சீலையும் வழங்கப்படுகின்றன. செயற்கை மலர்களை விட மரபான ஆடைகளை வழங்குவது தமிழர் பண்பாட்டுப் பேணலில் ஒரு கவனம் ஏற்பட்டிருப்பதையும் உணர்த்துகிறது.

மீண்டும் இளவலின் கேள்வி தொடர்கிறது. இத்தகைய 'சிறப்புச் செய்தல்' நடைமுறை தொடரப்படவேண்டுமா? இன்றுள்ள முதியோரின் குழப்பமான செயற்பாடே இத்தகைய கேள்வியைக் கேட்கவைத்துள்ளது. ஒரு நிகழ்வுக்கு அதன் சிறப்பை எடுத்துக் கூறுவதற்கு சிறப்பு விருந்தினர்கள் வருகிறார்கள். அந்த விருந்தினர் பற்றி அறியாதவர் பலர் அவையில் இருப்பர். அறியாதவர்களுக்கு விருந்தினர் பற்றிய சிறப்பான அறிமுகம் ஒன்று தேவை. அதிலும் குறிப்பாக இளந்தலைமுறை யினர், வருகை தந்திருக்கும் சிறப்பு விருந்தினர் பற்றி நன்கறியவேண்டும்.

அதற்காக 'சிறப்புச் செய்தல்' நடைமுறை பயன்படவேண்டும். சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றுவதற்கு முன்னர் சிறப்புச் செய்தல் நடைபெறவேண்டும். விருந்தினர்களின் வாழ்க்கைத் துணைகளும் அரங்கிற்கு அழைக்கபட்டுச் சிறப்புச் செய்வதே சாலவும் நன்று. இவ்வாறு செய்வதால் எதிர்காலத்தில் நமது இளந்தலைமுறையினரும் சிறப்புச் செய்தலின் இன்றியமையாமையை உணர்ந்து அதனைத் தொடர்ந்தும் செயற்படுத்துவர். எனவே இன்று 'சிறப்புச் செய்தல்' நடைமுறையைச் செயற்படுத்துவோர் மிகவும் கவனத்தோடு இருக்கவேணடியுள்ளது.

குறிப்பாகப் புலம்பெயர் நாடுகளில் இந்த நிகழ்வு திசைமாறிப் போய்விடாமல் பேணப்பட வேண்டும். பல்வேறு பண்பாட்டாளர் ஒன்றுகூடி வாழும்போது வேறுபட்ட பண்பாளர்கள் விருந்தின ராகத் தமிழர் விழாக்களுக்கு வருகைதரும்போது குழம்பவேண்டிய தேவையில்லை. அவர்களையும் தமிழர் பண்பாட்டு மரபின் வழிநின்று சிறப்புச் செய்யலாம். அவர்கள் மனம் மகிழ்வர். தமிழர் பண்பாட்டை நமது இளைய தலைமுறை நாணமின்றிக் கையேற்க நாம் வாய்ப்பளிக்க வேண்டும். இதுபற்றி எல்லோரும் ஒரே எண்ணமுடையவராக இருப்பின் எப்படிச் சிறப்புச் செய்வது என்ற கேள்விக்கு இடமிருக்காது.

# கடுகுமணி ....06

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**



**கேட்கிறானே என்று எதையும் கொடுக்கலாமா?**

வீட்டிலே பால் இல்லை. உடனடியாகப் பாலைக் கறந்து கொடுக்க ஆடோ மாடோ வீட்டில் இல்லை. குழந்தை பாலுக்கு அழுகின்றது. பெற்ற தாய்க்கோ பால் கொடுக்க அவள் முலை சுரக்கவில்லை. அவள் உணவு உண்ண முடியாத வறுமை.

இந்த வேளையிலே குழந்தையின் தந்தை சேர மன்னனிடம் ஓடோடிச் சென்று தன்னுடைய நிலையைக் கூறி பால் சுரக்கும் ஓர் ஆடு தரும்படி இரந்தான். மன்னனோ அவனுக்குப் பொன்னாலே செய்த ஒரு சிறிய ஆட்டினைக் கொடுத்தான்.
இது எவ்வளவு பொருத்தமற்ற செயலாக இருக்கிறது என நாம் எண்ணக் கூடும். இதற்கு இந்நிகழ்வு பற்றிப் பாடிய புலவர் மறுமொழி கூறுகின்றார்.


பால்சுரக்கும் ஆட்டினை நான் கேட்க பொன்னாலே செய்த ஆட்டினை இந்த மன்னன் தருகின்றானே என்று அந்த ஏழைத் தந்தை கலங்கலாம். ஆனால் வசதியில்லாத ஏழை எதையும் கேட்கலாம். கொடை கொடுக்கும் கொடையாளி தன்னுடைய தகைமைக்கு ஏற்பவே கொடை கொடுப்பான்.

சுரப்பாடு கேட்டுவிட்டானே என்று ஓர் ஆட்டைக் கொடுப்பது கொடை யாளியின் தகைமையைக் குறைத்துவிடுமல்லவா? எனவேதான் தங்க ஆட்டைக் கொடுக்கிறான்.

**பி.கு. மன்னன் மிகுந்த புத்திசாலித்தனமாகத்தான் கொடை கொடுத்துள்ளான். சிறிது நேரம் சென்றாலும் பரவாயில்லை தங்க ஆட்டை விற்றுவிட்டு பல ஆடுகளை வாங்கிவிடலாமல்லவா? அந்த ஏழைக்குடும்பத்தின் வறுமை போய்விடும்.**




**உங்கள் மனைவி என்ன செய்கின்றா?**
**கணவன்: அவ ஒன்றும் வேலைக்குப் போவதில்லை!**
**சும்மாதான் வீட்டில் வெறும் House wife ஆக இருக்கின்றா!**

KAILAS
Fisch- Feinkost
டோட்மூண்ட் நகரில் கடல் உணவுக்கு ஓர் கடை கைலாஸ்
Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை
Tel:0231 137 433 95
Handy:0163 47 60 857,0163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de
Adler Str.05
44137 Dortmund
ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!
துரித பணமாற்றுச் சேவை
அதிகூடிய பெறுமதியில் தாயகத்தில் பணம் பெற எம்மை நாடுங்கள்!
VALUTRANS MONEY TRANSFER
NSB National Savings Bank HNB Bank of Ceylon BOC Instant Cash
இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம் இங்கு வளங்கும் பணத்திற்கு

பசுமையான உடன் மரக்கறி வகைகளுக்கும் எம்மை நாடுங்கள்

# கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களின் 'இதுவரை" நூல் அறிமுகவிழா!



கனடா உதயன் பத்திரிகை ஆசிரியரான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் "இதுவரை" நூல் அறிமுக விழா வெகு சிறப்பாக இடம்பெற்றது. கடந்தமாதம் (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் Markham , 401, 231 Milner Ave. Toronto. ON அமைந்துள்ள Peter & Paul Banquet Hall இல் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.
ஏராளமான வாசகர்கள், கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள் என்று பலதரப்பட்டோரும் மேற்படி நிகழ்வில் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். வாசகர்கள் பலரும் வரிசையில் நின்று புத்தகத்தை பொறுமையுடன் வாங்கிச் சென்றனர். விழாவிற்கு பிரதம விருந்தினராக சுவிஸ்நாட்டில் இருந்து எழுத்தாளர் கல்லாறு சதீஷ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மேற்படி நூல் வெளியீடு கடந்த ஆண்டு மார்கழிமாதம் லண்டன் நகரில் இடம்பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் படங்களையும் காண இங்கே காணலாம்.

கவிநாயகரின் 80வது பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந்த கலை இலக்கிய நண்பர்கள் கனடாவில் நன்கு அறியப்பட்ட கவிநாயகர் கந்தவனம் அவர்களின் 80வது பிறந்த நாளை கடந்த மாதம் ஸ்காபுறோவில் கலை இலக்கிய நண்பர்கள் பலர் கொண்டாடி மகிழ்ந்தனர்.
கனடா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் பலர் அங்கு கலந்து கொண்டு கவிநாயகரை வாழ்த்தினர். இங்கே காணப்படும் படத்தில் வைபவத்தில் கலந்து கொண்ட நண்பர்கள் பிரமுகர்கள் ஒன்றாக நிற்பதையும் கனடிய பிரதமரின் வாழ்த்துச் செய்தியை அரசியல் பிரமுகர் திரு கென் கிருபா வழங்குவதையும் காணலாம். (சத்தியன்)




தாயகத்தில் வெற்றிமணி வெளிவந்த காலம் தொட்டு இன்று வரை வெற்றிமணியில் தன் படைப்புக்களைப் பகிர்ந்து வருபவர் கவிநாயகர் கலாநிதி வி.கந்தவனம் அவர்கள். 1995 ஆண்டு வெற்றிமணி யேர்மனியில் அவருக்கு மணிவிழா எடுத்து மகிழ்ந்தது. இன்று முத்து விழாக்காணும் பாவலரை வெற்றிமணி தமிழ்போல் என்றும் இளமையாக வாழ வாழ்த்துகின்றது.

## காதலும் ....!

15ம் பக்கத் தொடர்ச்சி




Mark Elliot-Zuckerberg.

முக்கியமாக உங்களது தனிப்பட்ட விடயங்களை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளாமல் உங்களுடன் தனித்துவமாபகப் பேணவேண்டும். முகப்புத்தகத்தில் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கம்போது உங்கள் நண்பர்களது எண்ணிக்கை ஆயிரங்களைக் கடக்கவேண்டும் என்ற பேராசை யைவிட்டு. நிதானமாக உங்கள் நண்பர்களை தெரிவு செய்யவேண்டும். ரஜினியின் பாஷையில் சொல்வது என்றால் "ஒரு நண்பன் ஆயிரம் நண்பனுக்கு சமனாக" இருக்கவேண்டும். முகப்புத்தகத்தில் இரு பிரிவுகளாக வகுக்கவேண்டும். ஒன்று குடும்பம் மற்றது நண்பர்கள். இதில் எதில் எதில் என்ன பேசலாம் படம் போடலாம் என்பதனை நீங்கள் சுயமாகச் சிந்தித்து முடிவு செய்யவேண்டும்.

உங்கள் அந்தரங்க விடயங்களை முகப்புத்தகத்தில் பகிர்வதை முற்றாக தவிர்க்வேண்டும். இன்னும் ஒரு சிரிப்பான விடயம். எல்லாவற்றிற்கும் **(Like)** லக் அமத்தி அமத்தி மரண அறிவித்தலுக்கும் லக் அமத்திடும் வழக்கம் இன்று வேகமாகப் பரவி வருகின்றது.

மொத்தத்தில் முகப்புத்தகம் நல்ல ஒரு புத்தகமாகவும் அறிவுக் களஞ்சியமாவும், நண்பர்கள் கூடிமகிழும் கூடமாகவும் இருக்கவேண்டும். எல்லை மீறினால் அதன் விழைவுகள் கற்பனை செய்துகூடப் பார்க்முடியாத கொடியதாக இருக்கும். முகப்புத்தகத்தில் முழுநேரம் இருக்காதீர்கள். நீங்கள் உங்கள் முகங்களையே மறந்திடுவீர்கள்.
முகப்புத்தகத்தில் அளவாக அறிவாகப் பயன் படுத்துங்கள் முழு உலகமும் உங்கள் அருகில் இருப்பதாக உணர்வீர்கள்... Face book உலகில் உள்ள புத்தகங்களில் தினமும் திறக்கும் புத்தகம் எது என்றால் அது நிச்சயமாக இந்த முகப்புத்தகம்தான். இத்ப்புத்தகத்தை தான் படிக்கும் காலத்தில் நான்கு மாணவர்களுடன் இணைந்து தயாரித்தவர் Mark Elliot-Zuckerberg.

இவர் கலிபோனியாவில் Havet University இல் படித்துக்கொண்டு இருந்தவேளை இதனைத்தயாரித்தார். இவர் 14.05.1984 ஆம் ஆண்டு பிறந்தவர். இவருக்கு சிறுவயதில் இருந்தே Computur இல் ஆர்வம் 12 வயதில் Alfari Basic பாவித்து ஒரு Massaging Program தயாரித்தவர். அதன் பெயர் Zuck Net இவரது அப்பா Dental office இல் இந்த Programe ஐப் பாவித்தார் இவரது தாயார் phychiatrist ஆக இருந்தவர்.
இவரது ஆர்வத்தைக்கண்டு ஒரு Private computur tutor ஒழுங்கு பண்ணினார். இப்படி இவருக்குள் இருந்த ஆர்வத்தை பெற்றவர்கள் மெல்லத் தட்டிக்கொடுக்க 2004 ஆம் ஆண்டு இந்த Face book இன் முக்கியமான Cheirman ஆனார்.. உலகிலேயே இரண்டாவது வயது குறைந்த இளமையான பில்லியனர் இவர்தான். அவரது சொத்து 2013 இல் 27,9 Billion Dollers ஆகும். அவர் முகப்புத்தகத்தை உருவாக்கி செல்வந்தன் ஆனார்.
நாம்! நல்லதும் கெட்டதும் நமது செயல்களில் உண்டு. நன்மைக்கே பாவிப்போம்.

சுஜிதா நிறுவனத்தினர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தரத்திலும் சுவையிலும் தடம் பதித்துள்ளனர்.
Sujitha Frozen Food
சுவையான உணவிற்கு சுஜிதா
அனைத்து தமிழ் வர்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.


S.J.N Imports
Lambertusstr.80
52441 Linnich
Tel.024625557
Handy.01773268150,01638883308
Email.sjnfastfood@yahoo.de, web:- www.sujitha.eu

# ஜேர்மனியில் 380 அடி உயரமான பல்கலைக்கழக கட்டிடம் வெறும் பத்து செக்கனில் தகர்ப்பு !!!

## அமெரிக்கா இரட்டைக் கோபுரத்தின் தாக்குதல் மையமே இங்கும்!

செப்ரம்பர் 11 என்றால் சும்மா கூகுளுக்கும் தெரியும் 'அது அமெரிக்காவில் இரணை மாடிக்கட்டிடம் மீது அப்கானிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய விமானத்தாக்குதல் என்று. அந்த தாக்குதல் சும்மா நடத்தப்படவில்லை. எங்கு அடித்தால் எங்கு விழும் என்ற கணக்கு சரியாக கணக்கிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்றே கருத இடம் உண்டு.

அரசுகளை விட புத்திக்கூர்மை மிக்கவர்களாக, சிலசமயம் தீவிரவாதிகள் நடப்பதும் உண்டு. அதனை அரசுகள் ஒரு பாடமாக்கொண்டு பின்பு நடப்பதும் சகஜம்.



ஜேர்மனியில் 380 அடி உயரமான பல்கலைக்கழக கட்டிடம் தகர்ப்பும் அது தகர்க்கப்பட்ட விதமும்,எமக்கு இரட்டைக் கோபுரத்தின் பாடம் வெகுவாகப் பயன்படுவதைக் காணமுடிந்தது. எங்கு அடித்தால் எப்படி விழும் என்ற அந்தப் பாடத்தின்படி நடத்தப்பட்ட தகர்ப்பு நடவடிக்கைபோலவே இதுவும் காட்சியளித்தது
பிராங்பூட்டிலுள்ள பழைய பல்கலைக்கழக கட்டிடமொன்று கட்டுப்பாட்டின் கீழ் வெடி வைத்து கடந்த மாதம் தகர்க்கப்பட்டுள்ளது.

41 ஆண்டுகள் பழைமையான மேற்படி 50,000 தொன் நிறையுடைய அதியுயர கோபுர கட்டிடத்தில் 32 ஆவது மாடியில் 1500 துளைகள் இடப்பட்டு







அவற்றினுள் 950கிலோ கிராம் நிறையுடைய வெடிபொருட்கள் உட்செலுத்தப் பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.
இது வெடி வைத்து தகர்க்கப்பட்ட ஐரோப்பாவிலேயே மிகவும் உயரமான கட்டிடமாக விளங்குகிறது.

அந்தக் கட்டிடம் வெடி வைக்கப்பட்டு 10 செக்கன்களில் தரைமட்டமாகியது. மேற்படி கட்டிடத்தின் தகர்ப்பின்போது அருகிலுள்ள கட்டிடங்களுக்கு சேதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அந்தக் கட்டிடத்தைச் சுற்றி 4 மீற்றருக்கு உயரமான தடுப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

இந்த வெடிப்பின்போது ஏற்படும் புகை மற்றும் சாம்பலால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதைத் தடுக்க, அதன் மீது பெருமளவு நீரப் பிரயோகத்தை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் இந்த தகர்ப்பு நடவடிக்கையையொட்டி, அந்த கட்டிடத்தைச் சூழவுள்ள 250 மீற்றர் தூரத்துக்குள் வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அந்த இடத்தில் இரு புதிய அலுவலகக் கட்டிடங்கள் இரண்டை அமைக்கும் நோக்கிலேயே இந்த தகர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.







# உலகில் அதிவேகமான லொறி! மணிக்கு 643 கி.மீ!!!

## 3 ஜெட் விமானத்தின் என்ஜின்களைப் பொருத்தி பாயுது பாருங்கள்!!!

ஒட்டாவா, பிப்.19-
உடம்பில் ஏதும் வருத்தம் வந்து, ஒரு உறுப்பு செயல் இழந்தால் அதற்கு மிருகத்தின் உடலில் உள்ள உறுப்பை எடுத்து மனிதனின் செயல் இழந்த உறுப்புக்குப்பதிலாக பொருத்த முயற்சி எடுத்து வருகின்றது மனிதனது மூளை. எலிகளின் உடலில் மனிதனின் கலங்களைச் செலுத்தி எதோ எதோ விஞ்ஞான முறைகளில் முயற்சிசெய்து அக்கலங்களை வளர்த்து மனிதனுக்கு தேவையான உறுப்பினை தயாரிக்கவும் முயல்கின்றான்.

சுருக்கமாகச் சொன்னால் மனிதனுக்கு வேண்டிய உதிரிப்பாகங்களை ( மனிதனும் உயிரைச்சுமந்து செல்லும் ஒரு வாகனம்தான்) வேறு உயிரனங் களில் எடுத்தோ வளர்த்தெடுத்தோ அதனைப் பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றான்.

இப்போ மனிதன் தான் உருவாக்கிய வாகனங்களில் இருந்து அதன் சக்திவாய்ந்த எஞ்ஜின்களை எடுத்து வேறு வாகனங்களுக்குப் பூட்டி, அதனையும் சக்திவாய்ந்தாக மாற்றிட முயற்சிக்கின்றான்.

விமானத்தின் வேகத்தில் ஒரு லொறி செல்ல வேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும்.
அதனைச் செய்துள்ளார் பாருங்கள். இப்போ கண்காட்சி நாளை நாம் காணும் தெருக்காட்சியாக இது அமையலாம்.

கனடாவின் ஒண்டாரியோ நகரில் நவீன வாகனங்களுக்கான கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் பங்கேற்ற அதிநவீன லாரி பார்வையாளர்களின் கண்களை மட்டுமின்றி கருத்தையும் கவர்ந்திழுத்தது.

இந்த லாரியின் உரிமையாளரான நியெல் டார்னெல் என்பவர் 1957-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'செவெர்லெட்' லாரியின் வடிவமைப்பை மாற்றி, அதில் அமெரிக்க விமானப்படைக்கு சொந்தமான 3 பழைய ஜெட் விமான என்ஜின்களை பொருத்தி, (The modified '57 Chevy is powered by three Pratt & Whitney J34-48 jet engines taken from US Navy training jets.) ஒரு மணி நேரத்தில் 643 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் அசுர வாகனமாக மாற்றியுள்ளார்.




இன்றைய சாலைகளில் ஓடும் கனரக லாரி என்ஜின்களின் அதிகபட்ச குதிரை இழுவைத் திறன் (ஹார்ஸ் பவர்) (400mph) .க்கும் குறைவாகவே உள்ள நிலையில், நியெல் டார்னெல் உருவாக்கியுள்ள இந்த அதிநவீன லாரியின் இழுவைத் திறன் 36 ஆயிரம் ஹெச்.பி. **(36,000hp)** என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
இந்த திறனுடன் ஆறரை வினாடியில் கால் மைல் தூரத்தை கடந்து 'ஷாக்வேவ்' (Shockwave), என பெயரிடப்பட்டுள்ள இந்த லாரி புதிய சாதனையை படைத்துள்ளது. இந்த கணக்கீட்டின்படி பார்த்தால் ஒரு மணி நேரத்தில் 400 மைல் (643 கிலோ மீட்டர்) தூரத்தை இந்த லாரி சுலபமாக கடந்து விடும் என்பது தெளிவாகிறது என்று வாகன துறை பொறியாளர்கள் (ஆட்டோமொபைல் என்ஜினீயர்கள்) வியக்கின்றனர். இதன் வேகம் யப்பானின் Bullet train (443 km ) வேகத்தையும் மிஞ்சிவிட்டது.

BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide
Offnungsziten:
Mo-Sa.10.00- 20.00 uhr
கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது.
இலங்கை, இந்தியா, கனடா உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சீட்டுக்களை பெற்றுத்தருகின்றோம்.
- நம்பிக்கையும் நாணயமும் சலுகையும் ஒரே இடத்தில் -
இந்தியா செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு:
BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam // Adler Str. 30, 44137 Dortmund
Tel.: 0231-10876361, 0231-98539416 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369
Öffnungszeiten: Mo-Sa 10:00-20:00 Uhr // Email: bcntravels@hotmail.de, Web: www.bcnugonline.com

எமது இன்னுமொரு சேவை!
நீங்கள் வீடு கட்ட
அல்லது வீடு வாங்க
முடிவெடுத்து விட்டீர்களா ?
உங்களுடைய காப்புறுதிகள்
அனைத்தும் அதி உச்ச நலன்களை
தருபவையாகச் செய்துள்ளீர்களா ?
கூடிய கடனா ? அதிகளவு வட்டியா ?
அல்லது இரண்டுமா ?
கேள்விகள் உண்டா ?
தொடர்புகளுக்கு: Tel.: 0231-10876361
0231-58988630

# ஐரோப்பாவில் பத்தாவது அகவை கண்ட ஐரோப்பியத் தமிழ் வானொலி..!



யேர்மனிய நாட்டில் இருந்து இயங்கி வரும் ஐரோப்பியத் தமிழ் வானொலி, தனது பத்தாவது அகவையில் 12.02.2014 அன்று கால் பதித்தது. அவ்வக மகிழ்வைக் கொண்டாடும் நோக்குடன், வானொலியின் வளர்ச்சியில் பங்குகொண்ட அனைத்து உறவுகளையும் ஒருசேரக் கூடச் செய்து, மிகச் சிறப்பான உபசார விழாவொன்று 22.02..2014 சனிக்கிழமை மாலை, வானொலி நிர்வா கத்தினரால் யேர்மனியின் Bochum நகரில் நடாத்தப் பட்டது.

வானொலியின் ஆரம்ப மற்றும் முதல் அறிவிப்பாளர் என்ற பெருமை கொண்ட திரு.அன்பு அவர்கள் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார். அகவணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. விழாவின் வரவேற்புரையை , வானொலி யின் இளம் அறிவிப்பாளர் செல்வி . துஷாரா அவர்கள் நிகழ்த்தினார்.விழாவின் ஆரம்ப நிகழ்வாக, வானொலியின் நீண்ட நாள் நேயர்களை மேடைக்கு அழைத்து, அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வு நடைபெற்றது. தமது இனிமை நிறைந்த உணர்வுகளை உறவுகள்,. உரையாக , கவிதை யாக , பாடலாக வெளிப்படுத்தியமை சிறப்புக் குரியதாக அமைந்தது.

ஐரோப்பிய மண்ணில் இயங்கும் வானொலிகளின் சரித்திரத்தில், முழுக்க முழுக்க இளம்படையின் அணி வகுப்பாக , இவ்வறிமுக நிகழ்வு நடைபெற்றமையானது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

தொடர்ந்து, ஒவ்வொரு வருட நிறைவிலும் வானலையில் புதுமைகளைப் புகுத்தும் நிர்வாகம், இம்முறை இடைவிடா இசை மழை என்ற பெயரில், கைத்தொலைபேசித் தரவிறக்கி மூலமான இருபத்துநான்கு மணி நேர இசை மழை ´´என்ற புதுமையை தமது நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது. ஐரோப்பியத் தமிழ் வானொலியின் நிர்வாக இயக்குனர் திரு.இரவீந்திரன் அவர்கள் இச்சேவையை அறிமுகம் செய்து, ஆரம்பித்து வைத்தார். சமவேளையில், உறவுகளுக்கான உபசரிப்பும், இரவு உணவும் வழங்கப்பட, மேடையில், பாடல் நிகழ்வு, வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்வுகள் கூடியிருந்த உறவுகளுக்கு இனிமை நிறைந்ததாக அமைந்தன.

எதிர்பார்ப்பினை விடவும், அதிக உறவுகளின் வருகை யால், மண்டபத்தில் இடப்பற்றாக்குறை ஏற்படினும், உறவுகள் அனைவரினதும் அன்பிலும், ஆதரவிலும், திளைத்த ஐரோப்பியத் தமிழ் வானொலி நிர்வாகம் , மிகவும் உளமகிழ்வுடன் தமது நிகழ்வினை இரவு 11.00 மணியளவில் நிறைவு செய்தனர்



அப்சரன் கணேசலிங்கம்

## 10 வது பிறந்த நாள் வாழ்த்து!

யேர்மனி Dortmund நகரில் வசிக்கும் திரு திருமதி கணேசலிங்கம் பிரிய தர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அப்சரன் கணேசலிங்கம் (19.02.2014) தனது 10 வது பிறந்த நாளை 01.03.2014 அன்று

Garfenverein Nord,
Eber Str.46
44145 Dortmund இல் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை பாசமிகு அப்பா, அம்மா ஆசை அண்ணா அபினாஸ், அன்புத் தங்கை ஆசிகா, மற்றும் அன்பான உற்றார் உறவினர் நண்பர்கள் யாவருமே,


அதிசயிக்கக்கூடிய அதிசயம் நீ
எல்லோராலும் வாழ்த்தக்
கூடிய சுத்த சூரியன் நீ
பல நூறுவிழாக்கள் கண்டு
புகழ் பல பெற்று
வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

**கணேஸ் குடும்பத்தினர்.**




ஸ்ரீ காளி மாதா ஜோதிட மையம்

பண்டித் துளசி பிரசாத்



கிழமை 7 நாளும் 9.00 மணி முதல்
இரவு 20.00 மணிவரை வரலாம்

Astrology Prediction is God Gift, Passed down from generation to Generation - Meet me once & change your Future

ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்
வியாபாரங்கள்–எதிரிகள்–உடல்நிலை–வேலை–குழந்தையின்மை – திருமணம்–பணம் குடிபோதை–காதல்–விசா–விவாகரத்து – வழக்குகள்–கண்திருஷ்டி – குடும்ப ஒற்றுமை–படிப்பு–வாகனப்பொருத்தம் – மற்றும் பல... பிரச்சனைகளுக்கு...

செவ்வாயும் வெள்ளியும் இலவச ஜோதிட ஆலோசனை!

இவர் அமெரிக்கா கனடா அவுஸ்திரேலியா நியூஸ்லாந்து சிங்கப்பூர் மலேசியா இலங்கை சென்று புகழ்பெற்றவர் முதல் முறையாக யேர்மனியில் உங்களைச் சந்திக்கின்றார்.

0152 18 96 94 47

Heintzmann Str. 26, 45143 ESSEN, Germany
Mobile: 015218969447 / 015143551331
Mail: tthulasi7@gmail.com / skype thulasiprasad123




## திருமண வெள்ளி விழா வாழ்த்து!

18.03.2014

**திரு.திருமதி. தற்பரானந்தன் பாக்கியலட்சுமி (பரிமளா)**

இலங்கையில் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யேர்மனி சுவெல்ம் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி. **தற்பரானந்தன் பாக்கியலட்சுமி (பரிமளா)** தம்பதிகள் 18.03.2014 அன்று திருமண வெள்ளிவிழா காண்கின்றார்கள். இவ் இனிய தம்பதிகள்

**வள்ளுவனும் வாசுகியும் போல்**
**தமிழும் இனிமையும் போல்**
**பல்லாண்டு பல்லாண்டு இனிதே**
**வாழ வாழ்த்துகின்றோம்.**

அன்புடன்,பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.
வாழ்த்துத் தகவல்: பிள்ளைகள் : 02336 6442

# உளநல பணியில் ஒழுக்கவியல்







**Dr. புஷ்பா கனகரட்ணம்** , Ph.D., C. Psych.
Clinical Psychologist

"வாழ்க்கையையே தொலைத்துவிட்டாய், இப்ப சாவியையும் தொலைத்து விட்டாயா?" கேட்டது ஒரு தமிழ் சேவை வழங்குனர். கேட்கப்பட்டது, கணவரிடம் இருந்து பிரிய விரும்பி உதவி கேட்ட ஒரு தமிழ் பெண்ணை. இந்த பெண் கார் சாவியை தவற விட்டதால் குறித்த நேரத்தில் சந்திப்புக்கு (appointment) போகமுடியவில்லை. இந்த விடயத்தை தொலைபேசியில் சொல்ல எத்தனித்தபோது தான், சேவை வழங்குபவரிடம் இருந்து இப்படி ஒரு பதில் வந்தது. அதிகார நிலையில் இருப்பவர்கள் மனப்பாங்கை சொல்லி என்னிடம் அழுதார் இந்த பெண்.

ஒரு வைத்தியரோ, தாதியோ, உளநல பணி புரிபவரோ, அல்லது வக்கீலோ, எந்த சேவைபுரியும் இடத்தில் இருந்தாலும், சேவை பெறுபவருக்கும், சேவை அல்லது உதவி மற்றும் ஆலோசனை வழங்குபவருக்கும் இடையில் ஒரு அதிகார சமமின்மை (power imbalance) இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதன் அடிப்படையில் தான் பல துறைசார் ஒழுக்கவியல் வழிகாட்டுகள் (ethical guidelines) உருவாக்கப்படுகின்றன. இந்த வழிகாட்டுதல் ஒரு சேவை பெறுபவர் உரிமையையும், பாதுகாப்பையும், நன்மையையும் மனதில் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. The College of Psychologists of Ontario எப்படி உளநல நிபுணர்கள் துறைசார் ஒழுக்கத்தை நிர்ணயிக்கிறதோ, அப்படி அந்தந்த துறைக்கு (வைத்தியரோ, வக்கீலோ...) உரிய Colleges, சேவை பெறுபவர்கள் பாதுகாப்பு கருதி தம் உறுப்பினர்கள் ஒழுக்கமான முறையில் சேவை வழங்கவேண்டிய கட்டுப்பாடுகளை விதிக்கிறது. சேவை பெறுபவர்கள் என்ற முறையில், ஒரு சேவை வழங்குனரின் ஒழுக்கவீனத்தை பற்றி நாம் இந்த Colleges க்கு புகார் செய்ய நமக்கு முழு உரிமை இருக்கிறது.

அடிப்படையில், மனித நேயமும் மரியாதையும் குறையும் போது, சேவையின் தரமும் குறைகிறது. உதவிபுரியும் துறைகளில் (hebing professions) பணிபுரிய விரும்புபவர்கள், அந்த விருப்பத்தோடு தொழிலை தேர்ந்தெடுக்க வேண்டும். இலங்கையில் நாம் பழக்கப்பட்ட சர்வகலாசாலை அனுமதி முறையோ, தரப்படுத்தல் முறை (standardization). இந்த முறைப்படி, A/L இல் உயர்ந்த புள்ளிகள் எடுப்பவர்கள் மருத்துவ பீடத்திற்கு அனுமதி வழங்கப்படுவார்கள். அடுத்த தரத்தினர், Dental, அதற்கும் அடுத்த தரத்தினர், Bio Science. தெரிவு செய்யும் துறைக்கு சம்பந்தப்பட்டவர் தகுதியானவரா என்பது பரீட்சை புள்ளிகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். மேலைநாடுகள் என தமிழர்கள் புலம்பெயர்ந்த பின்பும் கூட, பணத்தையும், கௌரவத்தையும் ஒரே குறிக்கோளாக கொண்டே சில இளைஞர்கள் படிப்பை தேர்ந்தெடுக்கிறார்கள், அல்லது பெற்றோர்களால் தேர்ந்தேடுக்க வைக்கப்படுகிறார்கள். தெரிவு செய்யும் துறை அவரவர் கல்வித்தகைமைக்கு மட்டுமல்ல, அவரவர் ஆளுமைக்கும் விருப்பத்திற்கும் உரியதாக அல்லவா இருக்கவேண்டும்? போதாததற்கு, எம் போன்றவர்கள் நாடுகளில் (ஆசிய), எமக்கே உரிய ஒரு எகத்தாள மனப்போக்கு இருக்கிறது.

எம்மை விட நலிந்தவர்களிடம், அல்லது காயப்படுத்தப் படக்கூடியவர்களிடம், அதிகாரத்தை காட்டவும், நம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யவும், நாம் தயங்குவதில்லை. எம்மவர்களின் சில வைத்தியர் காரியாலயங்களின் வரவேற்பறை பணியாளர்களே இதற்கு சாட்சி. பல தமிழர்கள், முக்கியமாக, ஆங்கில மொழியில் சற்றே புலமை உள்ளவர்கள், வேற்று இன துறைசார் நிபுணர்களை விரும்புவதற்கு இதுவே காரணம். வேற்று இன சேவை வழங்குனர்கள், தம்மவர்களை விட, தம்மை கண்ணியமாக, மரியாதையாக, நடத்துவார்கள், தம் அபிப்பிராயங்களுக்கு செவி சாய்ப்பார்கள், என அவர்கள் நம்புகிறார்கள். இது நம் சமூகத்திற்கு ஒரு தோல்விநிலை தான்.

எது எப்படியோ, துறைசார் ஒழுக்கசீர்கேடுகள் நம்மவர்களுக்கு மட்டுமே உரிய பிரச்சனை அல்ல. இது பல்சமூகங்களிலும் நடக்கிறது. சேவை பெறுபவர் உதவி நாடி செல்கிறார் அதே சமயம், வேறு எந்த சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தாத தனிப்பட்ட விடயங்களை, சேவை வழங்குபவரிடம் வெளிப்படுத்துகிறார். இதனால், அடிப்படையிலேயே, ஒரு அதிகார சமமின்மை ஏற்பட்டுவிடுகிறது. இந்த சந்தர்ப்பங்களில், துறைசார் எல்லைகளை (professional boundaries) மதித்து நடப்பது சேவை வழங்குபவரான வைத்தியரினதோ, வக்கீலினதோ, உளநல நிபுணரினதோ பொறுப்பாகிறது.
சேவை பெறுபவர்கள் இந்த எல்லைகளை புரிந்துகொள்ளாது சில தேவைகளை முன்வைத்தாலும், அதனை தெளிவு படுத்த வேண்டியது சேவை வழங்குபவர் கடமை ஆகும். துறைசார் தவறுகள், எல்லை மீறல்கள், பலவகை. சேவை வழங்குவருடனான உங்கள் தொடர்பில், சில பொதுப்படையான எல்லை மீறல்களை நீங்கள் எப்படி அடையாளம் காணலாம்? சேவை வழங்குபவர் பற்றிய தனிப்பட்ட தகவல் வெளிப்பாடு ஒரு நண்பர் சொன்னார், "என் அம்மாவின் குடும்ப வைத்தியருக்கு அம்மாவை பற்றி தெரிந்ததை விட, அம்மாவுக்கு வைத்தியரை பற்றி கூடத்தெரியும்." இப்படியான சந்தர்ப்பங்களில் பல சிக்கல்கள் ஏற்படலாம். சேவை பெறுபவரான நீங்கள், சேவை வழங்குபவருக்கு ஆறுதலும் ஆலோசனையும் கொடுக்கவேண்டியதாக, உங்கள் பாத்திரம் மாறிவிடும். உங்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்த்த சேவை, கிடைக்காமல் போய்விடும். ஆகவே, உங்களுக்கு நன்மைபயக்காத தம் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட தகவல்களை சேவை வழங்குபவர் உங்களிடம் வெளிப்படுத்தக்கூடாது.
பொருள் (gifts) பரிமாற்றம் நன்றியின் அடையாளமாக கொடுக்கப்படும் பெறுமதி குறைவான பொருட்களை ஏற்றுக்கொள்ளலாமே ஒழிய, பெறுமதியில் கூடிய பொருள்களை பெற்றுக்கொள்வது சேவை வழங்குபவர் நியமத்திற்கு ஏற்புடையதல்ல சேவை பெறுபவர் ஒரு பொருளை பெறும்போது, தானும் ஏதாவது திருப்பி கொடுக்கவேண்டும் என்ற அழுத்தம் அவருக்கு ஏற்படும். அதே போல், சேவை வழங்குபவர் ஒரு பொருளை பெறும்போது, சம்பந்தப்பட்ட சேவை பெறுபவருக்கு தனிப்பட்ட கவனம் அல்லது சேவை வழங்கவேண்டும் என்ற அழுத்தம் அவருக்கு ஏற்படும்.

**தொடர்ச்சி 26ம் பக்கம்**



உளநல பணியில் ஒழுக்கவியல் ..... 25 ம்பக்கத் தொடர்...

## இரட்டையான உறவுமுறை!

இப்படியான சிக்கல்கள், தொடர்பாடலில் பாதிப்புகளை ஏற்படுத்துவது நிச்சயம். ஒரு வைத்தியரோ, உளநல சிகிச்சை புரிபவரோ, அந்த பாத்திரத்தை தாங்கும் வேளை, சேவை பெறுபவரோடு இன்னொரு அதிகாரபூர்வமான அல்லது உணர்வுபூர்வமான தொடர்பில் இருக்கும்போது, சம்பந்தப்பட்ட சேவை பெறுபவர், தன்னல பயன்படுத்தலுக்கு (exploit) ஆளாகலாம். இது அதிகார சமமின்மையால் ஏற்படுகிறது. கிராமப்புற சூழலில் வேலை புரிபவர்கள், அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் வேலை செய்பவர்களுக்கு, இத்தகைய ஆபத்துகள் இருக்கின்றன. இப்படியான இரட்டை உறவு சந்தர்ப்பங்களை தவிர்ப்பது சேவை வழங்குபவர்களின் பொறுப்பாகும். காரியாலயத்தை விட்டு சேவை பெறுபவரை வேறு இடத்தில் சந்திப்பதோ, அவரை வேலைக்கு அமர்த்துவதோ, வியாபார முயற்சிகளை அவர்களோடு இணைந்து செய்வதோ, அல்லது ஒரு குடும்பத்தவரை, நண்பரை, சேவை பெறுபவராக ஏற்றுக்கொள்வதோ, இப்படியான இரட்டை உறவுகளுக்கு உதாரணமாகும்.

சேவை பெறுபவரிடமிருந்து சில தேவைகளை பூர்த்தி செய்ய எண்ணுவதும் எல்லைமீறலாகும். இது, குழந்தை பராமரிப்பாகட்டும், அல்லது, நான் கேள்விப்பட்டது போல், வீடியோ படங்கள் பெற்றுகொள்வதாகட்டும், அல்லது, சேவை பெறுபவர் செய்யும் தொழிலை (உதாரணமாக, மின்சார தொழில் நிபுணர் என்றால்) தம் வீட்டில் செய்ய கேட்பதாகட்டும், எல்லாமே, சம்பந்தப்பட்ட சேவை வழங்குபவர் தொழில்தர்மம் தவறியதையே காட்டும்.

### நண்பர்களாதல்

சேவை வழங்குபவர்கள், சேவை பெறுபவர்களுடன் தோழமை கொள்ளல் தொழில் சார் ஒழுக்கவியலுக்கு மாறானது. ஒருவர் சேவை பெறுவதை நிறுத்திய பின், அவரோடு தோழமை கொள்வது ஒழுக்கவியல் மீறலாகாது எனினும், சேவை வழங்குபவர்கள் தீர ஆலோசித்து இத்தகைய முடிவுகளை எடுக்கவேண்டும். ஏனெனில், அதிகார சமமின்மை அந்த தோழமையில் தொடரலாம். சில சந்தர்ப்பங்களில், சேவை வழங்குபவர், சேவை பெறுபவரோடு ஒரு வெளி இடத்திற்கு செல்லலாம். அவர் திருமணத்துக்கு அல்லது இன்னொரு வைபவத்துக்கு செல்ல முடிவெடுக்கலாம். எப்படி இருப்பினும், தொடர்பு, தொழில் சார்ந்தும், சேவை சார்ந்தும் இருக்க வேண்டுமே ஒழிய, நட்பாக அல்லது பாலியல் ரீதியாக வளர இடம் கொடுக்கக்கூடாது. இது மீண்டும், சேவை வழங்குபவர் பொறுப்பாகும்.

தற்சமயம் சேவை பெற்றுக்கொண்டிருக்கும் ஒருவரை தொடர்பு வைப்பது (dating) என்பது பாலியல் வன்முறை (sexual abuse) என்ற வரை விலக்கணத்தில் அடங்குகிறது. உளநல நிபுணர்கள் ஒழுக்கவியல் சட்டம், ஒரு சேவை பெறுபவர் தொடர்பு முடிந்து இரண்டு வருடம் வரை அந்த சேவை பெறுபவருடன் சந்திப்பதை (dating) உளநல நிபுணர் எக்காரணத்தை கொண்டும் தவிர்க்க வேண்டும் என தெளிவாக சொல்கிறது. சாதாரண தொடர்பாடலும் சந்திப்பும் கூட நாளடைவில் பாலியல் ரீதியாக மாறி பாலியல் வன்முறை என்ற பதத்திற்குள் அடங்கி விடலாம் என்பதை மறந்துவிடக்கூடாது.

தீர்மானிக்கப்பட்ட வழமைக்கு ஒப்ப நடப்பது எப்பொழுதும் பாதுகாப்பானது. பொது இடங்களிலோ, சமூக இடங்களிலோ சிகிச்சையை அளிப்பது, சிகிச்சைக்குரிய கட்டணத்தை அறவிடாமல் விடுவது போன்றவை, தேவை கருதி தவிர, தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களாகும். அதே போல், வீட்டு காரியாலயம் வைத்திருக்கும் சேவை வழங்குனர்கள், தம் வீட்டிற்கும் காரியாலயத்திற்கும் இடையில் தெளிவான எல்லைகளை பராமரிக்க வேண்டும். சந்திப்புகளை (appointments) வேலைநேரம் அல்லாத சந்தர்ப்பங்களில் வைப்பதோ, யாரும் இல்லாத நேரங்களில் வைப்பதோ, தவிர்க்கப்பட வேண்டும்.

### தொடுதல்!

சில பரிசோதனைகள் அல்லது சிகிச்சை வழிமுறைகளுக்கு, நோயாளியை அல்லது சேவை பெறுபவரை தொடவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில், சேவை வழங்குபவர், விடயத்தை உங்களுக்கு விளக்கி உங்கள் அனுமதி பெறுவார். தம் ஆதரவை வெளிப்படுத்தவோ, ஊக்கத்தை கொடுக்கவோ, முதுகை தொடுவது, கை குலுக்குவது, அல்லது மென்மையாக அரவணைப்பது, சில சேவை வழங்குபவர்களின் சாதாரண பழக்கமாக இருக்கலாம். ஆனால் இத்தகைய தொடுதல் அசௌகரியமாக படுமாயின், சேவை பெறுபவராக, அதை தெளிவாக சம்பந்தப்பட்ட சேவை வழங்குனரிடம் தெரிவிக்கவேண்டும். அல்லது இன்னொருவரை பாதுகாப்புக்கு அருகாமையில் வைத்துக்கொள்ளலாம். தேவையின்றி விடயங்களை சந்தேகத்தோடு பார்க்கத்தேவையில்லை. ஆனால் தொடுதல் அசௌகரிய மாகவோ, பிழையாகவோ படுமாயின், அது பாலியல் வன்முறை நடைபெறுவதன் அறிகுறியாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஒரு துறைசார் உடல் உளநல பராமரிப்புக்குரிய தொடர்பு பாலியல் படுத்தப்படுவது சட்டத்துக்கு முரணானது. அப்படியிருந்தும் துறைசார் நிபுணர்களுக்கு எதிரான பாலியல் புகார்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. எந்தவகை சேவையாக இருப்பினும், முக்கியமாக, உடல் உளநலம் சார் சேவை பெறுபவர் எனில், நீங்கள் ஒரு ஊறுபடுத்தத்தக்க நிலையில் இருக்கலாம். உங்கள் உரிமைகளை, பாதுகாப்பை, கவனத்தில் கொள்ளுங்கள். உங்களை பிறர் பயன்படுத்தும் நிலைக்கு இடம் கொடுக்காதீர்கள். துறைசார் ஒழுக்கவியலால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றால், அந்த துறைசார் COLLEGES ஐ அணுகி புகார் கொடுப்பதன் மூலம் உங்களுக்கு நியாயம் கிடைக்க முயற்சி செய்யுங்கள். அதே சமயம், உங்களை போல் பிறர் பாதிக்கப்படுவதையும் இதன் மூலம் நீங்கள் தடுக்கலாம்.




# நான் யார்?, எனக்குள் என்ன இருக்கின்றது?

**(கேள்வியாயும்....உண்மையாயும் ஒரு தேடல்)**

ஏலையா க.முருகதாசன்




**இந்துக்களால் வணங்கப்படும் விநாயகப்பெருமான் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பூமிக்கு வந்த வேற்றுக்கிரக வாசியா?**

## சித்தர்கள், யோகிகள்,

தமிழர்களின் வரலாற்றில், மிக மிக நெடுங் காலமான பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களுக்கு அவர்களின் எதிர்காலம் பற்றிய வழிகாட்டுதலை தீர்க்கதரிசனத்துடன் வாழ்க் கைக்கு தேவையான மூலக்கூறுகளை கூறிய வர்கள் சித்தர்களும் யோகிகளுமே.

தொடராகச் சிந்தித்தார்கள் இடைவிடாது சிந்தித்தார்கள்.

அவர்களின் சிந்தனை எண்ணிலடங்காத தூரம் வரை பயணித்தது. பூமித்தரையிலும் பிரபஞ்ச என்ற வானிலும் அவர்களின் சிந்தனை பயணித்தது. பூமி போன்ற கோடிக் கணக்கான கிரகங்கள் உண்டென்பதையும் அவைகளில் உயிரினங்கள் வாழுகின்றன என்பதையும்,



அந்த உயிரினங்கள் பூமியிலிருந்து மிக மிக நெடுந்தூரத்தில் வாழ்கின்றன மெய்ஞானத்தின் மூலம் கண்டறிந்தவர்கள் சித்தர்களும், யோகிகளுமே. தம்மோடு பூமியில் வளர்கின்ற புல், பூண்டு, செடி, கொடி என்றும் பூச்சி, புழுக்கள், விலங்குகள் போன்றவற்றையும் உற்றுக் கவனித்தார்கள்.

தமிழர்களின் குழும வாழ்க்கை முறைமைக் குள்ளும், தனிமனித நிலையொட்டியும் அவர் களுக்கு தேவையானவற்றை ஒரு பிரச்சார முறைமூலம் சித்தர்களும் யோகிகளுமே மேற் கொண்டனர். இன்று படிப்படியான படிமுறையின் வளர்ச்சியாக சமுதாய வழிகாட்டியாக, காலம் காலமாக பெற்றுக் கொண்ட அறிவின் காரணமாக அறிஞர்களின் அறிவுரைகள், நூல்கள், தொடர்பாடல்கள் ஊடகங்கள், அரசாங்கங்கள் இருந்து வருகின்றன. ஆனால் அன்று அப்படியல்ல. சித்தர்களும் யோகிகளுமே சமுதாய வழி காட்டிகளானார்கள். இவர்களுக்கு இத்தகு ஆற்றல் எப்படி ஏற்பட்டது. இவர்கள் யாரிடமிருந்து இத்தகு அறிவினை காலத்தை ஊடுருவிப் பார்க்கும் ஞானத்தை பெற்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

சித்தர்களும், யோகிகளும் பூமி வாழ் மாந்தரல்லாத வேற்றுக்கிரக வாசிகளை சந்தித் தார்களா அல்லது ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதியென்ற பிரபஞ்சம் நோக்கி „இது என்ன இதற்குள் சுழல்பவை எவை எனச் சிந்தித்தார்களா என்ற தேடல் எழுகின்றது.

சித்தர்களும், யோகிகளும் „ ஏன்?, எதற்கு?, எப்படி?, அது என்ன?, இது என்ன?, அதில் என்ன இருக்கின்றுது?, இதில் என்னு இருக்கின்றது?“ என ஆராய்ந்தார்கள்,

இவைகளினால் மனிதர் களுக்கு என்ன பயன் கிடைக்கும் எனச் சிந்தித்தன் விளைவே, மனிதர்களுக்கு ஏற்பட்ட நோய் களுக்கான மருந்துகளுக்கான தேடுதலை நோக்கிய தேடலுக்கு சித்தர்களையும் யோகி களையும் இழுத்துச் சென்றது. மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு மருந்துகளை கண்டறிவ தற்காக புல், பூண்டு, செடி, கொடி, மரம் போன்ற வற்றின் அனைத்துப் பகுதிகளையும் பரீட்சித்துப் பார்த்து அறிந்தார்கள். பூச்சி, புழுக்கள், மிருகங்கள், பறவைகள் போன்றவற்றையும் தமது பரீட்சார்த்தத்திற்கு பயன்படுத்தினார்கள்.

காடுகளில் விளைந்து வளர்ந்த பல புல், பூண்டு, செடி, கொடி, மரங்கள் போன்றவற்றின் பகுதிகள் காலப் போக்கில் மனிதன் பயன்படுத்தும் தாவர உணவாக மாறியது.

மருந்துகளை மட்டும் சித்தர்கள், யோகிகள் ஆராய்ந்தார்கள் என்றில்லை. உடல் என்பது மிகப் பெரிய விசை, இந்த உடலியக்கமே உலகை இயக்க வைக்கின்றது. பூமியில் தோன்றிய மனித உயிரினத்தில் மிகப்பெரும் அபாரசக்தி உண் டென்பதைக் கண்டறிந்த அவர்கள் அவை எங்கே உறங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைத் தேடினார்கள்.

சித்தர்கள், யோகிகள் தமக்குள்ளேயே முதலில் தேடினார்கள். நான் யார்?, எனக்குள் என்ன இருக்கின்றது? நான் எப்படி எதனால் இயக்கப் படுகின்றேன் என தமக்குள் தன்னையே தேடினார்கள். அந்தத் தேடலின் முடிவில் மனமே இயக்கவிசை என்பதை, ஞானத்தின் வழியாக அறிந்தார்கள்.

உடலின் ஒவ்வொரு உறுப்புகளுக்குள்ளும் அணுசக்திவிசையே உறங்கிக் கொண்டிருப்பதை அறிந்து அதனை உலகிற்கு அளித்தவர்கள் சித்தர்களும் யோகிகளுமே.



சித்தர்களினதும், யோகிகளினதும் ஆற்றல்களுக்கு அவர்கள் தம்மைத் தாமே அறிந்துணர்ந்தமைக்கு அவர்கள் மட்டுந்தான் காரணமாக அல்லது வேறு யாராவது என்ற வேற்றுக் கிரக உயிரினங்களின் தரிசனம், உதவிகள் கிடைத்தனவா என்ற கேள்வித் தேடலின் பெறுபேறாக வேற்றுக்கிரக வாசிகள் பூமிக்கு வந்திருக்கக்கூடிய சாத்தியம் உண்டென்பதே உண்மை. வேற்றுக்கிரக மனிதர் களின் உடல் வடிவத்தைக் கொண்டவர்களாக இல்லாதவர்களாக மிகுந்த ஆற்றல் படைத் தவர்களாக, உயிர்களையே உருவாக்கும் ஆற்றல் படைத்தவர்களாக இருந்தார்களா என்பதும் அவர்கள் பூமி மனிதர்களுடன் உடல் ரீதியாகவும் உறவு கொண்டதனாலேயே மனிதர்கள் ஆற்றல் மிகு உயிரினமாக தோற்றம் பெற்றார்களா என்ற கேள்வி எழவே செய்கின்றது.

இவ்வாறு பூமிக்கு வந்த வேற்றுக் கிரக வாசிகளுடன் சித்தர்கள் யோகிகள் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறன சித்தர்களின் வழித்தோன்றல்களின் பதிவுகளே உலக விஞ்ஞானத்தின் தொடர்ச் சியாகும். இன்றைய சமகாலம் என்ற நிலையில் நின்று பார்க்கும் போது, இதற்கு கோடி ஆண்டுகளுக்கு முன்பும், இதற்கு அடுத்த கோடி ஆண்டுகளுக்குப் பிறகும்கூட கோடிக்கணக்கான கோள்களில் ....

தொடர்ச்சி 29ம் பக்கம்



# நான் யார்?,

27ம் பக்கத் தொடர்ச்சி

உயிரினங்கள் வாழ்ந்தன என்பதும் வாழப் போகின்றன என்பதும் உண்மையே. அந்த உயிரினங்கள் ஒரே தோற்ற வடிவத்தைக் கொண்டவையல்ல என்பதும் உண்மையே.

வேற்றுக் கிரகவாசிகள்

பிரபஞ்சம் என்றாலே எல்லையற்றது என்பதே அதன் பொருளாகும். இந்தப் பிரபஞ்சத்தில் எண்ணிலடங்காத கோள்கள் மிதக்கின்றன என்ற உண்மையை விஞ்ஞான ரீதியாக விஞ்ஞானிகள் நிரூபித்து உலகிற்கு சொல்வதற்கு முன்னரே தமிழ்ச் சித்தர்களும் யோகிகளும் உலகிற்கு சொல்லிவிட்டார்கள்.

இவர்கள் சொன்னவற்றின் மீதான உண்மை களிலிருந்து அடுத்த கட்ட உண்மை களைத் தேடிச் சென்ற தேடலே விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

இந்தப் பூமியின் தோற்றம் எத்தனை கோடி ஆண்டுகளைக் கொண்டது என்று வரையறுக்க முடியாத நிலை உண்டு. பூமி தோன்றிய ஆரம்பித்த காலத்தை திட்டவட்டமாக எந்த விஞ்ஞானியுமே இதுவரை அறுதியிட்டுக் கூறவில்லை.

காலத்திற்கு காலம் வெவ்வேறுவிதமான அதிதூரக் காலை எல்லையை விஞ்ஞான உலகம் கூறி வருகின்றது. எனவே பூமியில் வாழ்ந்த இனங்கள் பற்றிய அதிதூரகால எல்லையையும் வரையறுக்க முடியாததே.

டைனசோர் காலத்திற்குப் பின்னரே பூமியில் மனித இனம் தோன்றியதாகவும் மற்றைய உயிரினங்கள் தோன்றியதாக விஞ்ஞான உலகம் கூறிவருகின்ற போதிலும் எதிர் காலத்தில் டைனசோர் காலத்திற்கு முன்னரே மனித உயிரினம் தோன்றியது டைனசோருடன் சேர்ந்து அழிந்தது பின்னர் மனித இனம் தோன்றியது என்ற முடிவை விஞ்ஞான உலகம் கூறலாம்.

ஏன்னென்றால் இந்த விநாடிப் பொழுது வரையும் பிரபஞ்சப் பகுதியிலிருந்து புதிய புதிய கோள் களை விஞ்ஞானம் கண்டுபிடித்து வருவது மட்டுமல்ல அற்றின் சிலவற்றில் உயிரினங்கள் வாழ்ந்தன என்றும் இனிமேல் உயிரினங்கள் தோன்றக்கூடிய வாய்ப்பு உள்ளது என்று விஞ்ஞான ஆய்வுகள் கூறிவருகின்றன.

இதனடிப்படையில் விஞ்ஞான உலகம் இன்று வரை கண்டுபிடித்த கோள்களின் தூரத்திற்கு அப்பாலும் அதற்கப்பாலும் கோள்கள் உண் டென்பதும் அங்கு உயிரினங்கள் உண் டென்பதும் அங்கு வாழ்ந்த உயிரினங்கள் மனித உயிரினங்களைவிட ஆற்றல் உடையவர்களாக இருந்து பூமிக்கு வந்து போயிருக்கலாம் என்பதும் உண்மையாகலாம்.

அந்த உயிரினங்கள் மனித உயிரினத்தின் தோற்றத்தைக் கொண்டவையாகத்தான் இருந் திருக்கின்றன என்று கூறமுடியாது.

இந்தத் தேடலின் மூலமாக இன்று வழக்கத்தில் உள்ள விநாயகர் வழிபாடு, பலதலைகொண்ட நாகங்களின் சிலை வழிபாடு சிந்திக்க வைக் கின்றது. விநாயகரை முதல் வணங்க வெண்டிய தெய்வமாக ஏன் கொள்ளப்பட்டது என்பதைச் சிந்திக்க வேண்டியுள்ளது. விநாயகர் வழி பாட்டின் போது மூன்றுமுறை குட்டி, வலது கை விரல்களால் இடது காதின் கீழ்ப்பகுதியான சோணையையும் - இடது கைவிரல்களால் காதின் கீழ்ப்பகுதியான சோணையைப் பிடித் தபடி இருந்தெழும்பவதின் பின்னணியில் மூளை நரம்புகளை உற்சாகப்படுத்தல் என்ற வேதியல் செயல் இருக்கின்றது.

விநாயகரின் உருவமும் அவரை வணங்குகின்ற அறிவியல் வணக்க நிலையும் ஆற்றல்மிகு ஒரு உயிரினம் எத்தனையோ இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே வேற்றுக் கிரகத்தி லிருந்து வந்த விநாயகராலேயே சித்தர் களுக்கும் யோகிகளுக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

சித்தர்களும் யோகிகளும், அதற்குப் பின்னரான நாயன்மார்கள்கூட இறைவன் அவதரித்ததைக் கண்டேன் என்று கூறியிருக்கின்றனர். அதே போல்தான், பழைய புராதன தொல்பொருள் ஆராய்ச்சிகளின் மூலம் இந்தியா இலங்கை உட்பட தென்னமெரிக்க நாடுகளில் அகழ்ந்தும் கண்டெடுக்கப்பட்ட கண்டெடுக்கப்பட்டுக் கொ ண்டிருக்கின்ற கற்பாறைகளில் பாம்பின் தோற்றம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே பாம்பையொத்த வேற்றுக்கிரக வாசிகள் பூமிக்கு வந்திருக்கக்கூடிய சாத்தியமும் உண்டுதான்.

மில்லியன் ஆண்டுகளுக்கு முன் மனிதன் வாழ்ந்தான் என்பதற்கான ஆதாரங்களும் வந்து கொண்டு இருக்கின்றது.

நாங்கள் வணங்குகின்ற தெய்வங்கள் வெறும் கற்பனையானவையல்ல அவை அவதாரங்கள்.

## கிட்ட முட்ட மில்லியன் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த மனிதனின் பாதச்சுவடுகள்!!!



அண்மையில் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட 800,000 ஆண்டுகள் பழமையான மனிதனின் பாதச்சுவடுகள்

An undated photo issued by the British Museum Friday Feb. 7, 2014 shows some of the human footprints, thought to be more than 800,000 years old, found in silt on the beach at Happisburgh on the Norfolk coast of England, with a camera lens cap laid beside them to indicate scale.


சேவைகளுக்கான விபரங்கள்!!!

ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



தினசரி மாலை 6.00 மணிக்குப் பூஜை உண்டு

துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304/ 16721
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Robert koch Str.5
58239 Schwerte

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

லூர்ட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்
April june july Aug மாதங்களில்



உணவு, தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.
எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேர்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூர்ட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
இத்தாலிக்கும் செல்லலாம்.
தொடர்புகள்:
K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் - யேர்மன்
யேர்மன் - தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

Bielefeld நகரில்....
Sahanan Video
Video& Foto



உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளையும் மிகத் துல்லியமாகவும் அழகாகவும் படம்பிடித்து தருகின்றோம்.
K.Ravi
Tel:0521 42 86 528
Möbil:0177-191 21 28
e-mail:sahananvideo@hotmail.de
Full HD& Blu-ray










சிவகாமி மணவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Handy: 152 138 22 350

# மெலிந்த உடலெனும் மோகம்!



இளைய அப்துல்லா

சுவிற்சலாந்துக்கு அண்மையில் போனபோது எனது நண்பன் ஒருவனின் வீட்டுக்கும் போனேன். இவர் எனது நீண்டகால நண்பர்.

நீண்ட காலத்திற்குப் பிறகு இரண்டு பேரின் குடும் பங்களும் சுவிற்சலாந்தில் சந்தித்து மகிழ்ந்து போனோம்.

அவருக்கு ஒரு மகள். வயது ஆறு. நண்பரின் மனைவியின் பிரச்சினை என்ன வென்றால், ஆறு வயது மகள் சோறு சாப்பிடுகிறாள் இல்லை என்பது. இது ஒரு பெரிய கவலை அவவுக்கு."ஏனடி சோறு சாப்பிடுகிறாய் இல்லை" என்றால் சோறு சாப்பிட்டால் குண்டாகி விடுவாளாம். இப்பவே முருங்கைக் காய் மாதிரி இருக்கிறாள்.

சோறினைத் தொட்டுக்கூடப் பார்க்கமாட்டாள். காலையில் சலட், பகலுக்கு சலட், இரவுக்கும் சலட். இப்படி சலட்டை மட்டுமே சாப்பிடும் ஒரு மனிசியாக அவள் மாறிவிட்டாள்.அவள் படிக்கும் பாலர் பாடசாலையில் பிள்ளைகள் கூடிப் பேசும்போது யாரோ சுவிஸ் நாட்டுப் பிள்ளை சொல்லிவிட்டது.

சோறு சாப்பிட்டால் உடம்பு குண்டாகிவிடும் என்று.அதனை அப்படியே பிடித்து வைத்துக் கொண்டு அவள் அடம் பிடிக்கிறாள். அவளுக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவனையும் சொல்லி சொல்லி சோறு சாப்பிடாமல் பண்ணிவிடுவாளோ இவள் என்று அம்மாவுக்குக் கவலை.

எனக்கெல்லாம் மூன்று நேரத்தில் ஒரு நேரம் சோறு உள்ளிறங்க வேண்டும். ஊர்க் குத்தரிசியை நினைத்தால் இன்னும் நாவில் நீர் ஊறுகிறது. அதன் மணமும் குணமும் தனி. கொழும்பில் இருக்கும்போது சிறி கதிரேசன் ரோட்டில் இருக்கும் யாழ்ப்பாணம் சாப்பாட்டுக் கடையில் குத்தரிசி சோறும் மீன் குழம்பும் சாப்பிட்டது இன்னும் ருசி அடி நாக்கில் ஒட்டிக் கொண்டி ருக்கிறது. இப்பத்தைய பிள்ளைகள் சோறை வெறுக்கிறார்கள். அளவாக சாப்பிட்டு உடம்பை "சிக்" என்று வைத்திருப்பதைவிட்டு விட்டு "டயட்" என்ற பெயரில் உடம்பை பாரமில்லாமல் ஆக்குகிறார்கள். அதனால் பல நோய்கள் அண்டும் ஆபத்து இருக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியைப் பற்றி கவலைப்படாமல் உடலை மெலிய வைப்பதில் மட்டுமே ஆர்வம் கொள்கின்றனர்.

மெலிந்த இடை, பெரிய மார்பு, ஒல்லியான உடல்வாகு என்ற நிலமைதான் மேற்குலகில் பெண்கள் மத்தியில் உள்ள வாய்ப்பாடு. ஆனால் எமது ஊர்ப் பிள்ளைகள் இந்த மூன்றையும் அடைவதற்கு ஆலாய்ப் பறக்கிறார்கள். இந்திய, இலங்கை ஆண்களுக்கு கொஞ்சம் குண்டான, மார்பு பெருத்த பெண்களைத்தான் பிடிக்கிறது. சினிமாவிலும் பாருங்கள். நமீதா, முன்பு குஷ்பு என்றுதான் ரசிக ஆண்கள் இருக்கிறார்கள். டயட் டயட் என்று உடலை மெலிய வைப்பது மட்டுமில்லாமால் வளரும் இளம் பெண்கள் மிகவும் ஆரோக்கியம் பேணவேண்டும். அதோடு சத்தான உணவும் சாப்பிடவேண்டும். இல்லாவிடில் அவர்களின் உடலுக்கு பேரிடர் வந்துவிடும்.

உடம்பும் மெலிந்து இருக்கவேண்டும். ஆனால் சுறு சுறுப்பாகவும் இருக்கவேண்டும் என்பதே வைத்தி யர்களின் ஆலோசனை.

இளைய பெண்களே 17 வயதில் உங்கள் எலும்புகள், தோல், உயரம், வளர்ச்சி கிட்டத்தட்ட இறுதிக் கட்டத்திற்கு வருகிறது. ஆகவே இந்தக் காலங்களில் நல்ல சத்துள்ள உணவுகளை உண்ணவேண்டும்.

பெண்களைப் பொறுத்தமட்டில் உடலின் கொழுப்புச் சத்து மிகவும் முக்கியம். அதாவது இனப்பெருக்க உறுப்புக்கள் அமைப்பாக வளர்வதற்கு மிகவும் முக்கியம். இளம் பெண்கள் (நான் சொல்வது 13 முதல் 17,18 வயது வரையானோர்) மெலிதாக இருக்கவேண்டும் என்பதற்காக சரியான சாப்பாடு சாப்பிடாமல் இருக்கிறார்கள்.

இது சாதாரண விடயமல்ல. சரியான சாப்பாடு சாப்பிடாமல் விட்டால் முதலில் பூப்பெய்தலில் பிரச்சினை ஆரம்பிக்கும், பிறகு மாதவிலக்குப் பிரச்சினைகள் ஏற்படும். சரியான சத்துணவுகளை சாப்பிடாமல் விடுவதன் காரணமாக இரும்புச் சத்தும் கல்சியமும் உடம்பில் குறைந்து பெரும் பிரச்சினைகள் ஏற்படும்.

வளரும் பிள்ளைகளினுடைய ஒவ்வொரு நாள் சக்திக்கும் 2500 கலோரி தேவை. இது குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மாச்சத்து ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொள்ளவேண்டும். அரிசி அல்லது கோதுமை மாப்பண்டங்கள் நல்லது. இதில் 10 முதல் 12 வயதுடைய பிள்ளைகள் நாளொன்றுக்கு 320 கிராம் வரை சாப்பிடவேண்டும்.

13 முதல் 15 வரையான பிள்ளைகள் 350 கிராம் அளவில் சாப்பிட வேண்டும். அதற்காக தினமும் தராசு வைத்து நிறுத்துக்கொண்டிருக்கத் தேவை யில்லை. ஒரு நாள் அளவு பார்த்தால் தினமும் அந்த அளவு சாப்பிடலாம்தானே. பருப்பு, பயறு வகைகள் தினமும் 70 கிராம் சாப்பிட வேண்டும். அப்பொழுதுதான் புரதம் கிடைக்கும். இறைச்சி, மீன் ஒவ்வொரு நாளும் ஒரு பெரிய துண்டு அதாவது 60 கிராம் அளவில் சாப்பிட வேண்டும். மரக்கறிக்காரர் என்றால் பட்டாணிக்கடலை 50 கிராம் சாப்பிடுங்கள். கட்டாயம் 10 முதல் 18 வயதுள்ள சிறுமிகள் நாளொன்றுக்கு ஒரு லீற்றர் பால் குடிக்கவேண்டும். ஒரு நாளைக்கு நான்கு கிளாஸ் பால் குடியுங்கள். அது ஒரு லீற்றர் பாலுக்கு சமனாகிவிடும். ஒவ்வொரு நாளும் உணவில் கீரை சேர்க்க வேண்டும்.

பப்பாசிப்பழம், மாம்பழம், வாழைப்பழம் தினமும் சாப்பிடுங்கள். இது எங்கள் ஊர்களில் கிடைக்கும். அலட்சியப்படுத்தக்கூடாது. புளிப்புள்ள பழங்கள் சாப்பிடலாம். அதில் விற்றமின் சி கிடைக்கும். ஆகவே உடல் மெலிந்து போக சாப்பிடாமல் பட்டினி கிடந்து ஒன்றும் ஆகப்போவதில்லை. நோ யெதிர்ப்பு சக்தியைக் கூட்டவேண்டும். அல்லது நோய் வந்து அதனை மாற்ற முடியாமல் அவதிப்படுவீர்கள்.எங்கள் அலுவலகத்தில் ஒரு பெண்மணி. கலியாணம் முடிக்கிற வயது. உடல் மெலிந்து இருக்கவேண்டும் என்பதற்காக காலை யில் சாப்பிடமாட்டா. சாப்பிட்டாலும் ஒரே ஒரு பாண் துண்டு. பகலுக்கு சூப் மட்டும் குடிப்பா. அதுவும் கடையில் விற்கின்ற உடனடி சூப் பக்கற்றை வாங்கி வந்து தண்ணியில் சூடாக்கி குடிப்பா. இரவு சாப்பிடுவதில்லை."நல்லா சாப்பிடு உடம்பு போய்விடும்" என்று எங்கள் ஒபிசில் உள்ளவர்கள் ஒரே சொல்லிக் கொண்டிருப் பார்கள். அவ ஒரு சிரிப்போடு போய்விடுவா. வயிறு உள்ளேபோய் அழகாகத்தான் இருந்தா. ஆனால் வந்தது ஒரு நோய். துவண்டு வழுந்துவிட்டா.


அந்த நோயிலிருந்து இன்னமும் மீளவே இல்லை.

தொடர்ச்சி 30 ம் பக்கம்



# மெலிந்த உடலெனும்....!

29ம் பக்கத் தொடர்ச்சி



வயிற்றில் புண் வந்துவிட்டது. கை நடுக்கம், வாந்தி என்ன உணவை இப்பொழுது சாப்பிட்டாலும் உடனடியாக வயிற்றாலை போய்விடும்.

ஒரு சிறங்கை மருந்து உட்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துவிட்டா இப்பொழுது. தோடு இன்டர்நெற்றில் போய் தனக்கு என்ன வருத்தம் என்று வெப் சைட்டுக்களில் தேடி இருக்கிறா.

அவ ஏற்கனவே மனது பலவீனம் உடையவா.

வெப் சைட்டில் அவவினது வருத்தத்திற்குப் பெயர் தெரியாத நோய்கள் எல்லாம் இருக்கிறது என்று எழுதியிருக்கிறதைப் பார்த்துவிட்டு இப்பொழுது மனப் பிரமை பிடித்தவ மாதிரி இருக்கிறா.

"இன்டர்நெற்றில் போய் நோய் அறிகுறிகளைத் தேடுவதை நிறுத்து", என நான் ஏசினேன். வெப் சைட்டில் பொதுவான அறிகுறிகளும் நோயும்தான் போட்டிருப்பார்கள். அது அப்படியே இருக்கும் என்று உடனடியாக நம்புவது மடத்தனம். எனது நண்பன் ஒருவனுக்கு இரவுக் காய்ச்சல். தொடர்ச்சியாகவே இருந்தது. இதற்கு இங்கே லண்டனில் வைத்து மருந்து எடுத்தான். அவனின் மனிசி வெப்சைட்டில் போய் இரவுக் காய்ச்சல் என்ன நோய் என்று தேடினால் அது கான்சருக்கான அறிகுறி என்று இருந்தது. மனிசி குழம்பி, நண்பர் குழம்பி தனக்கு கான்சர் என்று அழுது இப்படி அல்லாடிக் கொண்டிக்கும்பொழுது குடும்ப வைத்தியர் ஏசி அனுப்பியிருக்கிறார். முதலில் வெப் சைட்டில் நோய் அறிகுறியை வைத்துத் தேடுவதை நிற்பாட்டச் சொல்லி. யாருக்குத்தான் செத்துப்போக விருப்பம். கான்சர் என்று பயந்தவன் தற்போது உசாராகி வேலை செய்கிறான். லண்டனில் ஒரு பெண்மணி தனது மகன் மெலிந்துபோய் இருக்கிறான் என்று வெப் சைட்டில் போய் தேடி மருந்துகள் வாங்கிக் கொடுத்தா. அவன் இப்பொழுது குண்டாகி குண்டாகிக் கொண்டு வருகிறான். ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது. இப்பொழுது அந்தப் பெண் தலையிலடித்துக்கொண்டிருக்கிறா.

டொக்டர்கள் கையை விரித்துவிட்டார்கள்.மகனின் உடல் பருத்துக்கொண்டே வருகிறது. இது அவனுக்குப் பேராபத்தை விளைவிக்கப்போகிறது. உலகம் முழுவதும் இளம் பெண்கள் மெலிந்த தோற்ற முள்ளவர்களாகவே இருக்க விரும்புகிறார்கள். அதற்கு சரியான போதுமான உணவு, நடைப்பயிற்சி, தேகப்பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்கிறார்களில்லை.

வெறுமனே இலகுவான முறை என்று சாப்பாட்டை ஒதுக்குகிறார்கள். இது பெரிய பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். எமது சிலோன் பெண்கள் கலியாணம் முடிக்கும்வரை எலும்பும் தோலுமாக இருப்பார்கள். மெலிந்து துடி இடையோடு இருப்பார்கள்.

என்ன, மாயமோ மந்திரமோ கலியாணம் முடிந்து ஒரு பிள்ளை பெற்றவுடன் குண்டாகிப் பருத்து விடுவார்கள். ஆனால் வெள்ளைக்காரர் ஐந்து, ஆறு பிள்ளைகளைப் பெற்றாலும் அதே மெலிவாகத்தான் இருக்கிறார்கள். உடல் என்பது கைக்குள் வைத்து பாதுகாப்பவேண்டிய பொக்கிசம். அதனை சீரழிய விடக்கூடாது."சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்" என்பது உடலைப் பொறுத்தவரை பொய்யானதல்ல

## 13 வது ஆண்டு நினைவுப் பூக்கள்!

மலர்வு: 12.05.1988

பிரிவு: 16.03.2001



**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)

அன்பான கஜனி!
ஆண்டுகள் பதின்மூன்று ஆயிற்று
இன்றோடு!
ஆனாலும் அம்மா! நீ வாழ்கிறாய்
எம்மோடு!

மழலையாய் வந்தெங்கள்
கரங்களில் தவழ்ந்தவளே!
மங்கையாய் உருவெடுத்து
மலர்ந்து சிரித்தவளே!
எழிலுருவை மறைத்தெங்கள்
இதயமெல்லாம் தவிக்கவிட்டு
எங்கோ நீ மறைந்தாலும்
இழப்போமா நாம் உம்மை!
என்றும் நினைத்திருப்போம்
எமதுயிரே! உனக்காக
இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.
எமதன்பே சாந்தி பெறு!

உனது பாச நினைவுகளோடு-
அம்மா, அப்பா, அக்கா, அத்தான்

S.Thevarajah (U.K.)


# Milin Impex GmbH

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

ஜேர்மனியில் தலைமுறை,
தலைமுறையாக
தரமான ஆசிய, ஆபிரிக்க
உணவுப் பொருட்களின்
இறக்குமதியாளர்களும், மொத்த,
சில்லறை விநியோகஸ்தர்களும்.

தமிழ் புத்தாண்டை
சிறப்பிக்க வேண்டிய
அனைத்து
பொருட்களுக்கும்
நாடுங்கள்

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்தை நாடுங்கள்.

Web :www.milinimpex.de





Milin Impex

Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Mail:info@milinimpex.de




## பாலா அழைத்தால் அப்பிடி என்ன பயம் நடிகைகளுக்கு!





டைரக்டர் பாலாவின் படங்களில் நடித்தால் நம்மை பட்டை தீட்டி விடுவார் என்று ஹீரோக்கள் நினைக்கிறார்கள். அதற்கு அடையாளமாக விக்ரம், சூர்யா, ஆர்யா, விஷால், அதர்வா போன்ற நடிகர்களை செ□ல்லலாம். அவர் படத்தில் நடித்த பிறகுதான் இவர்கள் அங்கீகரிக்கப்பட்ட நடிகர்கள் ஆனார்கள் என்பதே உண்மை.




அதேசமயம் பாலாவின் படங்களில் நடித்த ஒரு கதாநாயகிகூட சினிமாவில் ஜொலிக்கவில்லை. சேது படத்தில் அறிமுகமான அபிதா அதன்பிறகு இரண்டொரு படங்களில நடித்தவர் பின்னர் சின்னத்திரைக்கு சென்று விட்டார். அதேபோல், பிதாமகனில் நடித்த சங்கீதா-லைலா ஆகிய இருவருக்கும் அதன்பிறகு படம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டனர்.

அதேபோல், நான் கடவுளில் நடித்த பூஜாவுக்கும் மார்க்கெட் சரிந்தது. அதையடுத்து, அவன் இவனில் ஜனனி அய்யர், மது ஷாலினி ஆகிய இருவரும் நடித்தனர். இவர்களில் மது ஷாலினியை அதன்பிறகு காணவில்லை. ஜனனி அய்யர் மட்டும் கஷ்டப்பட்டு தாக்குப்பிடித்து வருகிறார். அதேபோல், பரதேசியில் நடித்த வேதிகாவுக்கும் பெரிய அளவில் எதிர்காலம் இருப்பதாக தெரியவில்லை.

இதனால் தற்போது பாலா இயக்கவிருக்கும் படத்தில் நடிக்க, மார்க்கெட்டில் இருக்கும் முன்னணி நடிகைகளை தொடர்பு கொண்டபோது யாருமே சிக்கவில்லையாம். ஹீரோக்களுக்கு செண்டிமென்டாக ஒர்க்அவுட்டாகும் பாலா, எங்களுக்கு ஒர்க்அவுட ஆவதில்லையே என்று எஸ்கேப்பாகி விட்டார்களாம். அதனால்தான், படமே இல்லாமல் இருந்த ஸ்ரேயாவை மீண்டும் கொண்டு வந்துள்ளார்களாம். பாலாவின் மீது விழுந்துள்ள இந்த செண்டிமென்டை ஸ்ரேயா மாற்றியமைப்பாரா? பொறுத்திருந்து பார்ப்போம்..



## தோழி காதலி ஆகலாம், காதலி தோழி ஆக முடியுமா?



நிஜத்தில் சாத்தியமில்லாத இது, சினிமாவில்தான் சாத்தியமாகும். இப்போது, சினிமாத்துறையிலும்.... முன்னாள் காதலியான நயன்தாரா உடன் 'இது நம்ம ஆளு' படத்தில் நடிக்கும் சிம்பு, 'நயன்தாராவை என் தோழி' என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார்.

விரைவில் இன்னொரு நடிகரும், இன்னொரு நடிகையை தோழி என்று சொன்னாலும் ஆச்சர்யமில்லை.

அவர்..பத்மபூஷன் கமல்ஹாசன்...!

சிம்ரன்... ஒரு காலத்தில் தமிழ் சினிமாவில் பரபரப்புக் கிசுகிசுக்களுக்கு பஞ்சம் வைக்காத ஜோடி. குறிப்பாக பஞ்ச தந்திரம் உருவான நாட்களில், தினம் ஒன்றல்ல.. பத்து கிசுகிசுக்கள் வரும் இந்த இருவர் பற்றியும்.



த்ரிஷ்யம் படத்தில் மீனா மோகன்லால் இயல்பான நடிப்பு. கமல் - சிம்ரன் மீண்டும் நடிப்பதும் ஒரு கலக்கலாக இருக்கலாம்.

பின்னர் இருவருக்கும் ஒட்டு மில்லை உறவுமில்லை என்றா கிப்போனது.

சிம்ரன் திருமணமாகி குழந்தை பெற்று மீண்டும் நடிக்க வந்துவிட்டார். கமலும் தன் காதல் இளவரசன் பட்டத்தை ஆரியாவிற்கு விட்டுக் கொடுத்துவிட்டார்.

இந்த சூழலில் மீண்டும் சிம்ரனு டன் ஜோடி சேர ஓகே சொல்லியிருக்கிறார் உலக நாயகன்.

மலையாளத்தில் மோகன்லால் - மீனா நடித்து பெரும் வெற்றிப் பெற்ற த்ரிஷ்யம் படத்தின் தமிழ் ரீமேக்கில் கமலும் சிம்ரனும் மீண்டும் இணைகிறார்கள். சிம்ரனா நதியாவா என்று ஆரம்பத்தில் கொஞ்சம் யோசித்த கமல், கடைசியில் சிம்ரனே இருக்கட்டும் என்று கூறிவிட்டாராம்.



19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

LITTLE INDIA

*Textile & Jewellery*

அழகான ஆடைகளுக்கும் பஞ்சாபி வகைகளுக்கும் தங்க நகைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்

LITTLE INDIA

02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை

EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Rishi 0174 96 44 965



info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy

Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



ASIA BAZAR

Ria Money Transfer
MoneyGram

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய,ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும் தரும்...



Tel:0231- 7252859

CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை,இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund



ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

HP:0173 1937 325
T.Mohanadas

Jasmine Silk House

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!

15.03.2014 - 15.04.2014

என்றும் புதியன,அழகுக்கு அழகுசேர்க்கும் அற்புதமான டிசைன்களில் அழகிய சேலைகள். மங்கையர் மனம் நாடும் பஞ்சாபிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள்அனைத்தும் நிறைவான தெரிவுக்கு நம்மை நாடுங்கள்

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen

புத்தாண்டில்
புது டிசைன்களுடன்
புதிய வரவுகள்



Tel:02102 844744

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR - Impex

StaR-Impex

Asia & Afro Großhandel & Einzelhandel

6 வது ஆண்டில் உங்கள் அபிமான ஸ்தாபனம்

தரம்
அதுவே
நிரந்தரம்

கடல் உணவு வகைகள் மற்றும் பசுமையான மரக்கறிகள் வாராவாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!



மாதம்தோறும் எமது மலிவுவிற்பனையை பார்வையிட
Web.Star-impex.net



Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

StaR Impex : Inh :K.Sivasubramaniam

Mobil: 0172/2183703 - E-Mail: star-impex@live.de

Tel:0231 860 26 96 Fax: 0231/8602698